# உதயன்




30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 294 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 30 சனிக்கிழமை (15/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


## இறுதி முடிவு இன்று

கொழும்பு,செப் 15

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பதற்கு எவருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் தமது கட்சி இன்று சனிக்கிழமை இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சு நடத்தியபின்னர், அது தொடர்பில் இன்று நடைபெறவுள்ள கட்சியின் அதியுயர் பீடக் கூடத்தில் ஆராயப்பட்ட பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை முதலமைச்

பார்க்க பக்கம் 4

# படைகளை உடனடியாக குறையுங்கள் வடக்கில்

## அமெரிக்கப் பிரதிநிதி பிளேக் இலங்கையிடம் வலியுறுத்து

**கொழும்பு, செப்ரெம்பர் 15**

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைச் செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தி வடக்கில் இராணுவப் பரம்பலை உடனடியாகக் குறைக்க வேண்டும். அத்துடன், மனித உரிமை விவகாரங்களிலும் இலங்கை அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும்.**

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்க அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக்.

கொழும்பிலுள்ள அமெரிக்க மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:–

நான் மீண்டும் இலங்கை வந்

பார்க்க பக்கம் 4



**2** றொபேட் ஓ பிளேக், இலங்கையின் வடக்குப் பொருளாதார நிலை குறித்து தனது ஆர்வத்தை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்த போது வெளிப்படுத்தியுள்ளார்.

**8** தீவிரவாதிகளின் தாக்குதல் எதிரொலியால், சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு, 'கொமாண்டோ' பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

**9** லிபியாவில் பென்காசி நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலில் ஈடுபட்ட 22 பேரை லிபியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

**13** 17 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை நடைமுறைப் படுத்தாது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் நீதியான தேர்தலை எதிர்பார்க்க முடியாது.

## தஞ்சம் நிராகரிக்கப்பட்ட 300 பேரை திருப்பி அனுப்புகிறது பிரிட்டிஷ் அரசு

கொழும்பு,செப்.15

பிரிட்டனில் இருந்து தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 300 பேர் அடுத்த வாரம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனைத் தளமாகக் கொண்டியங்கும் 'த இன்டிபென்ரன்' நாளிதழ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

திருப்பி அனுப்பப்பட்டால் இலங்கையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவர் என்பதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலும் இவர்களை பிரிட்டன் குடிவரவு முகவர் நிலையம் திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்துக்குப் பின்னர் இரண்டாவது தடவையாக பெருந்தொகையினர் இவ்வாறு திருப்பி அனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் 50 தமிழர்களை திருப்பி அனுப்ப பிரிட்டிஷ் அரசு நடவடிக்கை மேற்கொண்டிருந்த போதும் அந்த நாட்டு நீதிமன்றம் தலையிட்டு அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் இலங்கையில் ஆபத்து இருக்கும் என தெரிவிக்கப்பட்ட நிலையில் அந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

கடந்த வருடத்தில் இவ்

பார்க்க பக்கம் 4

## வடக்குத் தேர்தல், தீர்வுப் பேச்சு: அரசை இறுக்குகின்றது அமெ.

கொழும்பு,செப்.15

வடமாகாணசபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கு இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். மேலும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகள் மீண்டும் அதிவிரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தியுள்ளது.

நாட்டின் ஏனைய மாகாணங்களிலுள்ள மக்கள் சுதந்திரத்தையும், சமவுரிமைகளையும் அனுபவிப்பதுபோல வடமாகாணத்திலுள்ள தமிழ் பேசும் மக்களும் அவற்றை அனுபவிக்க வேண்டும். அதற்கு சிறந்ததொரு சூழலை இலங்கை அரசு உருவாக்க வேண்டும் எனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்க

பார்க்க பக்கம் 4

## வடமாகாண பூகோள வரைபடத்தில் மாற்றம்

கொழும்பு,செப் 15

வடமாகாண பூகோள வரைபடத்தில் எதிர்காலத்தில் மாற்றங்கள் செய்யப்படலாம் என இலங்கை நில அள

பார்க்க பக்கம் 4

## புலிகளின் தங்கம் கடத்தல்?

### இந்திய அதிகாரிகள் சந்தேகம்

கொழும்பு, செப்.15

தமிழீழ விடுதலைப் புலிகளின் தங்கக் களஞ்சியத்தைக் கண்டுபிடித்த ஒருவராலேயே தற்போது இந்தியாவுக்குப் படிப்படியாக அபரிமிதமாகத் தங்கம் கடத்தப்பட்டு வருகிறது என இந்திய சுங்கப் பகுதியைச் சேர்ந்த சில அதிகாரிகளும், புலனாய்வாளர்களும் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும் இலங்கைப் படையினருக்குமான போர் முடிவுற்ற பின்னர், கொழும்பிலிருந்து இந்தியாவுக்கு அவ்வப்போது தங்கம் கடத்தப்பட்டு வருகிறது. சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்ட தங்கமே பெருமளவில் இவ்வாறு கடத்தப்பட்டு வருகிறது என ஊகிக்க இடமுண்டு என்றும்அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வருட ஜனவரி முதல் இதுவரை சென்னை விமானநிலையத்தில் 29 தங்கக்கடத்தல் சம்பவங்கள் சுங்க அதிகாரிகளாலும், டி.ஆர்.ஐ. அதிகாரிகளாலும் முறியடிக்கப்பட்டு, தங்க ஆபரணங்களும், தங்கப்பாளங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பார்க்க பக்கம் 4

## இலங்கை அகதிகள் 40 பேரை இடமாற்றியது ஆஸி. அரசு

கொழும்பு,செப்.15

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் ஆஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை பப்புவா நியூகினியில் உள்ள நௌரு தீவுகளுக்கு ஆஸ்திரேலியா இடமாற்றம் செய்துள்ளது.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிய விமானம் கிறிஸ்மஸ் தீவுகளிலிருந்து நௌருவிற்கு சென்றுள்ளது.

இவ்விமானத்தில் 40 இலங்கையர்கள் அடங்குகின்றனர் என ஆஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங-சி)

### உலகெங்கும் தமிழர் வாழும் பகுதிகளில்

## தியாகி திலீபனின் நினைவுநாள் இன்று எழுச்சியுடன் ஆரம்பம்!!

யாழ்ப்பாணம், செப்.15

தியாக தீபம் திலீபனின் 25 ஆவது நினைவுதினம் தமிழர் தாயகம் உட்பட உலகெங்கும் தமிழர்கள் வாழும் பகுதிகளில் பெரும் எழுச்சியுடன் இன்று ஆரம்பமாகிறது. அதற்கான ஏற்பாடுகள் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

பாரதப் படைகளுக்கெதிராக நீராகாரம்கூட அருந்தாது பன்னிரண்டு நாள்கள் உண்ணாநோன்பிருந்து ஒவ்வொரு நாளும் அணு அணுவாக உயிரை விட்டவர் தியாகி திலீபன்.

தான் நேசித்த தமிழ் மக்கள் விடுதலை பெற்று நிம்மதியாகவும், சுதந்திரமாக

பார்க்க பக்கம் 4








## பருத்தித்துறையில் இருந்து ஆஸி. புறப்பட்ட படகு நடுக்கடலில் பழுது

### 67 பேர் தமிழக மீனவர்களால் மீட்பு

சென்னை,செப் 15

பருத்தித்துறையில் இருந்து 67 பேருடன் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்ட படகு, இயந்திரம் பழுதடைந்ததால், 21 நாள்களாக நடுக்கடலில் தத்தளித்த நிலையில் தமிழக மீனவர்களால் காப்பாற்றிக் கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது எனத் தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படகில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 4 சிங்களவர்களும், 3 பெண்கள் உள்ளிட்ட 63 தமிழர்களும் இருந்தனர். பேபி என்பவரின் தலைமையில் இவர்கள் கடந்தமாதம் 24 ஆம் திகதி பருத்தித்துறையில் இருந்து படகு ஒன்றில் புறப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. ஆஸ்திரேலியா செல்வதற்காகவே இவர்கள் புறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு பொருளாதார நிலை குறித்து அமைச்சர் பீரிஸுடன் பிளேக் பேச்சு

கொழும்பு,செப். 15

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக், இலங்கையின்வடக்குப்பொருளாதார நிலை குறித்து தனது ஆர்வத்தை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்தபோது வெளிப்படுத்தியுள்ளார்.

றொபேட் ஓ பிளேக்குக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள், இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளின்சமூக இணைவு ஆகியவை தொடர்பில் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்தார்.

**இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளின் சமூக இணைவு ஆகியவை தொடர்பில் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்தார்**

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஜெனிவா அமர்வில் அமெரிக்க அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து இந்தச் சந்திப்பின்போது எதுவும் பேசப்படவில்லை என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். எனினும் ஐ.நா. குழுவின் இலங்கை வருகை குறித்து றொபேட் ஓ பிளேக்குக்கு அமைச்சர் பீரிஸ் விவரித்தார்.

இவர்களின் கலந்துரையாடலானது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை மையப்படுத்தியதாக இருந்தது. (த)

## பொத்துவில் பொலிஸார் அதிரடி

கொழும்பு, செப்.15


பொத்துவில், கோமாரி பிரதேச கடல்வழியாக ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முயற்சித்த 20 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் உதவியுடன் இவர்கள் நேற்று முன்தினம் இரவு 9.30 மணி அளவில் பொத்துவில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வல்லிபுர ஆழ்வாருக்கு நேற்று கொடியேற்றம்



வடமராட்சி, செப்.15

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.23 மணிக்கு சுப வேளையில் கொடியேற்றத்துடன் வருடாந்தப் பெரும் திருவிழா ஆரம்பமானது. இதில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணியளவில் வசந்தமண்டப பூசை நடைபெற்று சுவாமி எழுந்தருளி கொடித்தம்பத்துக்கு முன்னால் வீற்றிருக்க கொடியேற்றம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

தொடர்ந்து ஆலய சூழலில் உள்ள அன்னதான மண்டபங்களில் அன்னதானங்களும் இடம்பெற்றன.(த-8)

# தவறிய பட்டதாரிகளுக்கு இன்றும், நாளையும் நேர்முகம்

யாழ்ப்பாணம், செப்.15

பட்டதாரிப் பயிலுநர்களுக்கான ஆள்சேர்ப்பு தொடர்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 2010 ஆம் மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து வெளியேறியவர்களில் ஏற்கனவே யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கான நேர்முகத் தேர்வு மீளவும் நடத்தப்படவுள்ளது.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு இன்றும், நாளையும் மாவட்ட செயலகத்தில் நடத்தப்படவுள்ளதாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் காலை 9 மணிக்குப் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, கோப்பாய், சாவகச்சேரி, உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பட்டதாரிகளுக்கும் நாளைய தினம் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பட்டதாரிகளுக்கும் நேர்முகத் தேர்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கு வருகை தரும் பட்டதாரிகள் தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொண்ட வதிவிட அத்தாட்சிப் பத்திரம், பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களாயின் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவினால் அந்தப் பல்கலைக்கழகங்கள் அங்கீகரிக்கப்பட்டமைக்கான சான்றிதழ் மற்றும் மேலதிக தகைமை தொடர்பிலான சான்றிதழ்களுடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (த-5)

# வலி. கிழக்குப் பிரதேச சபையின் செயலாளரை மாற்றுமாறு தீர்மானம்

### சபையின் விசேட கூட்டத்தில் நிறைவேறியது

வலி.கிழக்குப் பிரதேச சபையின் தற்போதுள்ள செயலாளர் சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தடையாக இருப்பதால் வலி.கிழக்கு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தகுதிவாய்ந்த சேவை மனப்பான்மை கொண்ட - திறமையான பிரதேச சபைச் செயலாளர் ஒருவரை நியமிக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை சபையின் விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபையின் தலைவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகச் சபை அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோரைப் பழிவாங்கும் செயற்பாடுகளில் செயலாளர் ஈடுபட்டு வருகிறார். தொடர்ந்தும் பல சந்தர்ப்பங்களில் அவர் இவ்வாறு செயற்பட்டுள்ளார்.

பிரசித்தி பெற்ற செல்வச் சந்நிதி ஆலயத்தின் திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு பிரதேச சபையின் ஊழியர்கள் சிறப்பாகச் செயலாற்றி உதவி புரிந்தனர். இவ்வாறு சேவை செய்த ஊழியர்கள் மீது தேவையற்ற விதத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

செயலாளரின் இவ்வாறான நடவடிக்கைகள் சபையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே இவரை மாற்றி திறமையான சேவை மனப்பான்மையுடைய செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (த-17-11)

# 9,412

### தற்கொலைகள் இரண்டரை வருடங்களில்

இலங்கையில் பல்வேறு காரணங்களுக்காகத் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி தற்கொலைகள் தொடர்பான விவரம் வருமாறு -

2010ஆம் ஆண்டு ஆண்கள் 2,914 பேரும் பெண்கள் 950 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

2011 இல் ஆண்கள்-2,939 பேர், பெண்கள்-831 பேர், 2012 ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்குள் ஆண்கள் - 1,381 பேர், பெண்கள்- 397 பேரும் தற்கொலை செய்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய தகவல்களின் படி ஆண்களே அதிகம் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அத்துடன் 40 தொடக்கம் 55 வயதுக்கு இடைப்பட்டவர்களே அதிகம் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் இரத்தினபுரி மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே அதிகம் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

2011 ஆம் ஆண்டில் 16 வயதிற்கும் குறைந்த 41 ஆண் சிறுவர்களும் 77 சிறுமியர்களும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுவிஸில் தற்காலிகமாக வசிப்போர் சொந்த நாடுகளுக்கு அனுப்பப்படுவர்

சுவிஸ் அரசினால் தற்காலிக வதிவிட அனுமதி வழங்கப்பட்ட வெளிநாட்டவர்களை அந்தந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளது.

சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் வெளிவிவகாரங்களுக்கான ஆணைக்குழுவின் உறுப்பினருமான மாட்டீர் நவ் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமை , தற்சமயம் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடுகளில் இருந்து வருவோருக்கு இடமளித்தல் போன்ற காரணங்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

சுவிஸில் தஞ்சம் கோரிய ஆயிரக்கணக்கானவர்களில் கணிசமானவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கு தற்காலிக வதிவிட அனுமதி வழங்கி அவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

போர் முடிந்து அமைதி நிலை திரும்பியுள்ள நாடுகளில் இருந்து அகதிகளாக வந்து தற்காலிக வதிவிட அனுமதி பெற்றவர்களை அந்தந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பும் வேலைகள் இப்போது நடைபெறுகின்றன.

ஒரு வருடமோ, 5வருடங்களோ இவ்வாறு தற்காலிக அனுமதியுடன் வாழ்ந்தவர்களை அவர்கள் சார்ந்த நாடுகளின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்கள் தமது நாட்டில் இயல்பு வாழ்வு வாழக் கூடிய சூழலை ஏற்படுத்தத் திருப்பி அனுப்ப இருக்கிறோம் - என்றார்.

இலங்கையில் இருந்து 2009 ஆம் ஆண்டின் பின்னர் சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியவர்களைத் திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதா? என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மாட்டின் நவ் மேற்கண்டவாறு கூறினார். (த)

# 2010, 2011 பட்டதாரிப் பயிலுநருடன் எங்களையும் இணையுங்கள்

### பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் அரச அதிபருக்கு மனு

யாழ்ப்பாணம், செப்.15

அசாதாரண சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகத்தில் 2011 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் 2012ஆம் ஆண்டிலேயே அதனைப் பூர்த்தி செய்ய முடிந்தது. இதனைக் கருத்திலெடுத்து 2010, 2011 ஆம் ஆண்டுக்குரிய பட்டதாரிப் பயிலுநர்களுடன் தம்மையும் இணைத்துக்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட பட்டதாரிகள், அரச அதிபருக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்கள் அந்த மனுவில் தெரிவித்திருப்பதாவது:-

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 2007/ 2008 ஆம் ஆண்டு கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற நாம் பொதுக் கலைமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளோம்.

எமது பட்டப் படிப்பை 2011 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாக இருந்தும் விரிவுரையாளர்களினதும் கல்விசாரா ஊழியர்களினதும் வேலை நிறுத்தம், மாணவர் பகிஷ்கரிப்பு, இயற்கை அனர்த்தம், கிறிஸ்

**பல்கலைக்கழக கற்றலின் போது ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக பட்டப் படிப்பினை பூர்த்தி செய்வதில் கால தாமதம் ஏற்பட்டது.**

பூதப் பிரச்சினை என்பவற்றால் 2011 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெறவேண்டிய இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை 2012 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களிலேயே நடைபெற்றது.

இதனால் எமது பட்டச் சான்றிதழின் செயல்வலுத் திகதி 2012 பெப்ரவரி என்று தரப்பட்டுள்ளமையால் 250 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எனவே 2010, 2011 ஆம் ஆண்டு பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் எங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (த-5-9)

# காணாமற்போனோர் பற்றிய விசாரணை திங்கள் ஆரம்பம்

### யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில்

தென்மராட்சி,செப்.15

2006 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி வியாழக்கிழமை வரை யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசரீதியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் காணாமல் போனோரின் உறவினர்கள் தத்தமது பிரதேச செயலகத்தில் பங்குபற்ற வேண்டிய திகதி நேரம் தொடர்பான விவரங்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2006 இல் யாழ். மாவட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கான விசாரணைகளை மேற்கொள்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமை அலுவலகத்திலிருந்து விசாரணைக்குழு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக பிராந்திய இணைப்பாளர் த.இன்பராஜ் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். (த-9)

# பிரதிச் சபாநாயகரின் செயற்பாடு குறித்து ஐ.தே.க. கடும் கவலை

கொழும்பு,செப்.15

பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடியின் நடவடிக்கைகள் அதிர்ச்சியளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.சந்திம வீரக்கொடி அடிப்படை ஒழுக்க நெறிகளுக்குப் புறம்பான வகையில் செயற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தேவையில்லாத வகையில் எதிர்க்கட்சித் தலைவர் மீது சந்திம வீரக்கொடி குற்றம் சுமத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுநலவாய நாடுகள் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்ட எதிர்க்கட்சியினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பொதுநலவாய நாடுகள் பாராளுமன்ற அமர்வு, அனைத்து நாடாளுமன்ற ஒன்றிய அமர்வுகள் போன்றன நடைபெறும் போது அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செயற்படுவதில்லை என்பது மரபாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், பிரதிச்சபாநாயகர் ஒரு தலைப்பட்சமாக அரசியல் நோக்கங்களை முதனிலைப்படுத்தி செயற்பட்டதாகவும் இது கவலைக்குரியது எனவும் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டு இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப்.15

*போருக்குப் பின்னர் வடமாகாணத்தில் முதன்முதலாக அதிபர்கள், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.*

ஒரே பாடசாலையில் ஏழு வருடங்களைப் பூர்த்தி செய்த 55 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் இந்த இடமாற்றத்துக்குத் தகுதியுடையவர்கள் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2010 மே 10 ஆம் திகதியிலிருந்து நாம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வந்தோம். தற்போது அது வெற்றியளித்துள்ளது. கடந்த 30 வருடங்களாக செய்யப்படாதிருந்த இந்த இடமாற்றங்கள் தற்போது வெற்றியளித்துள்ளன. எதிர்வரும் ஜனவரி மாதம் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய அனைவரும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். 2014 ஆம் ஆண்டில் இருந்து இடமாற்றம் தொடர்பான எந்தப் பிரச்சினையும் இருக்கப் போவதில்லை.

இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபர்கள், வலயக் கல்வி அலுவலகங்களினால் முறையான அனுமதிபெற்ற பாடசாலை பிரதி அதிபர்கள், இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள், இடைநிலைப் பிரிவு ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோரே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

மூன்றாம் தவணை பாடசாலை விடுமுறைக்கு முன்னர் இடமாற்றம் பெறுவோருக்கு அறிவித்தல், இடமாற்றக் கடிதங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுவிடல் வேண்டும். இடமாற்றம் பெற்றுச் செல்பவர்கள் தமது பொறுப்புக்களை மற்றையவர்களிடம் ஒப்படைக்கவும் இடமாற்றம் பெற்றுச் செல்லவும் இது உதவும். இதுபற்றி வலயக் கல்விப் பணிப்பாளர்களும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

உயர்தர வகுப்புக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வகுப்பு ஆசிரியர்களும் ஜனவரியில் இடமாற்றம் பெறுகின்றனர்.

2010 இல் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் சில மாதங்களின் பின்னர் மீண்டும் முன்னர் கற்பித்த பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளனர். செல்வாக்குடையவர்களைப் பயன்படுத்தியும் சில வலயக் கல்வி அதிகாரிகளின் தன்னிச்சையான செயற்பாடுகளினாலும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. எனினும் இவ்வாறு இடமாற்றம் பெற்ற அனைவருமே அதே பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்ல வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதி அதிபர் பதவி நியமனம் பெற்றவர்களில் 2011 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதி அதிபர் நியமனம் பெற்றவர்களே இடமாற்றம் பெறமுடியும்.

கடந்த 30 வருடமாக ஒரே இடத்தில் பணியாற்றியமையால் எழுந்த பிரச்சினைகள் அனைத்தும் இதன் மூலமாக தீர்த்து வைக்கப்படும். இது கிராமங்களில் இருக்கும் ஏழை மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். அதே வேளை மாணவர்களின் நகர் நோக்கிய இடப்பெயர்வும் குறையும். சிறந்த தராதரமுடைய ஆசிரியர்களின் பணியை கிராமத்தில் உள்ள மாணவர்களும் பெற்றுக் கொள்ள முடியும். அனைத்து தரப்பினருக்கும் இது பெரும் வரப்பிரசாதகமாகவே அமையும் -என்று ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (த-4)

# தற்காலிக பணியாளர்களுக்கும் அதிகரித்த சம்பளத் திட்டம்

## கூட்டுறவு ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.மாவட்டத்தில் உள்ள தற்காலிக கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் சம்பள உயர்வை நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு அதிகரித்த கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாத பணியாளர்கள் திணைக்களத்துக்கு அறியத் தர வேண்டும் என்று யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாதாந்தம் இலாபகரமாகச் செயற்படும் சங்கங்கள் புதிய சம்பளக் கொடுப்பனவை நடைமுறைப் படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த 15 வீத சம்பள உயர்வை அநேகமான சங்கங்கள் நிரந்தர பணியாளர்களுக்கே நடைமுறைப்படுத்தி வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**15 வீத சம்பள உயர்வை அநேகமான சங்கங்கள் நிரந்தர பணியாளர்களுக்கே நடைமுறையில் உள்ளது.**

இந்தச் சம்பள உயர்வை சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிக பணியாளர்களுக்கும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதனைவிட பணியாளர்களுக்கான 2 ஆயிரத்து 875 ரூபா கொடுப்பனவும் தற்காலிக பணியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளில் வேறுபாடு காட்டும் சங்க நிர்வாகங்கள் மீது உரிய நடவடிக்கையை திணைக்களம் மேற்கொள்ளும்- என்றார். (த-17)

# இந்திய வீடமைப்புப் பணியில் இரண்டாம் கட்ட வேலை ஒக்ரோபரில்

*யாழ்ப்பாணம், செப்.15*

*இந்திய வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ஒக்ரோபர் இரண்டாம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.*

*இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தெல்லிப்பழை, மருதங்கேணி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட நான்கு கிராம அலுவலர் பிரிவுகளிலும் 500 பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.*

*பயனாளிகள் தெரிவுகள் யாழ்.மாவட்டச் செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் விரைவில் அந்தந்த பிரதேச செயலகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ம-9)*

# பெரும்போக நெல் விதைப்புக்கான முன்னேற்பாடுகளில் விவசாயிகள்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.குடாநாட்டு விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியாகியுள்ள போதும் இதுவரை மழை பெய்யாமையால் விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சில இடங்களில் வயல்களுக்குப் பசளையிடும் பணிகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

வன்னியில் இருந்து எடுத்துவரப்படும் மாட்டெருவைப் பயன்படுத்தி வயல்களுக்குப் பசளை இடும் பணிகளும் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன. சில விவசாயிகள் தமது வயல்களை அண்டி இருக்கும் கிணறுகளில் இருந்து நீரை இறைத்து வயல்களை உழுது பண்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, வயல்களை அண்டி இருக்கும் ஆலயங்களில் விவசாயிகள் மழை வேண்டி விசேட பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (த-17)

# வெங்காயச் சங்கங்களை புனரமைக்க நடவடிக்கை

வலி. வடக்கு, செப் 15

யாழ். மாவட்டத்தில் உள்ள வெங்காயச் சங்கங்களை மீண்டும் புனரமைப்பதற்கு யாழ். மாவட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட வெங்காய உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதில் பல இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த காலங்களில் இயங்கிய வெங்காயச் சங்கங்களை மீண்டும் இயங்கச் செய்து வெங்காய உற்பத்தியாளர்களின் பொருள்களை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தச் சங்கங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தற்போது விவசாயத் திணைக்களம் பிரதேச செயலகங்களுடன் இணைந்து சங்கங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.(ம-86)

## நிகழ்வுகள் இன்று

**நூல் வெளியீடு**

''வானம் விழுந்த நெல் வயல்'' எனும் கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**இறுவட்டு வெளியீடு**

வதிரி உல்லிநொல்லை கண்ணகை அம்பாள் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு பக்தி கீதங்கள் இறுவட்டு வெளியீடு மாலை 6 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**சிறுகதைத் தொகுதி வெளியீடு**

கே.ஆர்.டேவிட்டின் ''பாடுகள்'' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**பொதுக்கூட்டம்**

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ம-288)

* * *

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் கூட்டம் மு.ப. 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் சபா ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-8)

# கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் புதிதாக பஸ்தரிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், செப்.15

கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் பஸ்தரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப தலைவர் கே.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் பருத்தித்துறை வீதியில் பஸ் தரிப்பிடங்கள் இல்லாமையால் பயணிகள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர். வீதி அகலிப்புக்காகச் சில பஸ் தரிப்பு நிலையங்கள் அகற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து பயணிகளின் வசதி கருதி பஸ் தரிப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கடும் வெப்பம் காரணமாக பயணிகள் பகல் நேரத்தில் சிரமப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

# சேதமடைந்த நான்கு மதகுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.15

சேதமடைந்த நான்கு மதகுகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை அவசர அவசரமாகப் புனரமைத்து வருகின்றது.

எதிர்வரும் மழை காலத்துக்கு முன்பாக பிரதான வீதிகளில் உள்ள இந்த மதகுகளின் புனரமைப்புப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கச்சாய்- கொடிகாமம் வீதியில் உள்ள இரண்டு மதகுகளும் வேலணை- ஊர்காவற்றுறை வீதியில் உள்ள ஒரு மதகும், செம்மணி வீதியில் உள்ள ஒரு மதகும் இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் புனரமைப்புப் பணிகள் விரைவில் முடிவடைய உள்ளன. (த-17)

# வியாபாரப் பொருள்களை குமுதினியில் ஏற்றத் தடை

யாழ்ப்பாணம், செப்.15

நெடுந்தீவு கடற்போக்குவரத்துச் சேவையில் உள்ள குமுதினி அரச மோட்டார் படகில் வியாபாரிகள் தமது விற்பனைப் பொருள்களை ஏற்றுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை விற்பனைக்காகக் கொண்டு செல்லும் பொருட்டு படகில் ஏற்றப்பட்ட பொருள்கள் படகில் இருந்து இறக்கப்பட்டன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் எஸ்.சுதாகர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வர்த்தக நோக்குடன் படகில் பொருள்கள் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்ட விடயம் தொடர்பாக விசாரணை செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

வியாழக்கிழமை விற்பனைக்கான மா, அரிசி மூடைகள் சில குமுதினி படகில் ஏற்றப்பட்டதாகக் கிடைத்த தகவல் குறித்து [illegible] அவர் இந்த விடயத்தைக் கூறினார். (ம-7)

# யாழ். கரையோரத்தில் இருக்கும் வெளிச்ச வீடுகள் குறித்து கவனம்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.கரையோரப் பகுதிகளில் இருக்கும் வெளிச்ச வீடுகள் குறித்து யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிச்ச வீடுகளின் புனரமைப்புக் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வெளிச்ச வீடுகள் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளன என்பது குறித்து அறிவதற்கு கொழும்புடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

**இரவு வேளையில் கடற்றொழிலாளர்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.**

இவை தொடர்பாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றதும் உரிய தீர்மானம் எடுக்கப்பட்டு அவற்றைப் புனரமைப்பது குறித்து ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.கரையோரங்களில் உள்ள வெளிச்சவீடுகள் புனரமைக்கப்படாமல் காணப்படுவதால் இரவு வேளையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனையடுத்து இது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தஞ்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட பலர் மீளவும் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் திருப்பி அனுப்பப்பட்டபோது தாம் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டோம் என்பதற்கு போதிய ஆதாரங்களை அவர்கள் சமர்ப்பித்திருந்தனர் என பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

எனினும் தற்போது திருப்பி அனுப்பப்படவுள்ள 300 பேரில் பெருமளவானோர் மாணவர்கள் எனவும் விசா காலம் முடிவடைந்த பின்னரும் தங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை மனித உரிமைகள் அமைப்புக்கள் கண்டித்துள்ளன. திருப்பி அனுப்பப்படும் தமிழர்கள் இலங்கையில் மிக மோசமாக சித்திரவதைக்கு உட்டுத்தும் சாத்தியம் உள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (உ-10)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

29 கடத்தல் சம்பவங்களில் கொழும்பிலிருந்து சென்னை வந்த விமானப்பயணிகள் 22 சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்னர் துபாயிலிருந்தும், சிங்கப்பூரிலிருந்துமே பெருமளவில் சென்னைக்குத் தங்கம் கடத்தப்பட்டு வந்துள்ளது. இன்று இந்நிலை மாறிவிட்டது.

இது குறித்து சுங்கப்பிரிவு அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில், "தற்போது தங்கக் கடத்தலில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது. 75 சதவீதமான தங்கக் கடத்தல்காரர்கள் கொழும்பிலிருந்தே வருகிறார்கள்" என சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பைப் பொறுத்தமட்டில் அது மிகப்பெரிய தங்க வர்த்தக மையமாகாது. பெருமளவில் தங்கம் கிடைப்பதற்கான கேந்திர ஸ்தானமுமல்ல" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து இந்தியாவுக்கு மேற்கொள்ளப்படும் தங்கக் கடத்தல்கள் வியப்பூட்டும் வகையில் அதிகரித்துள்ளமையால், இந்திய சுங்கப்பிரிவு அதிகாரிகளும், புலனாய்வாளர்களும் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதுவரை இவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தங்கத்துக்கு எப்போதும் பெரும் மவுசு நிலவும் இந்தியாவுக்கு சட்டவிரோதமாகப் பெருமளவில் தங்கக் கடத்தலில் ஒருவர் ஈடுபட்டு வருகின்றமை புலனாகியுள்ளது. அதனால் விசாரணை தீவிரமடைந்து வருகிறது.

அதேவேளை, ஊர்ஜிதமற்ற பல தகவல்களும் வெளியாகியுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்குமிடையே சண்டை நடைபெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 6 ஆயிரம் கிலோ தங்கத்தைப் பாதுகாப்புப் படை கண்டுபிடித்துள்ளது என்ற தகவலும் இதில் அடங்கும்.

இது குறித்து சுங்கத் திணைக்கள வட்டாரங்கள் குறிப்பிடுகையில், "இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட தங்கத்தில் பெரும்பகுதி தனிப்பட்டவர்களின் கைகளுக்குப் போயிருக்கலாம். அவர்கள் இந்தியாவுக்குக் கடத்தும் பணியில் ஈடுபட்டு வரக்கூடும்" - எனத் தெரிவித்துள்ளன.

அதேவேளை, சண்டையின் போது இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்களின் சடலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தங்க ஆபரணங்களும், கடத்தல் பேர்வழிகள் மூலமாக இந்தியாவுக்குக் கடத்தப்படலாம் என நம்பப்படுகிறது.

மேற்படி வட்டாரங்கள் மேலும் குறிப்பிடுகையில், " பெரும்பாலான சம்பவங்களில் கொழும்பிலிருந்து வந்த கடத்தல்காரர்களிடம் 24 கரட் தங்க பிஸ்கட்டுகளும் உருக்கப்பட்ட தங்கங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஓர் இலங் கைப் பெண்மணி ஒரு குடையைக் கொண்டுவந்தார். அதன் கைப்பிடி யின் மத்திய பகுதி தங்கத்தால் உருவாக்கப்பட்டிருந்தது எனத் தெரிவித்துள்ளன.

## தீவகத்தில் கடும் வறட்சி
### நேற்று மட்டும் 12 மாடுகள் சாவு

யாழ்ப்பாணம், செப்.15

புங்குடுதீவில் கடும் வறட்சியினால் நீரின்றி 12 மாடுகள் நேற்று மட்டும் இறந்துள்ளன.

கடந்த வாரம் 21 மாடுகள் இவ்வாறு இறந்து புதைக்கப்பட்டன. தீவகத்தில் நிலவும் கடும் வறட்சியினால் நீர் நிலைகள் யாவும் முற்றாக வற்றியுள்ளன.

இன்னும் சில தினங்களுக்குள் மழை பெய்யாவிடின் அராலி வெளி-சரவணை, புங்குடுதீவு, வேலணை ஆகிய இடங்களில் மேலும் பல கால்நடைகள் இறக்கும் அபாயம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை:

வேலணையில் உள்ள பொது அமைப்புக்களும் - சபை உறுப்பினர்களும் இணைந்து கால்நடைகள் கூடுமிடங்களில் தற்காலிக தொட்டிகள் வைத்து பிரதேச சபை லெறிபவுசர் வாகனம் மூலம் குடிதண்ணீர் இறைத்து வழங்க சபைத் தலைவர் இ.சிவராசா நடவடிக்கை எடுத்துள்ளார். (16-50)

## தியாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் வாழவேண்டும் என்பதற்காக தன்னை வருத்தி இன்னுயிரைத் தியாகம் செய்த அந்த அற்புத மனிதன் திலீபனின் நினைவு வாரத்தை தமிழர்கள் மிகவும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடத் தயாராகியுள்ளனர்.

லண்டன், கனடா, அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், சுவிஸ், ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, சுவீடன் போன்ற நாடுகளில் திலீபனின் நினைவுவாரம் என்றுமில்லாதவாறு இம்முறை மிகவும் பிரமாண்டமாக அனுஷ்டிக்கப்படுகிறது. புலம்பெயர் அமைப்புகள் இந்த நிகழ்வை முன்னின்று நடத்துகின்றன.

இந்த நிகழ்வில் தமிழ் மக்களை அணிதிரண்டு வந்து பங்கேற்குமாறு தமிழகத்து ஈழ ஆதரவாளர்களும் தமிழ் உணர்வாளர்களும் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஒருசொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதமிருந்து உயிரை விட்டு உலகத்திற்கே அஹிம்சையைப் போதித்துச் சென்ற தியாகி திலீபனின் வழியில் தமிழர்களாகிய நாம் எமக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளை களைந்து, பிளவுகள் இன்றி அனைவரும் ஒன்றுசேர்ந்து விடுதலை நோக்கிய பாதையில் செல்ல வேண்டும் என்றும் தமிழின உணர்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

* மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
* சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற்கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
* அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
* ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
* தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

இந்த 5 கோரிக்கைகளையும் முன்வைத்தே உண்ணாவிரதம் இருந்தார் திலீபன். ஆனால், அஹிம்சையைப் போதித்த பாரததேசம் இறுதிவரை மனமிரங்கவில்லை.

அதனால் செப்ரெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.48 மணிக்கு திலீபன் தியாக மரணத் தைத் தழுவினார்.

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டு இரண்டு நாள்கள் கழித்து இவர்களின் படகு திடீரென பழுதடைந்தது. இதையடுத்து அவர்கள் நடுக்கடலில் உண்ணவோ, குடிதண்ணீரோ இல்லாமல் தவித்து வந்தனர்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் மீன்பிடிக்கச் சென்ற ஈச்சாங்குப்பத்தைச் சேர்ந்த தம்பிராஜ் என்பவர், கடலில் தத்தளித்த 67 பேரையும் மீட்டு நாகபட்டினம் துறைமுகத்திற்கு அழைத்து வந்தார்.அவர்களிடம் தமிழ்நாடு பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர்.(த)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்க அமைச்சர் ரொபர்ட் ஓ பிளேக், ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்களின் பின்னர் கிழக்கு மாகாணத் தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளது.

இதனூடாக கிழக்கிலுள்ள மக்கள் ஜனநாயகம், சமவுரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசு வழியேற்படுத்திக்கொடுத்திருக்கிறது.

அரசு கிழக்குத் தேர்தலை நடத்தியமை வரவேற்கத்தக்க விடயமாகும். இந்தத் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட 'கபே', 'பவ்ரல்' முதலான கண்காணிப்பு அமைப்புகளும் கிழக்குத் தேர்தல் சிறப்பாக நடைபெற்றது எனத் தெரிவித்துள்ளன.

நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களிலுமுள்ள மக்கள் இன்று ஜனநாயக சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்த வருடம் வடக்குத் தேர்தல் நடத்தப்படும் என இலங்கை அரசு அறிவித்துள்ளது. இதன்படி, அத்தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கு அது நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இதனூடாக வடக்கிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டி அங்குள்ள மக்கள் சமவுரிமையுடன் வாழக்கூடிய சூழலை அரசு ஏற்படுத்தவேண்டும் - எனத் தெரிவித்தார் ரொபர்ட் ஓ பிளேக்.

## வட மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வையியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் வட மாகாணத்திற்கு முழுமையான பூகோள வரைபடம் ஒன்று இருக்கவில்லை. தற்போது வட மாகாணத்தில் அபிவிருத்திகள் இடம்பெறுவதால், அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பூகோள வரைபடத் திணைக்களமும் பங்களிப்புச் செய்கிறது என நில அளவைத் திணைக்களத்தின் நில அளவை அதிகாரியான மகேஸ் பெர்ணான்டோ தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் வட மாகாணத்துக்கு புதிய தனியான வரைபடம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இது தொடர்பில் வட மாகாண எல்லைகள் வரையறுக்கப்பட்டு வருவதாகவும் அதன் அடிப்படையில், ஒன்றுக்கு பத்தாயிரம் என்ற விகித அளவில் வட மாகாணத்தின் வரைபடம் ஒன்றை வரையத் தயாராகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையின் முழுமையான பூகோள விவரங்களை அரசு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் பிரிவுக்கு வழங்கியுள்ளது எனவும், அது தொடர்பான உடன்படிக்கை ஒன்று இலங்கைக்கும், ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான குழுவிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இங்கு அரசியல் தலைவர்கள், வர்த்தக சமூகத் தலைவர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோருடன் காத்திரமான தொடர் சந்திப்புகளை நடத்தியுள்ளேன். நான் செல்வதற்கு முன்னர் எங்களின் புதிய தூதுவர் மிட்செல் சிசன் வருகையை வரவேற்கின்றேன்.

அவர் கடந்த வாரம்தான் இங்கு வந்தார். தென்னாசிய விவகாரங்களில் நிபுணத்துவம் வாய்ந்த இராஜதந்திரிகளில் அவரும் ஒருவர், மிகுந்த அனுபவசாலி. அமெரிக்காவுக்கு சேவையாற்றத் தயாராக வந்துள்ளார். இலங்கையில் நான் இருந்த காலப்பகுதியில் எனக்களித்த இதயபூர்வமான வரவேற்பையும், உபசரணையையும் அவருக்கும் அளிப்பீர்கள் என எனக்குத் தெரியும்.

அமெரிக்கா இலங்கையின் நீண்டகால பயனுள்ள ஒரு பங்குதாரராகவே இருந்துவந்துள்ளது. நாங்கள் இலங்கைக்கு 2 பில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக உதவி வழங்கியுள்ளோம். அதேவேளை, அதிமுக்கிய பொருளாதார உறவையும் அமெரிக்கா பேணிவருகின்றது. இலங்கைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் தனிப்பட்ட ஒரு பெரும் நாடாக அமெரிக்கா திகழ்கிறது. பயங்கரவாதத்தை எதிர்ப்பதிலும், கடல் பாதுகாப்பிலும் நாங்கள் வலிமை பொருந்திய உதவியாளராக இருக்கின்றோம்.

கண்ணிவெடி அகற்றல், இடம்பெயர்ந்தோருக்கான உதவி போன்ற விவகாரங்களில் நாங்கள் இணைந்து செயற்பட்டுள்ளோம். நான் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், அமைச்சர் டி சில்வா, அமைச்சர் சமரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சமூகசேவை அமைப்புகள் ஆகியவற்றின் தலைவர்களையும் சந்தித்துள்ளேன். இச்சந்திப்புகள் சாதகமானவை.

அனைத்துச் சந்திப்புகளிலும் கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்தபட வேண்டியதன் அவசியம் குறித்து நான் கலந்துரையாடி இருக்கிறேன். அதுபோல தேசிய செயற்பாட்டுத் திட்டம் குறித்தும் பேசியுள்ளேன்.

வட பகுதியிலுள்ள இராணுவப் பரம்பலைக் குறைக்குமாறும், மனித உரிமைகளை முழுமையாக மதிக்குமாறும் இச்சந்திப்புகளில் நான் வலியுறுத்தியுள்ளேன். பொறுப்புக்கூறும் விவகாரங்களைப் பொறுத்தமட்டில் யுத்தம் முடிந்து மூன்றாண்டுகள் கடந்துவிட்டன. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பாரதூரமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

இவை தொடர்பாக நம்பகத்தன்மையுள்ள விசாரணையும், நடவடிக்கைகளும் தேவை. காணாமல்போனோரின் விடயம் சம்பந்தமாகவும் முன்னேற்றம் தேவை. வடமாகாணசபைத் தேர்தல்கள் காலதாமதமின்றி விரைவில் நடைபெறவேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்தியுள்ளேன்.

மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுகள் அதிவிரைவில் மேற்கொள்ளப்படுவதற்காக நான் உந்துதல் அளித்துள்ளேன்.

பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் அமெரிக்க வர்த்தக சம்மேளனம் அதன் 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி வர்த்தகக் கண்காட்சியொன்றை நடத்தவிருக்கின்றது. இது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்களை நான் சந்தித்தேன். சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம், பெரும் முதலீடுகளை இலங்கை கவருவதற்கான அம்சங்கள் ஆகியவை குறித்து கலந்தாலோசிப்பதற்காகவும் இந்தச் சந்திப்பை நான் மேற்கொண்டேன்.

பங்குறவு தொடர்பாக அமெரிக்க - இலங்கை புல்பிரைட் ஆணைக்குழு 60ஆவது வருட நிறைவைக் கொண்டாடுவதை நான் விசேடமாக அங்கீகரிக்கின்றேன். இந்தத் திட்டத்திற்கிணங்க ஏறத்தாழ 650 இலங்கை மாணவர்கள் அமெரிக்கா சென்றுள்ளார்கள்.

அதேவேளை, ஆய்வாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், மாணவர்களாகவும் 380இற்கு மேற்பட்ட அமெரிக்கர்களை இலங்கை வரவேற்றுள்ளது.

இந்தத் திட்டம் எமது இரு நாடுகளைச் சேர்ந்த இளம் தலைமுறையினரையும், எமது சமூகங்களையும் ஈர்த்து வலிமைப்படுத்துகிறது. நாங்கள் இந்த இருதரப்பு ஒத்துழைப்பும் தொடரவேண்டும் என்பதில் ஆவலாக இருக்கின்றோம்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக புல்பிரைட் ஆணைக்குழுவின் தலைவராக இருந்து பணியாற்றிவரும் புல்பிரைட் நிறைவேற்றுப் பணிப்பாளர் திஸ்ஸ ஜெயதிலக்கவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து இலங்கையர்களும் அதே உரிமைகள், கௌரவம், ஜனநாயகப் பகிர்வு, பாதுகாப்பு, எதிர்கால முன்னேற்றம் ஆகியவற்றை எய்துவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு.- இப்படி அவர் தெரிவித்தார்.

## இறுதி முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர் பதவி, முஸ்லிம்களுக்கான கரையோர மாவட்டம் உட்பட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இரு தரப்பினரிடமும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக அக்கட்சியின் பிரதித் தலைவர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இது முஸ்லிம் வாக்குகளில் 65 சதவீதமானதாகும். எந்தத் தரப்பு எமக்கு நியாயமான சலுகைகளை வழங்க முன்வருகிறதோ அந்தத் தரப்புக்கு ஆதரவு வழங்குவதே கட்சியின் நிலைப்பாடாக இருக்கும். இறுதி முடிவு கட்சியின் அரசியல் உயர் பீடத்தினாலேயே எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.(த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சொல்லொன்று செயல் வேறு இந்த நிலை மாறுவது எப்போது?

பொது நலவாய நாடாளுமன்றங்கள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் தலைவர் சேர் அலன் ஹாசல் ஹேஸ்ற் கொழும்பில் வெளியிட்ட கருத்து இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதானிகளை உசுப்பேற்றப் போகிறது!

இலங்கையில் வாழும் இனங்களிடையே நல்லிணக்கத்தைக் கொண்டுவர உள்ளதாக, இந் நாட்டு அரசு தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறுமானால், பொதுநலவாயத்தின் மீதுள்ள நம்பகத் தன்மையையும் சர்வதேச சமூகம் இழந்து விடும்.-

இலங்கை அரசு தனது உள்விவகாரத்தைச் சமாதான வழியிலும், ஒற்றுமையுடனும், தனக்குள் ஒன்றிணைந்தும் தீர்க்காவிடில், பொது நலவாய சங்கத்தையும் பெரும் இடர்ப்பாட்டுக்குள் தள்ளிவிடும்--

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கம், தன்னை அனைத்துலக நிறுவகம் என உரிமை கொண்டாட முடியாது என்று ஏற்கனவே அதனை விமர்சித்து வரும் தரப்புக்களின் வாய்க்கு, அவல் போட்டது போலவே இலங்கைத் தரப்பின் நிலைப்பாடு அமையும்.--

இலங்கை அரசு, தனது நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை மலர்விப்பதற்கு, பொதுநலவாய மன்றம் தனக்குள்ள வளங்களையும் வசதிகளையும் நல்குவதற்கு தயாராக உள்ளது--

என்று ஒரு வகையில் மனம் நொந்தும், மற்றொரு வகையில் இலங்கை அரசைத் தட்டிக் கொடுத்தும் கருத்து வெளியிட்டு இருக்கின்றார், பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் தலைவர் சேர் அலன் ஹாசல் ஹேஸ்ற்.

எமது நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் காலஞ்சென்ற லஷ்மன் கதிர்காமரின் நினைவுப் பேருரையை, கொழும்பில் நேற்று முன்தினம் நிகழ்த்திய போதே சேர் அலன் ஹாசல் தமது இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார்.

அத்தோடு நிற்காது ,காலத்தை வாங்காது ,தேசிய நல்லிணக்கத்தை உரிய வேளையில்,நேர காலத்துடன் உருவாக்கக்கூடிய சக்தி இலங்கை அரசிடம் உண்டு.

*எனினும் நல்லிணக்கம் காண்பதில் தனக்குள்ள ஆர்வத்தை, விருப்பத்தை அது குறித்த அர்ப்பணிப்பை, அது அனைத்துலகத்துக்குச் செயல் மூலம் காண்பிக்க வேண்டும்.அதில் வெளிப்படைத் தன்மை மிக அவசியம்.

*அது மட்டுமன்றி, இந்த நாட்டில் வாழும் சகல மக்களையும் சமமாக மதிக்கும் தன்மையையும் அதற்கான விருப்பத்தையும் அரசு தனது செயற்பாடுகள் ஊடாக வெளிப்படுத்துவதும் இன்றியமையாத ஒன்று.எந்தச் செயற்பாட்டுக்கும் ஒரு காலவரையறை பிரதானம்-என்றும் சேர் அலன் ஹாசல் பொருத்தமாகச் சுட்டிக்காட்டினார்.

பொது நலவாய நாடாளுமன்ற சங்கம் தனது அங்கத்துவ நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட முடியாது என்று இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தொட்டுக்காட்டியதை முழுமையாக விழுங்கிக் கொண்டு, இலங்கை தொடர்பான செயற்பாடுகளில் பொதுநலவாய அமைப்பு பின்வரிசைக்கு ஓடுமா என்பது தெளிவாகப் புலப்படவில்லை.

இதற்கிடையே, கொழும்பில் அடுத்த வருடம் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்குபற்றாமல் அதனைப் பகிஷ்கரிக்கப்போவதாக கனடா தெரிவித்திருக்கிறது. வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது, அரசினால் இழைக்கப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து தீர்வு காணப்படும் வரை தான் உச்சி மாநாட்டில் பங்குபற்றப் போவதில்லை என்று அந்த நாடு அறிவித்திருக்கிறது.

இறுதிப் போரின் போது ம்னித உரிமை மீறல்களில் இலங்கை அரசு ஈடுபட்டதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்நாட்டு அரசு பதிலளிக்க வேண்டும் என்று பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் கடந்த பல மாதங்களாக வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போது கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் இலங்கைத் தரப்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களில் பின்வருவனவும் அடங்குகின்றன.

* ஜனநாயகக் கோட்பாடுகளின் உண்மையான கருத்துக்களை உணர்வு பூர்வமாகப் புரிந்துகொள்வது அவசியம். மக்களின் அபிலாசைகளை அவர்கள் சுதந்திரமாக வெளியிடுவதே ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்குகிறது.

* ஆனால் இப்போதெல்லாம் மக்கள் மீதும் நாடுகள் மீதும் ஜனநாயகத்தைத் திணிக்க முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்.

* எங்களைப் பொறுத்தவரையில் ஜனநாயகத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் மோதல் நடைபெற்ற வேளை நாங்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளோம்.

* ஜனநாயகத்தின் பெறுபேறுகளாக இலங்கை பல வழிகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் பெறுபேறுகளாக கல்வி மற்றும் மருத்துவ சேவையில் எமது நாடு வெகு முன்னேற்றம் கண்டுள்ளது.

மேடையில் அவரவர் மனங்களில் - எண்ணத்தில் - தோன்றுவதை எல்லாம் ஒப்புவித்தாலும், செயலளவில் ஜனநாயகத்தின் அடித்தளங்களையும், அவற்றின் உயிர் நாடிகளையும் சீண்டாமல் இருப்பது மிக அவசியம்.

ஆனால் இலங்கை உட்பட பல உலக நாடுகளில், சொல் ஒன்று செயல் வேறு என்ற போக்கில் ஜனநாயக மாண்புகளும், அவற்றின் பெறுமானங்களும் ஆட்சிக் கட்டிலில் உள்ளவர்களின் வசதிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப துண்டாடப்படுகின்றன; பல சந்தர்ப்பங்களில் சிதைக்கவும் படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக உள்ளவர்கள் மத்தியில் தாம் நினைத்தவாறு சிறுபான்மையினரின் அடிப்படை (மனித) ஜனநாயக உரிமைகளை மட்டுமன்றி, வாழ்வியல் உரிமைகளையும் சீண்டலாம் என்ற நிலை உருவாகி வருகிறது.

எத்தனை அனைத்துலக மாநாடுகள் இங்கு இடம்பெற்றாலும் அதில் மாற்றம் வருமா? அதற்கான எண்ணக்கரு எதுவும் ஆட்சியாளர்களிடம் உண்டா என்பனவுக்குச் செயலளவில் பதில் கிடைப்பதாக இல்லையே!

# மாகாணங்களுக்கு அதிகாரம் பகிரப்பட்டு இலங்கையில் சமஷ்டி ஆட்சி அவசியம்

### சுவிஸ் அரசியல் விவகார அமைச்சின் பொருளாதார அபிவிருத்தி அதிகாரி தெரிவிப்பு

சுவிஸில் 26 மாநிலங்களும் சுயமாக அதிகாரங்களைக் கொண்டு தாமே நிர்வகிக்கும் சமஷ்டி ஆட்சி முறை நடைமுறையில் உள்ளது.

அதேபோன்று இலங்கையிலும் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து அவை தங்களைத் தாங்களே நிர்வகிக்கும் சமஷ்டி ஆட்சி முறையை நடைமுறைக்கு கொண்டு வருவதே பொருத்தமானது.

இத்தகைய ஆட்சி முறையை கொண்டுவர சகல இனங்களும் பேச்சு நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இதையே இந்த நாட்டுக்கு நாம் தெரிவித்து வருகின்றோம்.

சுவிஸ் நாட்டின் அரசியல் விவகார அமைச்சைச் சேர்ந்த பொருளாதார அபிவிருத்தி அதிகாரி தமினானோ சுடே தமாத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காணாமல் போனோர் சர்வதேச தினத்தை முன்னிட்டு சுவிஸ் தலைநகர் பேர்னில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் போருக்குப் பின்னர் மீள் குடியமர்வு, அபிவிருத்தி என்பன முன்னெடுக்கப்படுகின்றன. சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் அதற்கு தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது. தற்சமயம் அங்குள்ள நிலைமை முன்னேற்றகரமாக இருப்பதாக எமது தூதரகம் ஊடாக நாம் அறிந்துள்ளோம்.

அந்த நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு உடன் இரண்டு விடயங்கள் பூர்த்தியாக வேண்டும்.

ஒன்று நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தி அந்த நாட்டில் நல்லிணக்கத்தை விரைவில் ஏற்படுத்த வேண்டும். அதற்கு சகல இனங்களும் ஒன்றுபட்டு பேச்சு நடத்த வேண்டும்.

அரசுக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுக்களில் ஏற்பட்ட தேக்கநிலை நீக்கப்பட்டு விரைவாக பேச்சு நடத்த வேண்டும். இந்தப் பேச்சுக்களில் சகல இனங்களும் பங்குபெற வேண்டும்.

இரண்டாவது, மனித உரிமை நிலைமை மேம்பட வேண்டும். மனித உரிமை நிலைமையை மேம்படுத்த நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்த சிபார்சுகள் விரைவில் நடைமுறைக்கு வர வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவால் சிபார்சுகளை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமை ஆணைக் குழுவால் கொண்டு வரப்பட்ட விசாரணைக்கு சுவிஸ் ஆதரவு வழங்கியது. அதன் மூலம் சுவிஸின் நிலைப்பாட்டை இலங்கைக்கு தெரிவித்தோம்.

எமது தூதரகம் மூலமும் ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு மூலமும் எமது நிலைப்பாட்டை இலங்கைக்கு தெரியப்படுத்தி வருகிறோம். இலங்கை விரைந்து செயற்பட்டு நல்லிணக்கத்தை கொண்டு வரவேண்டும் என்பதே எமது விருப்பம்.

இலங்கை நிலவரங்களை மதிப்பீடு செய்ய ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு இலங்கைக்கு செல்ல வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம். அந்தக் குழு அங்கு செல்ல அனுமதியை இலங்கை மறுத்து வந்தது. இப்போது அந்தக் குழு அங்கு செல்ல இலங்கை அனுமதி வழங்கியதை நாம் வரவேற்கிறோம்.-என்றார்.

சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் வெளிவிவகாரத்துக்கான ஆணைக்குழு உறுப்பினருமான மார்ரின்நப் பேசுகையில்:-

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. தொடர்ந்து பேச்சுக்கள் இடம்பெறுவதன் மூலமே அது சாத்தியமாகும். கீழ் மட்டத்திலிருந்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு மேல்மட்டம் வரை இடம்பெற்று தீர்வு காணப்பட வேண்டும். பேச்சுக்களில் சகல இனங்களும் உள்வாங்கப்பட வேண்டும்-என்றார். (ம-14)

# நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிந்தால்தான் இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைபெறும்

### இங்கு நடப்பவை எல்லாம் வெளி உலகுக்கு தெரியும் என்கிறது மிரர் பத்திரிகை

கொழும்பு,செப்.15

அரசு தரப்பு ஊடகங்கள் என்னதான் பெரிய அளவில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்திருந்த போதிலும் சர்வதேச சமூகத்தை இவை எந்தவகையிலும் கவர்ந்திழுக்கப்போவதில்லை. ஏனென்றால் பெரும்பாலான நாடுகளுக்கு இங்கே என்ன நடக்கிறது என்பது நன்றாகத் தெரியும்.

இவ்வாறு டெய்லிமிரர் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கம் ஒன்றில் தெரிவித்துள்ளது. கடந்த புதன் எழுதப்பட்டிருந்த அந்தத் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த மேலும் சில கருத்துக்கள் வருமாறு:-

நாட்டின் நிதி வளங்கள் ஆளணி வளங்களை பகிரங்கமாகப் பயன்படுத்திக் கொண்டு, சட்டவிரோதமாக ஆயிரக்கணக்கான பட்டதாரிகளுக்கு அரச நியமனங்களை வழங்கிக் கொண்டு, கிழக்கு மாகாணத்தில் வன்முறைகளையும் காடைத்தனங்களையும் கட்டவிழ்த்து விட்டு நடத்தப்பட்ட தேர்தல் இயக்கம் குறித்து என்னதான் செய்திகளின் தாக்கம் இங்கு தணிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்தாலும் இவைகள் குறித்து இந்தியாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் நன்றாகத் தெரியும்.

ஆகவே தேர்தல் முடிவுகள் குறித்து அலட்டிக் கொண்டிருக்காமல் முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இவைகளில் ஒன்று எல்லா வகை அதிகாரங்களையும் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகும். நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக் கட்டினாலேயல்லாமல் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியாது.

சுயாதீனமான தேர்தல்களையும் நடத்த முடியாது என்று சமூக நீதிக்கான அமைப்பும் வேறு நிறுவனங்களும் கூறி வருகின்றன.வேறு தேர்தல்கள் எதுவும் நடத்தப்படுவதற்கு முன்பதாக இந்த விடயத்தை சகல எதிர்க் கட்சிகளும் வற்புறுத்த வேண்டும். இனப்பிரச்சினைக்கும் கூட நீதியான மற்றும் நியாயமான ஒரு தீர்வினை வேகமாக கொண்டு வருவதற்கு சகல அதிகாரங்களையும் கொண்ட ஒரு தனிமனிதனில் அல்லது ஒரு குடும்பத்தில் தங்கியிராமல் ஒரு மத்திம வழியில் செயல்பட எல்லா தரப்பினர் மத்தியிலும் ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும்.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பருவகால ஆய்வு பற்றி மிரர் தலையங்கத்தில் குறிப்பிடுகையில் இந்த ஆய்வு இந்தியாவின் தலைமையில் ஸ்பெயின் மற்றும் பெனின் குழுவினால் நடத்தப்படவிருக்கின்றது.

இவை இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தவை. எனவே இங்கு நடப்பவைகள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். அதனால் இலங்கைக்கு அனுகூலமற்ற ஓர் அறிக்கை அங்கே உருவாகுவதும் சாத்தியமாகும் என்று தெரிவித்துள்ளது. (ப)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் 10 மாதங்களின் பின் செயலகத்தில்

### கடந்த கூட்ட அறிக்கை இதுவரை கிடைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், செப்.15

10 மாதங்களின் பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது. கடந்த வருடம் நவம்பர் மாதம் கிளிநொச்சியில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு பின்னர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.செயலகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் தலைமையில் கூட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 54 திணைக்களங்களின் தலைவர்களுக்கும் கடிதம் மூலம் யாழ்.அரச அதிபர் சு.அருமைநாயகம் இந்த விடயம் குறித்து தெரியப்படுத்தி உள்ளார்.

இதேவேளை கடந்த வருட ஒருங்கிணைப்பு குழு கூட்ட அறிக்கை 10 மாதங்கள் கடந்த நிலையிலும் அனுப்பி வைக்கப்படவில்லை என்று திணைக்களத் தலைவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம் தீரா நினைவுகள்

■ ஆதங்கன்



'யாழ். கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கிறதோ அன்றுதான் சுதந்திர தமிழீழத்தின் ஆரம்பம்.மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்''

"எமது அரசியல் தலை விதியை இந்தியா என்கின்ற எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவுசெய்திருக்கும் நிலையில் எம்மால் என்ன செய்ய முடியும்? பேரினவாத சிங்கள அரசு மீண்டும் தமிழின ஒழிப்பைத் தொடங்குவதற்கு இந்தியா அனுமதியமளிக்கமாட்டாது என்று நாம் நம்புகின்றோம்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்திய அமைதிப்படையிடம் எமது ஆயுதங்களை ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளோம்.

ஆயுதங்களை நாங்கள் ஒப்படைக்கவில்லையானால் நாம் இந்தியப் படைகளுடன் மோதுகின்ற சூழ்நிலை உருவாகும். இது எமக்குத் தேவையில்லை.

நாம் இந்தியாவை நேசிக்கின்றோம். இந்திய மக்களை நேசிக்கின்றோம்.எமது எதிரிகளிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பினை இந்தியப்படைகள் ஏற்கின்றன.

எமது ஆயுதங்களை நாம் இந்தியப் படையினரிடம் ஒப்படைப்பதன் மூலம் ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரது உயிருக்கும் முழுப் பாதுகாப்பை வழங்கும் பொறுப்பினை இந்திய அரசு ஏற்கின்றது என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்திய அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை'' -

*04.08.1987* அன்று சுதுமலை அம்மன் ஆலய முன்றலில் ஆயுத ஒப்படைப்பு நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உதிர்த்த வார்த்தைகள் இவை.

ஆனாலும் இந்த நம்பிக்கையை இந்தியா துளியேனும் காப்பாற்றவில்லை. தமிழர்களின் பாதுகாப்புக் கவசங்களாக விளங்கிய ஆயுதங்களை களைவதில் காட்டிய அக்கறையை அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் காட்ட மறுத்தது. இலங்கை இராணுவத்தை விடவும் வெறித் தனமான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளத் தொடங்கியது.

எப்போதும் ஈழத் தமிழர்களுக்கு இந்தியா மீது பிடிப்பு அதிகம். அவர்கள் இலங்கையை நேசிப் பதை விடவும் இந்தியா மீதான நேசிப்பையே அதிகம் கொண்டிருந்தனர். அதனாற்றான் இலங்கை வானொலியை விடவும் இந்திய ஆகாசவாணியின் செய்திகளையே நம்பியிருக்கத் தொடங்கினர். தமிழர்களுக்கு ஒரு தீர்வு வருமாக இருந்தால் அது இந்தியாவால் மட்டுமே சாத்தியம் என்பது அநேகரின் அசைக்க முடியாத நம்பிக்கை.


அந்த நம்பிக்கையை மெய்ப்பிப்பது போல இந்தியாவும் சில காரியங்களில் இறங்கியிருந்தது. தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குதல், அந்தக் குழுக்களுக்கான தளங்களை தமிழகத்தில் அமைத்துக் கொடுத்தல், நிதி உதவி செய்தல் என்று இந்தியாவின் 'அக்கறைகள்' ஈழத் தமிழர்களை ஆனந் தக் கடலுக்குள் இறக்கிவிட்டன. இந்திய அக்கறையின் உச்சக்கட்டமாக, இலங்கை அரசின் பொருளாதாரத் தடையால் ஈழமக்கள் பட்டினிச் சாவை எதிர் கொண் டிருந்த சமயத்தில், 'ஒப்ரேசன் பூமாலை' என்ற பெயரில் ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வானதிர எங்கும் பறந்த 'மிராஜ்' விமானங்கள் ஆங்காங்கே உணவுப் பொட்டலங்களை வீசி, ''இலங் கைத் தமிழர்களுக்கு ஏதாவது நடந்தால் நாம் சும்மா இருக்க மாட்டோம்'' என்ற செய்தியை இலங்கை அரசுக்குச் சொல் லிப்போயின. அதன்பின் அரண்டுபோன இலங்கை இந்தியாவிடம் சரணாகதியடைந்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழர் பகுதிகளுக்குள் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவம், பெரும் படைத்தளங்களுக்குள் முடங்கிக்கொள்ள இந்திய ஜவான்களின் பிரசன்னம் நிகழ்ந்தது.

வந்தவர்களை ஆராத்தி எடுத்து மகிழ்ந்தனர் தமிழர்கள். தொப்புள்கொடி உறவுகள் அல்லவா? மகிழாமல் இருக்கமுடியுமா? ஆனாலும் புலிகளுக்கு இந்தியாவின் உண்மை முகம் நன்றாகவே தெரிந்திருந்தது. மக்களின் நம்பிக்கையோ வேறு விதமாக இருந்தது. தன் கோர முகத்தை மறைக்க இந்தியா பூசியிருக்கும் அரிதாரத்தை, இயல்பாகவே அழிந்துபோக வைக்க புலிகள் எடுத்த முடிவுதான் ஆயுத ஒப்படைப்பு.

ஆயுதங்கள் அற்ற புலிகளோடும், பாதுகாப்பு இழந்த மக்களோடும் சீண்டி விளையாடத் தொடங்கியது இந்தியா. தாம் முன்வைத்த அரைகுறைத் தீர்வை தமிழர்கள் விழுங்கியே ஆகவேண்டும் என்று விடாப்பிடியாக நின்றது. மெல்ல மெல்ல அதன் அரிதாரப்பூச்சு அழியத் தொடங்கியது. இந்தியாவின் கடைவாயில் துருத்திக்கொண்டிருக்கும் வேட்டைப் பற்களையும் மக்கள் உணரச் செய்வதற்காக புலிகள் இன்னொரு போராட்ட வடிவத்துக்கு புகுந்தனர்.

உலகத்துக்கே அஹிம்சையை போதித்ததாக மார்தட்டிக்கொள்ளும் இந்தியாவை அதே அஹிம்சையை ஆயுதமாக வைத்து மக்களின் பிரச்[illegible] முடியும் என புலிகள் [illegible] தீர்மானத்துக்கு செயல் கொடுத்தவன்தான் ஊரெழு மைந்தன் திலீபன். இராசையா பார்த்தீபன் என்ற இயற் பெயர் உடைய திலீபன் மக்களுக்காக தன்னுடைய சொந்த வாழ்வையே தூக்கி எறிந்தவர். மருத்துவ பீடத்துக்கு தெரிவாகிய போதும், அதனைவிட மக்களின் விடிவுக்கான போராட்டமே மேல் என்று தலைவரின் பின்னால் அணி வகுத்தவன்.



அவனுடைய அர்ப்பணிப்பும் ஓர்மமும் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக திலீபனை உயர்த்தியது. விடுதலை கனல் கக்கும் அவனது குரல் மக்களை காந்தமாக வசீகரித்தது. உரிமைப் போரின் அவசியம் பற்றி திலீபனின் வார்த்தைகள் மக்களுக்கு தெளிவைக் கொடுத்தன. ஒரு சமரில் திலீபன் வயிற்றில் படுகாயம் அடைந்திருந்தான்.

இந்தியாவின் கோரமுகத்தைக் கிழிக்க 25 வருடங்களுக்கு முன்னர் இதேநாளில் (15.09.1987) நல்லூரின் வீதியில் உண்ணா நோன்பு யாகத்தில் ஆகுதியாக தன்னை ஈடுபடுத்துவதற்காக மேடையில் ஏறினான் திலீபன். அஹிம்சையின் அனலில் வேகத் தொடங்கியது பாரதம்.

தீர்க்க தரிசனம் மிக்க 5 கோரிக்கைகளை முன்வைத்து திலீபனின் பட்டினிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பாரதத்தில் ஆட்சியில் இருந்த நேருவின் பேரன் திலீபனின் தியாகத்தை கண்டும் காணாதவர் போல தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். நல்லூரின் வீதியில் எப்படியும் காந்திய தேசத்துக்கு அஹிம்சையை கற்பித்து, மக்களுக்கு விடிவைப் பெற்றுத் தந்துவிட வேண்டும் என்ற கனவுடன் திலீபன் ஒவ்வொருநாளும் அணுஅணுவாக செத்துக்கொண்டிருந்தான். தன்னை உருக்கி பிறருக்கு ஒளிகொடுக்கும் மெழுகுவர்த்தியாக ஒவ்வொரு கணத்திலும் உருகிக் கொண்டே இருந்தான். அருவியாக பெருகத் தொடங்கிற்று. கூடியிருந்த மக்கள் கண்களில் விழி நீர். வானமும் ஊரெழு மைந்தனின் உயிர்கொடையை நினைத்து ஓ என்று கண்ணீரைப் பொழியத் தொடங்கியது பெரு மழையாக. கொட்டும் மழையிலும் திலீபனின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழர் தேசமெங்கும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் நல்லூரில் குவியத் தொடங்கினர்.

"திலீபா எங்களைவிட்டுப் போய்விடாதே"

'' இந்திய தேசமே! எங்களுக்காக உயிர்கொடை செய்தபடியிருக்கும் எங்கள் பிள்ளையைக் காப்பாற்று''

பல்லாயிரக்கணக்கான மக்களின் இந்த வேண்டுதல்களை காலால் நசுக்கியது அதிகாரம். இந்தியாவின் காந்திய முகத்தை அர்த்தமிழக்கச் செய்துவிட்டு, உண்ணா நோன்பின் 12 ஆவது நாளில் (26.09.1987) பகல் 10.48 மணிக்கு தன் கடைசி உயிர்த் துளியையும் உதறிவிட்டு விண்ணேறினான் திலீபன்.

"புலிகள் ஆயுதங்களின் மீது மட்டுமே காதல் கொண்ட தீவிரவாதிகள்'' என்ற கருத்தியலை, திலீபனின் பன்னிரு நாள் பட்டினிப் போராட்டம் தலைகீழாக மாற்றியிருந்தது. மக்களுக்காக எத்தகைய வடிவங்களிலும் போராடி தங்கள் உயிர்களை ஈகையாக்குவதற்கு புலிகள் தயார் என்ற செய்தியை திலீபனின் சாவு உலகெங்கும் விதைத்தது.

மரணித்த பின்னும் தன் உடல் கூட வீணாகக் கூடாது என்பதில் திலீபன் உறுதியாக இருந்தான். திலீபனின் கோரிக்கையின் படி மருத்துவ பீடத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. அவனின் சாவுக்குப் பின்னர் "எங்களை இந்தியாவே காப்பாற்றும்'' என்ற மக்களின் நம்பிக்கை தகர்ந்து போனது. தன்னை மூடியிருந்த எல்லா மாயத் திரைகளும் விலக்கப்பட்டுவிட, தன் கொலைகார முகத்தோடு வெளிப்பட்டது இந்தியா. "இத்தனை நாளும் எங்களின் மீட்பர் என்று நம்பியது ஒரு இரத்தக்காட்டேரியைத் தான்'' என்ற உண்மையை திலீபனின் மரணம் மக்களுக்கு உறைக்கவைத்தது.

அதன் பின் மக்களின் ஆதரவோடு உலகின் வல்லரசுகளில் ஒன்றான இந்தியாவுக்கு எதிராக களமாடி வென்றார்கள் புலிகள். அதன் பின்னும் ஒவ்வொரு போராளியும் திலீபனின் கனவுகளை சுமந்துகொண்டிருந்தார்கள்.

"யாழ். கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கிறதோ அன்றுதான் சுதந்திர தமிழீழத்தின் ஆரம்பம்.மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்'' என்று அடிக்கடி திலீபன் தன் சக போராளிகளிடமும் மக்களிடமும் தனக்குள் இருக்கும் கனவை விபரிப்பதுண்டு. அந்தக் கனவை சரியாக நான்கு வருடங்கள் கழித்து திலீபன் உயிர் நீத்த நாளில் நனவாக்கினர் புலிகள். நூற்றாண்டுக் கணக்கில் அந்நியர்களின் குறியீடாக நிமிர்ந்து நின்ற கோட்டையில் புலிக்கொடி பறந்தது.

ஆயினும் திலீபன் யாகத்தில் ஆகுதியாகி 25 வருடங்கள் கழிந்த பின்னரும்கூட அவனது கோரிக்கைகள் எந்தவொரு ஆட்சியாளராலும் நிறைவேற்றப்படவேயில்லை. இந்தக் கோரிக்கைகள் இன்னமும் ஆத்மசாந்தி அடையாமல் அலைந்து கொண்டே இருக்கின்றன.

"நிறைவேற்றப்பட முடியாத-தேவையற்ற-கோரிக்கைகளை முன்வைப்பதன் ஊடாக சமாதான நடவடிக்கைகளை குழப்புவதே புலிகளின் வாடிக்கை. திலீபனின் கோரிக்கைகளும் அப்படியானவையே '' என்று இன்றைக்கும் கிளிப்பிள்ளை போல் சொல்லிக்கொண்டிருக்கும் 'அதிகார அடிவருடிகளும்' இருக்கவே செய்கிறார்கள்.

ஆனால் அவனது கோரிக்கைகளில் இருந்த தீர்க்க தரிசனமும், அவசியத்தன்மையும் இப்போது தெரிகிறது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் அறுவடையாலேயே கிழக்கில் தமிழர்களால் ஆட்சியமைக்க முடியாமல் போயுள்ளது. அதிகரித்த படைத்தரப்பின் பிரசன்னத்தால் தமிழினம் தொடர்ந்தும் அழுந்திக்கொண்டே இருக்கிறது. அரசியல் கைதிகள் விடுதலை நாள் எதுவென்று தெரியாமல் இன்னமும் சிறைப்பறவைகளாக்கப்பட்டு கூண்டுகளுக்குள்ளேயே அடித்துக் கொலைசெய்யப்படுகிறார்கள்.பாடசாலைகள், ஆலயங்கள்,கிராமங்கள் என்பன உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பேரில் படைத்தரப்பால் விழுங்கப்பட்டு வருகின்றன. ஒட்டுக்குழுக்களிடம் மறைந்திருக்கும் ஆயுதங்கள் களையப்படவேயில்லை துப்பாக்கி முனைகள் இன்னமும் மக்களைக் குறிவைத்தபடியேதான். தாகமடங்கா நினைவுகளாக அலைதலுக்கு உள்ளாகின்றன திலீபனின் கோரிக்கைகள். அவையே மக்களின் மனங்களிலும், அவனுக்கான அஞ்லிப்புகளையும் உற்பத்திசெய்கின்றன. ஆயிரம் ஆயிரம் காலங்களுக்கு நல்லூரின் வீதியில் நடந்த யாகத்தில் ஆகுதியானவனின் நாமத்தை தமிழ் மக்கள் உச்சரித்துக்கொண்டிருப்பார்கள்.

## கோரிக்கைகள் 5

*பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக் காவலில் மற்றும் சிறைகளில் உள் ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

*புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத்தப்ப டும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண் டும்.

*இடைக்கால அரசு நிறுவப்படும்வரை ''புனர்வாழ்வு'' என்று அழைக்கப்படுகின்ற சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

*வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் புதிதாகத் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

* ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, பாடசாலைகள் , தமிழ்க் கிராமங்கள் ஆகிய வற்றில் உள்ள இராணுவ மற்றும் பொலிஸ் நிலைகள் மூடப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் சாவகச்சேரி செருக்கல் பதி பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய வளாகத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். (ம-9)

# தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 6,496 குடும்பங்கள் குடியமரவில்லை

## 24 கிராமசேவகர் பிரிவுகள் படையினரிடம்

யாழ்ப்பாணம், செப்.15

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 24 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிக்கப்படாமல் இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதன் காரணமாக 6 ஆயிரத்து 496 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 514 பேர் சொந்த இடங்களில் மீளக்குடியமரவில்லை என்று தெல்லிப்பழை பிரதேச செயலர் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே பிரதேச செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவின் மொத்த நிலப்பரப்பின் 45 வீதமான நிலப்பகுதி இன்னமும் விடுக்கப்படாமலேயே உள்ளது. இதன் காரணமாக 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னதாக 23 ஆயிரத்து 351 குடும்பங்களைச் சேர்ந்த 83 ஆயிரத்து 618 பேர் வசித்தனர். தற்போது 9 ஆயிரத்து 999 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 790 பேர் வசிக்கின்றனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் வரையில் 2 ஆயிரத்து 140 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 630 பேர் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர். இராணுவத்தினரால் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் 4 ஆயிரத்து 562 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 613 பேர் மீளக்குடியமரவில்லை.

இதனைவிட இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள் 24 கிராமசேவகர் பிரிவுகள் கையடக்கப்பட்டிருப்பதன் காரணமாக 6 ஆயிரத்து 496 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 514 பேர் சொந்த இடங்களில் மீளக்குடியமரவில்லை என்று தெரிவித்தார். (ம-5)

# வறட்சியான காலநிலையால் கால்நடைகள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், செப்.15

தீவகத்தில் வறட்சியால் தண்ணீர் இன்றி கால்நடைகள் உயிரிழந்து வரும் நிலையில் ஒரு பகுதியினர் தமது கால்நடைகளை உரிய அனுமதி மற்றும் நிபந்தனைகளுடன் வன்னிக்குக் கொண்டு சென்று தமது உறவினர் வீடுகளில் வைத்து வளர்த்து வருகின்றனர்.

கடுமையான நிபந்தனைகளுடன் அதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது என்று வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் யோ.வசீகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடுமையான வறட்சியால் கால்நடைகள் உயிரிழந்து வருகின்றன. தண்ணீர் கிடைக்காமையே பிரதான காரணியாக உள்ளது. அதனால் ஒரு பகுதியினர் உள்ளூர் கால்நடைகளை வன்னிக்குக் கொண்டு சென்று அங்கு தமது உறவினர்களது வீடுகளில் விடுகின்றனர்.

உறவினர்களும் தமது கால்நடைகளுடன் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வரும் கால்நடைகளையும் சேர்த்து வளர்த்து வருகின்றனர்.

நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவர் தனது 160 உள்ளூர் ஆடுகளையும் வன்னிக்குக் கொண்டு சென்று அங்கு வைத்து வளர்ப்பதற்கான அனுமதியை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியிடம் கோரியுள்ளார்.

சில எண்ணிக்கையான கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கு மாத்திரம் பிரதேச செயலகங்களால் அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் கொண்டு செல்லப்படும் கால்நடைகள் யாருடையது அவை வன்னிக்குக் கொண்டு சென்று யாருடைய பாதுகாப்பில் வைத்து பராமரிக்கப்படுகின்றன என்பது பற்றிய விவரங்கள் பெறப்பட்டு கால்நடைகளுக்கு இலக்கங்கள் குத்தப்பட்டு வருகின்றன. அவை கொண்டு செல்லப்படும் வாகனங்கள் பற்றிய பதிவு, விவரம் உள்ளிட்ட விடயங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலும் சரி வன்னியிலும் சரி அந்தப் பகுதி கால்நடை வைத்திய அதிகாரிகளின் கண்காணிப்பில் அதிக எண்ணிக்கையான கால்நடைகள் கொண்டு செல்லப்பட்டால் அவை பற்றி கவனம் செலுத்தப்படும்.

வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுவதைத் தடுக்கும் நோக்குடன் இந்தக் கடுமையான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிக எண்ணிக்கையான கால்நடைகளை வன்னிக்குக் கொண்டு செல்வதற்கென ஒருவர் மாத்திரம் விண்ணப்பத்துள்ளார். அது பற்றிப் பரிசீலித்து வருகிறோம்- என்றார். (ம-4)

# டெங்கால் ஏற்படும் பிரச்சினைக்களை ஆராய்வதற்குப் புதிய சட்ட ஒழுங்கு

யாழ்ப்பாணம், செப்.15

டெங்கு நுளம்பின் அதிகரிப்பால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு புதிய சட்ட ஒழுங்கை முன்வைத்துள்ளது.

> நாடு முழுவதும் டெங்கு தாக்கம் அதிகரித்து வருகிறது.

டெங்கு நோய் தாக்கத்தை குறைத்தல் எனும் விடயத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடு முழுவதும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது.

இதற்கு முறையான கட்டுப்பாடுகளையும் தீங்கு ஏற்படாத வழி வகைகளையும் உள்ளூராட்சி சபைகள் ஏற்படுத்த வேண்டும்.

இதன் முதற்கட்டமாக ஜனாதிபதியின் விசேட அறிவித்தலின் பிரகாரம் உள்ளூராட்சி சபைகள் கட்டட அனுமதிப் பத்திரம் வழங்கும்போது விசேடமாக அந்தக் கட்டடத் தொகுதியால் டெங்கு அபாயம் இல்லை என்பதை சுகாதார வைத்திய அதிகாரி உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

அத்துடன் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

கட்டட உரிமையாளர்கள் கட்டடங்களை கட்டும் போது டெங்கு நோய் தாக்கம் ஏற்படாது இருப்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-50)

## வீதியில் சறுக்கின கற்கள்; வீழ்ந்ததில் பறந்தன பற்கள்

வீதி அகலிப்பு பணிக்காக போடப்பட்டிருந்த கற்களில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் அதில் பயணித்த குடும்பஸ்தர் தூக்கி வீசப்பட்டு வீழ்ந்ததால் வாய் முன்பற்கள் பறந்தன.

இந்தச் சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றது.

மிருசுவில் தெற்கைச் சேர்ந்த 31 வயதான நபர் ஒருவரே இவ்வாறு காயமடைந்தவர். இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சைக்கிளிலிருந்து வீழ்ந்த வயோதிபருக்கு இடுப்பு எலும்பு உடைந்தது.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாவகச்சேரி சிவன் ஆலய கணக்காளர் கந்தையா (வயது- 83) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

# தனங்களப்பு நெற்செய்கையாளருக்கு உரமானியப் படிவம் கிடைக்கவில்லை

தென்மராட்சி, செப்.15

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கு இதுவரை உர மானியப் படிவங்கள் வழங்கப்படாதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

> பிரதேசத்தில் பெரியளவான நெல் வயல்களைக் கொண்ட தனங்களப்பு கமக்கார அமைப்பு பிரிவில் மட்டும் இதுவரை படிவங்கள் வழங்கப்படவில்லை.

பிரதேசத்தில் உள்ள அனைத்து கமக்கார அமைப்புக்களும் தமது பிரிவுக்குட்பட்ட நெற்செய்கையாளர்களிடம் உர மானிய விண்ணப்பப் படிவங்கள் பெற்று உரிய கமநல சேவைகள் நிலையத்தில் கையளித்துள்ளன.

எனினும் பிரதேசத்தில் பெரியளவான நெல் வயல்களைக் கொண்ட தனங்களப்பு கமக்கார அமைப்பு பிரிவில் மட்டும் இதுவரை படிவங்கள் வழங்கப்படவில்லை.

இதனால் உரமானியத்துக்கு விண்ணப்பிக்க முடியாமல் போய்விடுமென அச்சம் கொண்டுள்ளனர்.

இதேவேளை, படிவம் பெறுவதற்கு பல நெற்செய்கையாளர் கமநல சேவைகள் நிலையத்துக்கு சென்று படிவம் கிடைக்காமல் திரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாகக் கைதடி கமநல சேவைகள் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

படிவங்களைப் பெற்று நெற்செய்கையாளர்களுக்கு வழங்குமாறு தனங்களப்பு கமக்கார அமைப்பின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு பல தடவைகள் அறிவித்தும் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# வலி. வடக்கில் மின்சாரம் விநியோகிக்க 'வடக்கின் வசந்த' நிதி கிடைக்கவில்லை

## சுன்னாகம் பிராந்திய பொறியியலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.15

வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள இடங்களில் பல பகுதிகளுக்கு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் மின்விநியோகம் செய்வதற்கு அமைச்சிலிருந்து இன்னமும் நிதி வழங்கப்படவில்லை என்று மின்சார சபையின் சுன்னாகம் பிராந்திய பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பொதுமக்கள் தமக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக இலவச மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினர். அத்துடன் தெல்லிப்பழை பிரதேச செயலரால் மக்கள் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் 14.95 கிலோமீற்றர் பகுதிக்கும் ஏனைய பகுதிகளில் 14.95 கிலோ மீற்றர் பிரதேசத்துக்கும் இன்னமும் மின் விநியோகம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த மின்சார சபையின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன், கொல்லன்கலட்டி பகுதிக்கு மின்விநியோகம் மேற்கொள்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதற்கான வேலைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும்.

தந்தை செல்வாபுரம் பிரதேசத்தில் பிரதான மார்க்கத்தில் மின்விநியோகம் முடிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் தமது வீட்டு மின் இணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்யாததால்எம்மால்இணைப்பை வழங்க முடியாதுள்ளது. மேலும் நாங்கள் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளும்போது தந்தை செல்வாபுரத்தில் உள்ள 2 வீதிகள் பற்றைக் காடுகளாக இருந்தன. இதனால் நாம் மதிப்பீடுகள் மேற்கொள்ளாதது டன் மின் இணைப்பும் வழங்கவில்லை. இனி அடுத்த கட்டத்தில்தான் அந்தப் பகுதிகளுக்கு மின் வழங்க முடியும்.

எமக்குத் தற்போது வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இலவச மின்விநியோகம் மேற்கொள்வதற்கு அமைச்சிலிருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் வழங்கப்பட்ட மக்களுக்கு ஒரு வருடம் இலவச மின்விநியோகம் என்ற திட்டம் கடந்த வருடத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பணம் செலுத்த வேண்டும் என்று கூறினார்.

பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தனல் வீதி விளக்கு பொருத்துவதற்கு மின்சார சபை கட்டணம் அறவிடாமல் செய்ய முடியுமா என்று கேட்டபோது மனித வலுவைப் பயன்படுத்தியே மேற்கொள்வதால் அரைவாசிப் பணத்தைச் செலுத்துமாறும் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்கள் சுய கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பிடிப்பது அவசியம்

## மன்மோகன் சிங் கருத்து



சமுதாயத்தைப் பாதிக்கக்கூடிய செய்திகளை வெளியிடும்போது ஊடகங்கள் சுய கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

கேரள மாநிலம், கொச்சியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் பொன்விழாவில் பிரதமர் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் பல்வேறு மதங்கள், இனங்கள், மொழிகள், கருத்துகளைக் கொண்ட மக்கள் வசிக்கின்றனர்.

இதுபோன்ற பன்முகத்தன்மை கொண்ட சமூகங்கள் உள்ள நாட்டில் எதிர்க்கருத்துகளை சுதந்திரமாக தெரிவிக்கக்கூடிய சூழ்நிலை நிலவுவது நமது தனிச்சிறப்பாகும்.

இத்தகைய சூழ்நிலை இந்நாட்டில் நிலைத்து நிற்க பொறுப்பை உணர்ந்து செயற்படக் கூடிய சுதந்திரமான ஊடகத்துறை அவசியமாகும்.

இரு பிரிவினருக்கிடையே நிலவும் பிரச்சினை குறித்த செய்திகளை நேர்மையாகவும், பாரபட்சமின்றியும் வெளியிட வேண்டும்.

பரபரப்பூட்டுகிற செய்திகளை வெளியிடும்போது சுய கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டால் மக்களிடையே பிளவு ஏற்படாது. எனவே, இதுபோன்ற செய்திகளை எழுதும்போதோ ஒளிபரப்பும் போதோ கவனமுடன் இருக்க வேண்டும்.

இப்போது எமது நாடு கடினமான கால கட்டத்தில் உள்ளது. கடந்த சில மாதங்களாக நடைபெற்றுவரும் நிகழ்வுகள் சமுதாயத்தில் பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன-என்றார்.

## நபியை அவமதிக்கும் திரைப்படத்துக்கு இந்தியாவிலும் கடுமையான எதிர்ப்பு

இஸ்லாமியர்களுக்கு எதிராக அமெரிக்கா வெளியிட்ட படத்துக்கு இந்தியாவிலும் எதிர்ப்புகள் உருவாகியுள்ளது.

Innocense of Muslims எனும் பெயரில் அமெரிக்காவில் வெளியாகியுள்ள திரைப்படம் இஸ்லாமியர்களையும், முகம்மது நபி அவர்களையும் கேலி செய்யும் விதமாக சித்தரிக்கப்பட்டுள்ளதாக இஸ்லாமிய நாடுகள் குற்றச் சாட்டு வைத்துள்ளன.

இந்தத்திரைப்படத்தை எதிர்த்து எகிப்து, லிபியா மற்றும் யேமனில் இஸ்லாமியர்கள் கடும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

லிபியாவின் பெங்காஸி நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் அலுவலகம் தீ வைக்கப்பட்டதுடன் இந்தத் தாக்குதலில் லிபியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் கிறிஸ் ஸ்டீவன் மற்றும் மேலும் மூன்று அமெரிக்கர்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் இந்தியாவிலும் இத்திரைப்படத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் உருவாகும் சூழ்நிலைகள் அதிகரித்துள்ளது.

**இந்தத் திரைப்படத்தை எதிர்த்து எகிப்து, லிபியா மற்றும் யேமனில் இஸ்லாமியர்கள் கடும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட்டு பாபுலர் பிரண்ட்ஸ் ஒப் இந்தியா அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த முனைந்ததாகவும், பொலிஸார் அவர்களை தடுத்து கைது செய்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜம்மு காஷ்மீர் அரசு உள் துறை அமைச்சகத்திடம், இப்படம் வெளியான இணையத்தளப் பக்கங்களுக்கு தடை விதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

## இந்தியாவின் புதிய தலைமை நீதிபதியாக அல்டமாஸ் கபீர்



இந்தியாவின் புதிய தலைமை நீதிபதியாக அல்டமாஸ் கபீர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 29 ஆம் திகதி அவர் பதவி ஏற்கவுள்ளார்.

இதுவரை தலைமை நீதிபதியாக பதவி வகித்துவந்த எஸ்.எச்.கபாடியா ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து இந்தப்பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் 1948 ஆம் ஆண்டு பிறந்த அல்டமாஸ் கபீர், கொல்கத்தாவில் சட்டம், மற்றும் முதுகலை பட்டப் படிப்பை மேற்கொண்டார். 1990 ஆம் ஆண்டு கொல்கத்தா உயர் நீதிமன்றத்தால் நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 2005 ஆம் ஆண்டு கொல்கத்தா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி யாக தற்காலிகமாக பதவியேற்றவர். (வ)

## ஜெகன் மோகன் காவல் நீடிப்பு


ஆந்திராவில் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டியின் பிணை மனு மீதான விசாரணையை எதிர்வரும் 28 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

இத னால், சன்சல்குடா சிறைச்சாலையிலேயே ஜெகன் இன்னும் 2 வார காலம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்த வழக்கில் கடந்த மே 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஜெகன் மோகன் ரெட்டி, ஆந்திர உயர் நீதிமன்றம் தனது பிணை மனுவை நிராகரித்ததை அடுத்து உச்ச நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்தார். (வ)

## தாழ்வாகப் பறந்த விமானம் ஒருவரின் உயிரைப்பறித்தது

### இடிந்த கரையில் சோகம்



கூடங்குளம் அணு உலையில் யுரேனியம் நிரப்பு வதை உடனே நிறுத்த வலியுறுத்தி இடிந்தகரை உள்ளிட்ட கிராம மீனவர்கள் நேற்று முன்தினம் கடலில் நின்று போராட்டம் நடத்திய போது, கடற்படை விமானம் போராட்டக்காரர்களை அச்சுறுத்துவது போல தாழ்வாகப் பறந்ததால் பீதியடைந்த 5 போராட்டக் காரர்கள் நிலை தடுமாறி கடலில் விழுந்தனர். அதில் ஒருவர் உயிரிழந்தார்.

மக்கள் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட போது சிலர் தூண்டில் பாலத்தில் நின்றபடி போராட்டத்தைப் பார்த்தனர்.

அப்போது பல முறை விமானம் மிகத் தாழ்வாக பறந்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தி குழந்தைகளைப் பயமுறுத்தியது. விமானம் மிகமிக தாழ்வாக பறக்கும்போது பாலத்தில் இருந்து கைக்கு எட்டும் தூரத்தில் விமானம் இருந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

அந்த சமயத்தில் தான் பாலத்தில் இருந்து சகாயம் கீழே விழுந்துள்ளார். கீழே விழுந்தவர் காயங்களுடன் ஜெயசெகரன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (வ)



உத்தரப்பிரதேச மாநிலம், அமேதி தொகுதிக்கு சென்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல், அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு யூகோ வங்கி கிசன் அட்டை வழங்கினார்.

## ஸ்டாலின்- அழகிரி தொண்டர்களுக்குள் மோதல்

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகன் களான ஸ்டாலின், அழகிரி தொண்டர்கள் மதுரையில் மோதிக் கொண்டனர்.

மதுரை மாநகராட்சியின் நிர்வாகச் சீர்கேட்டினைக் கண்டித்து தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாநகர தி.மு.க. செயலர் கோ. தளபதி தலைமை வகித்தார். நிர்வாகிகள் பொன். முத்துராமலிங்கம், இளைஞர் அணி செயலர் ஜெயராமன், முன்னாள் சட்டசபை உறுப்பினர் பாஷா, முன்னாள் துணை மேயர் டி.எம். மன்னன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். அப்போது ஸ்டாலின் ஆதரவாளர்களுக்கும், மத்திய அமைச்சர் அழகிரி ஆதர வாளர்களுக்கும் திடீரென மோதல் ஏற்பட்டது.

இரு தரப்பினருக்கு மத்தியில் வாக்குவாதத்தில் ஆரம்பித்த சண்டை, பின்னர் இலேசான கைகலப்பு ஏற்பட்டதால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற் பட்டது.

பின்னர் பொலிஸாரும் திமுக மூத்த நிர்வாகிகளும் மோதலில் ஈடுபட் டவர்களை சமாதானப்படுத்தினர்.

இதுபோன்ற மோதல் இதற்கு முன்பும் நிறைய தடவை ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் மு.க. அழகிரி, திமுகவில் ஸ்டாலின் ஆள்கள், அழகிரி ஆள்கள் என்று பிரிவினை கிடையாது.

அனைவரும் கருணாநிதியின் ஆள்கள்தான் என விளக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்கு வங்கத்துக்கு பிரணாப் சுற்றுப்பயணம்

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மேற்குவங்க மாநிலத்தில் நான்கு தினங்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி முதன் முறையாக தன்னுடைய சொந்த மாநிலமான மேற்கு வங்கத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதனடிப்படையில் நேற்று தனது சுற்றுப்ப யணத்தை ஆரம்பித்தார். (வ)

## சென்னை அமெ. தூதரகத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

சென்னை,செப்.15

தீவிரவாதிகளின் தாக்குதல் எதிரொலியால், சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு, 'கொமாண்டோ' பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

எகிப்து, லிபியா நாடுகளில் உள்ள, அமெரிக்க தூதரகத்தின் மீது, ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர், கடந்த புதன்கிழமை தாக்குதல் நடத்தினர்.

லிபியாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் மீது, கையெறி குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய தாக்குதலில், அமெரிக்க தூதர் மற்றும் ஊழியர்கள் மூன்று பேர் பலியாயினர்.

இதையடுத்து, இந்தியாவில் உள்ள அனைத்து அமெரிக்க தூதரகங்களின் பாதுகாப்பை, மாநில அரசுகள் அதிகரிக்க, மத்திய அரசு உத்தரவிட்டது.

இதையடுத்து, தமிழகத்தில், சென்னை அண்ணா மேம்பாலம் அருகே உள்ள, அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. தூதரகத்தின் நான்கு மூலைகளிலும், அதிசக்தி வாய்ந்த கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. தூதரகத்துக்கு வெளியில், ஏற்கனவே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும், சென்னை பொலிஸாரைத் தவிர, கூடுதல் பாதுகாப்புக்காக, அதிரடிப் படை 'கொமாண்டோ' பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தூதரகத்துக்குள், அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன், அமெரிக்காவின் பாதுகாப்பு அதிகாரிகளும் உள்ளனர். அமெரிக்காவில் உள்ள இராணுவ தலைமையகமான பென்டகனுடன், பிற நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்கள், 'சட்டிலைட்' மூலம் இணைக்கப்பட் டுள்ளன.

சென்னை மாநகர பொலிஸார் உட்பட, எந்த நிலையில் உள்ள அதிகாரி களும், தூதரகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொகட்டோவில் உள்ள கொலம்பியா ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பெண்கள் சமத்துவக் கொள்கை குறித்து நடந்த அரச நிகழ்வுக்கு கொலம்பியா ஜனாதிபதி ஜுவென் மேனுவல் சாண்டோஸ் மற்றும் சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மற்றும் ஐ.நா., பெண்கள் நிர்வாக இயக்குநர் மிச்சலே பாசெலட் இருவரும் கலந்து கொள்ள வந்தனர்.

# லிபியாவில் 22 பேர் கைது

## தூதரகத் தாக்குதலின் எதிரொலி

பெங்காசி, செப். 15

லிபியாவில் பெங்காசி நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலில் ஈடுபட்ட 22பேரை லிபியா பொலிஸார் கைது செய்துள் ளனர்.

முஸ்லிம்களை மோசமாகச் சித்தரித்து தயாரிக்கப்பட்ட சினிமாப் படத்தைக் கண்டித்து பல நாடுகளில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதுதொடர்பாக லிபியா உள்துறை அமைச்சர் வான்னிஸ் அல் ஷெரீப் தெரிவித்ததாவது:-

தாக்குதல் தொடர்பாக பலரை நாம் கைது செய்து இருக்கிறோம். இவர்கள் எந்த ஒரு அமைப்பையும் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

**ரொக்கெட் தாக்குதலில் லிபியாவுக்கான அமெரிக்க தூதர் கிறீஸ் ஸ்டீவன்ஸ் உட்பட 4 அமெரிக்க தூதரக அதிகாரிகள் கொல்லப்பட்டமை**

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உள்ளோம். இதற்குத் தூண்டுகோலாக இருந்தவர்கள் யார் என்பதைப் பற்றியும் விசாரித்து வருகிறோம். மேலும் லிபியாவில் வசிக்கும் அமெரிக்கர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது-என்றார்.

இதேவேளை நடைபெற்ற மேற்படி ரொக்கெட் தாக்குதலில் லிபியாவுக்கான அமெரிக்கத் தூதர் கிறீஸ் ஸ்டீவன்ஸ் உட்பட 4 அமெரிக்க தூதரக அதிகாரிகள் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இந்த சம்பவத்துக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது. (வ)

# பிக் பென் கோபுரத்துக்கு எலிசபெத்தின் பெயர்

லண்டனில் உள்ள உலகப்புகழ்பெற்ற பிக் பென் கோபுரத்துக்கு எலிசபெத் ராணியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் ராணி எலிசபெத் அரியணையில் அமர்ந்து 60 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி நாடு முழுவதும் பல்வேறு விசேட நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக நாடாளுமன்றத்தில் உள்ள உலகப்புகழ் பெற்ற, பிக் பென் கோபுரத்துக்கு ராணி எலிசபெத்தின் பெயர் நேற்று முன்தினம் சூட்டப்பட்டது.

மக்களவை சபாநாயகர் ஜான் பெர்கோ ராணி எலிசபெத் பெயர் பொறித்த பலகையைத் திறந்து வைத்தார்.

உலகப் புகழ் பெயர் பெற்ற இந்த கோபுரம் 1858ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. நான்கு புறமும் நேரத்தைக் காட்டும் வகையில் அமைந்துள்ள இந்த கோபுரத்தின் மணி 13 ஆயிரத்து 500 கிலோ எடை கொண்டது.

200 அடி வரை செங்கல்லால் கட்டப்பட்ட இந்த கோபுரத்தின் மொத்த உயரம் 315 அடியாகும். மேல்புறத்தில் மணல் நிறத்திலான, சுண்ணாம்புக்கல் பூச்சுவேலை செய்யப்பட்டுள்ளது.

# யேமன் அமெ. தூதரகம் முற்றுகை

அமெரிக்காவில் இஸ்லாமிய மதத்துக்கு எதிரான படமொன்று வெளியானதால் கோபமடைந்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் யேமன் தலைநகர் சனாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுக்குள் வைத்திருக்க பொலிஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியும், அவர்கள் தூதரக வளாகத்துக்குள் நுழைந்து அங்கிருக்கும் வாகனங்களுக்கு தீயிட்டுள்ளனர்.

பலர் காயமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த செவ்வாய்க் கிழமை, லிபியாவில் பெங்காஸி நகரிலுள்ள தூதரகம் தாக்கப்பட்டதில் அந்நாட்டுக்கான அமெரிக்கத் தூதுவர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஆர்ப்பாட்டக் காரர்களை தூதரக வளாகத்தில் இருந்து பொலிஸார் விரட்டிவிட்ட போதிலும், வெளிப்புறத்தில் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

நேற்று முன்தினம் மீண்டும் யேமனிலும் அமெரிக்கத் தூதரக வளாகத்துக்குள் ஆர்ப்பாட்டக் காரர்கள் நுழைந்துள்ள நிலையில், அவர்களை வெளியேற்ற பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகை மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.


தற்போது ஆர்ப்பாட்டக் காரர்களை தூதரக வளாகத்தில் இருந்து பொலிஸார் விரட்டிவிட்ட போதிலும், வெளிப்புறத்தில் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

எகிப்து தலைநகர் கெய்ரோவிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கடந்த புதன்கிழமை, கெய்ரோவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் சுவர்களை சேதப்படுத்தி அமெரிக்க கொடியையும் கிழித்தெறிந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலையும் பொலிஸாருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.

# லிப்ட் விழுந்து சீனாவில் 19 பேர் உயிரிழப்பு



வுஹன், செப்.15

சீனாவிலுள்ள வுஹன் நகரில் கட்டடத்துக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை லிப்ட் விழுந் ததில் பணியாளர்கள் 19 பேர் உயிரிழந்தனர்.

மத்திய சீனாவில் உள்ள வுஹன் நகரில் 30 மாடி கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்தப் பணி களுக்குத் தேவையான பொருள்கள் மற்றும் 19 பணியாளர்களுடன் லிப்ட் ஒன்று மேல்நோக்கி சென்றது.

30ஆவது மாடியை சென்றடைந்தபோது, திடீரென லிப்ட் அங்கிருந்து மின்னல் வேகத்தில் கீழ் நோக்கி வந்தது. பின்னர் 100 மீற்றர் உயரத்திலிருந்து தரையில் விழுந்தது.

இதில் அந்த லிப்டில் பயணித்த அனைத்துப் பணி யாளர்களும் சம்பவ இடத்தி லேயே உடல் நசுங்கி இறந்து போயினர். இது குறித்து விசாரணை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

சீனாவில் பாதுகாப்பு விதிமுறைகள் மீறப்படு வதால், வருடந்தோறும் இதுபோன்ற விபத்துகளில் மட்டும் ஆயிரக்கணக் கானோர் இறந்து வருவதாக குறை கூறப்படுகிறது.

# ஜேர்மன் அமெ. தூதரகத்துக்கு வாசனைப்பொதியுடன் கடிதம்

## ஊழியர்கள் வெளியேற்றம்

ஜேர்மனியில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு வந்த கடிதத்தில், வித்தியாசமான வாசனை வந்ததையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அலுவலக ஊழியர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

இதுகுறித்து அமெரிக்க தூதரக செய்தித் தொடர்பாளர் ருத் பென்னட் தெரிவித்ததாவது:-

விசா தொடர்பாக பெறப்பட்ட விண்ணப்பத்தின் மேலுறையில் இருந்து வித்தியாசமான வாசனை வருவதாக தூதரக அலுவலர் ஒருவர் தெரிவித்தார். இதையடுத்து அலுவலகத்தில் உள்ள அனைவரும் பாதுகாப்புக் கருதி வெளியேற்றப்பட்டனர்.

சந்தேகத்துக்குரிய அந்த விண்ணப்பம் யாரிடம் இருந்து பெறப்பட்டது என்பதற்கான தகவல் இன்னும் கிடைக்கவில்லை - என்றார்.

பொலிஸ் செய்தித் தொடர்பாளர் மைக்கேல் மெர்க்கேள், தூதரகக் கட்டடத்தில் இரசாயனப் பொருள்களோ, விஷவாயு அறிகுறிகளோ இருக்கிறதா என நிபுணர்கள் முழுமையாகச் சோதித்து விட்டனர். அப்படி எதுவும் கிடைக்கவில்லை என்றார்.

# லிபியாவுக்குப் புதிய பிரதமர்

லிபியாவின் புதிய பிரதமராக தேசிய முன்னணிக் கட்சியைச் சேர்ந்த முஸ்தபா அபு-ஷகௌர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

லிபியாவில் சர்வாதிகார ஆட்சிநடத்திவந்த மும்மர் கடாபிக்கு எதிராக கடந்த ஆண்டு புரட்சி வெடித்தது. அரசுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற போரில் கடாபி கொல்லப்பட்டார். இதையடுத்து, அங்கு இடைக்கால அரசு அமைந்தது.

இந்நிலையில் லிபிய நாடாளுமன்றம் முஸ்தபா அபு-ஷகௌரை புதிய பிரதமராகத் தெரிவு செய்துள்ளது. இவர் இடைக்கால அரசில் துணைப் பிரதமராக உள்ளார். இதன்மூலம், முறைப்படி தெரிவு செய்யப்பட்டுள்ள முதல் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.



ஷகௌர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மஹ்மூத் ஜிப்ரிலை 96 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார். மொத்தவாக்குகள் எண்ணிக்கை 190.

கடாபிக்குப் பின்னர் அமைந்த இடைக்கால அரசு, தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தவோ, இதர பிரச்சினைகளைத் தீர்க்கவோ நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

# இரட்டை கோபுரத் தாக்குதல் தாரிகளின் பேச்சு அடங்கிய காணொலி வெளியீடு

இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு காரணமான, விமானத்தைக் கடத்திய இருவரின் பேச்சு அடங்கிய காணொலியை அல் குவைதா தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி நான்கு விமானங்களைக் கடத்திய அல் குவைதா தீவிரவாதிகள், உலக வர்த்தக மையமாகச் செயற்பட்ட இரட்டைக் கோபுரங்கள் மீது விமானங்களை மோதச் செய்ததில் 3 ஆயிரம் பேர் இறந்தனர்.

இந்தத் துக்க நிகழ்வின் 12 ஆம் ஆண்டு நினைவு தினம் அண்மையில் அனுசரிக்கப்பட்டது.

இந்நிலையில் விமானத்தைக் கடத்திய 19 தீவிரவாதிகளில், இரண்டு பேரின் பேச்சு அடங்கிய காணொலியை அல் குவைதா அமைப்பு நேற்றுமுன்தினம் இணையத் தளத்தில் வெளியிட்டது.

சலிம் அல் ஹஸ்மி மற்றும் கலித் அல் மிதார் ஆகிய இரண்டு பேர் இராணுவ உடை மற்றும் தலைப்பாகை, கையில் துப்பாக்கி சகிதமாக, அமெரிக்காவுக்கு எதிராக [illegible] பேச்சு அந்த காணொலியில் பதிவாகி உள்ளது.

அவர்களுக்கு பின்புறம் இஸ்லாமிய நாள் காட்டியில், 26.04.2001 என்ற திகதி இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

மிதார் பேசுகையில், அரபுத் தலைவர்கள் தங்கள் நாட்டைக் காட்டி கொடுத்து, மெக்கா மற்றும் மெதினா ஆகிய இரண்டு புனித ஸ்தலங்களில் கிறிஸ்துவ அமெரிக்கர்களை தங்க அனுமதித்து விட்டனர். அரேபிய தீபகற்பத்தில் இருந்து அமெரிக்கர்களை நாங்கள் வெளியேற்றுவோம் -என்றார்.

இதேவேளை, ஹஸ்மி, ''இது அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போர்'' என்று சூளுரைத்தார்.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியகலாநிதி
இ.கணேசமூர்த்தி

# இரத்தம் ஓர் அன்புத் திரவம்



**நாளை 16.09.2012 ஞாயிற்றுக்கிழமையன்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்கு முன்பாகவுள்ள யாழ்.சத்தியசாயி நிலையத்தில் காலை 9.00 மணி தொடக்கம் இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது. அதனையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.**

இறைவனோ மிகவும் மர்மமானவர். அவரது படைப்புக்களும் மர்மம் நிறைந்தவையாகும். படைப்புகளுள் மனித படைப்பு மிகவும் அற்புதமானது. மனிதனுக்கு இறைவன் விசேட தன்மைகளைக் கொடுத்துள்ளார். இறைவன் படைப்புக்கள் ஆகியவற்றுடன் தனக்குள்ள தொடர்பை அல்லது நிலையை விளங்கும் ஆற்றலை மனிதன் பெற்றுள்ளான். படைப்புக்களையும் தெய்வீகமாக மதிக்கத்தக்க பண்புகளையும் மனிதன் பெற்றுள்ளான்.

விசேடமாகத் தனக்கும் சமூகத்திற்கும் இடையேயுள்ள பிணைப்பையும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலைமையும் விளங்கிச் செயற்படும் ஆற்றல் மனிதனுக்கு உள்ளது. சுருங்கக் கூறின் தெய்வ பிரீதி, பாப பீதி, சங்க நிதி ஆகிய மூன்றையும் கடைப்பிடித்து வாழத் தெரிந்தவன் மனிதன்.

இதில்தான் தெய்வத்துவமும் சகோதரத்துவமும் அடங்கியுள்ளன. அதாவது சக மனிதனின் தேவையை அறிந்து உதவி செய்வதே தர்மமென உணரக் கூடிய ஆற்றல் மனிதனுக்கு உள்ளது. இந்த அடிப்படையில் தனக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடைகளை ஏனையோருடன் பகிர்ந்து அனுபவிக்கும் மனப்பாங்குடன் வாழ்வதே மனிதனின் தர்மமாகும்.

இரத்ததானமும் ஒரு தர்மச் செயலாகும். தர்மம் தலை காக்கும்; இரத்ததானமும் உயிரைக் காக்குமென்பது உண்மையாகும். நாம் அனுபவத்தில் கண்டு கொண்ட உண்மையாகும் எமது உடம்பிலுள்ள இரத்தத்தில் 10 வீதத்தை தானம் செய்வதால் ஒரு தீங்கும் விளையாது. இது விஞ்ஞான மூலமும் அனுபவமூலமும் நிரூபிக்கப்பட்ட உண்மை. ஆகவே நாம் இரத்ததானம் செய்ய எப்போதும் தயாராக இருக்க வேண்டும். எம்மால் இரத்ததானம் வழங்க முடியுமா என்பதை விசேட பயிற்சி பெற்ற வைத்தியர்கள் தீர்மானிப்பார்கள்.

யாழ்.போதனா வைத்திய சாலை இரத்த வங்கியின் அண்மைய மாதாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சில புள்ளி விபரங்கள் வருமாறு:

★ஒரு மாதத்தில் ஏறக்குறைய 690 பைந்து இரத்தம் சேகரிக்கப்படுகிறது. இதில் 524 பைந்துகள் நடமாடும் சேவை மூலமே பெறப்பட்டது.

★இரத்தானம் வழங்குவோரில் பெரும்பாலானோர் ஆண்களே (629).

★காலத்துக்கு காலம் தொடர்ச்சியாக இரத்ததானம் வழங்குவோர் உள்ளனர். முதற்தடவையாக இரத்த தானம் செய்தோர் 250 பேர் மட்டுமே. ஒரு தடவை கொடுத்தால் பயம் நீங்கி மீண்டும் கொடுக்க விருப்பம் ஏற்படும். இரத்தம் கொடுப்பதில் ஆனந்தமும் ஆத்மதிருப்தியும் ஏற்படும். இரத்தானம் செய்வோருக்கு இரத்தம் ஏற்ற வேண்டிய தேவை ஏற் படும் போது வேண்டிய இரத்தம் எப்படியும் கிடைக்கும்.

★இரத்ததானம் செய்ய முன் வந்தும், அதற்குத் தகுதி இல்லாது போனவர்கள் 29 பேர் மட்டுமேயாவர்.

இப்பொழுது இரத்தம் ஏற்ற வேண்டிய நோயாளிக்கு தேவையான இரத்தக் கூற்றை மட்டுமே இரத்ததானம் செய்வோரிடமிருந்து பெறத்தக்க வசதி உள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் பெறுபவர்களின் (விடுதி அடிப்படையில்) புள்ளி விவரங்கள் வருமாறு:

பொது மருத்துவ விடுதிகள்-31.4 வீதம்

சத்திரசிகிச்சை விடுதிகள்-20.4வீதம்

புற்றுநோய் விடுதி-11.8வீதம்

குழந்தைகள்விடுதிகள்-3.5 வீதம்

பிரசவ விடுதிகள்-11.8 வீதம்

வெளிமாவட்ட வைத்திய சாலைகள்-21.0வீதம்

பெறப்பட்ட இரத்தம் எவ் வகையைச் சேர்ந்தது என்ற

| வகை | பொசிட்டிவ் | நெகட்டிவ் | மொத்தம் |
|---|---|---|---|
| O | 38% | 4% | 42% |
| B | 29% | 2.5% | 31.5% |
| A | 19.4% | 0.7% | 20.1% |
| AB | 6.2% | 0.1% | 6.3% |

விவரம்:

இந்த உயிர் காக்கும் அன்புத் திரவத்தை வழங்குபவர் அதனை வழங்கும் பொழுது இறை நாமத்தை உச்சரித்தால் இறை அதிர்வுகள் வலுப்பெற்று இரத்தத்தைப் பெறும் நோயாளியை விரைவாக குணமடைய வைக்கும் என்று கூறியுள்ளார் ஸ்ரீ.சத்தியபாபா நாம் ஆழமாகச் சிந்தித்தால் எமது இரத்தத் தொகுதியில் இறைவனின் ஐந்து தொழில் களையும் உணரலாம்.

படைத்தல், அழித்தல் இரண்டும் தொடர்ச்சியாகவே நடைபெறுகின்றன. வெண்கலன்கள் சிறுதுணிக்கைகள் ஒவ்வொரு கிழமையும், செங்கலன்கள் 4 மாதத்தில் ஒரு தடவையும் புதுப்பிக்கப்படுகின்றன. இரத்தத்திலுள்ள நோய் எதிர்ப்புப் புரதக் கூறுகள் பாதுகாப்பைக் (காத்தல்) கொடுக்கின்றன. புதிய இரத்தக் கூறுகளைச் செயற்கையாக ஆய்வு கூடத்தில் உருவாக்கவும் முடிவதில்லை. இதுதான் இறைவனின் மறைத்தல் தொழிலின் வெளிப்பாடு. அருளல் என்பது இறைநாமம், தியானம் என்பவை மூலம் தெய்வீக சக்தியை இரத்தத்தில் அதிகரிக்கச் செய்யலாம். எனவே நாமாக முன்வந்து இரத்ததானம் செய்து நோயாளர் உயிர்காக்கும் பணியில் பங்களிப்போம்.

IELTS A1 B1 B2
Knowledge University Sri Lanka
October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், இல. 45/2, விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்) நேற்று முன்தினம் (13.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, இராமலிங்கம், சிவக்கொழுந்து, தெய்வானை, சின்னத்தங்கச்சி, தங்கம்மா, நாகம்மா, இராசம்மா, துரைசிங்கம் மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணமணியின் பாசமிகு கணவரும் வளர்மதி, மதியழகன் (மலேரியா தடைப்பகுதி, கிளிநொச்சி) இந்துமதி (ஆசிரியை - வவுனியா சமளங்குளம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகானந்தம் (ஆசிரியர் - யாழ் நல்லூர் இந்து பெண்கள் வித்தியாலயம்), குணரூபன் (ஆசிரியர் - கிளி புன்னைனீராவி வித்தியாலயம் விசுவமடு), சிவதர்சினி (மருந்துக்கலவையாளர்- கோண்டாவில் வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், தங்கமுத்து, மகேஸ்வரி, பத்மநாதன், விஜயலட்சுமி, நடராசா, கமலாம்பிகை, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிசானா, பிரணவன், சுவாதிகா, மகீபன், கிருஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விசுவமடு 12 ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.45/2, விசுவமடு,
Smathiy@yahoo.com

தகவல்:
செ. மதியழகன் (மகன்),
Smathiy@yahoo.com
(22875)(45.6.7)

## விற்பனைக்கு

2½மாத வயதுடைய தூய இன DASHOUND ஆண் நாய்க் குட்டியும் COCOKER SPANIEL பெண் நாய்கள் இரண்டும் விற்பனைக்கு உண்டு.
மனோன் மாஸ்ரர்
அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய்.
(22862)(5-6-7)

## கட்டர் தேவை

அச்சக பாவனைக்கு (சிறிய) கட்டர் தேவை.
075 552 5405
(22866)(5-6-7)

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 57-XXXX வான் விற்பனைக்கு உண்டு.
(சரி - 077 103 1515, 077 025 8803)
(22849)(5-6-7)

## வீடு வளவு விற்பனைக்கு

மாலி சந்தியில் இருந்து உடுப்பிட்டி செல்லும் வீதியில் நூறு மீற்றருக்குள் தம்பியோடை,வதிரி, கரவெட்டி எனும் முகவரியில் 3பரப்பு 3 குளி காணி சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொ.பே.: 077 071 2077
(22834)(5-6-7)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

### கந்தையா நவரத்தினம்

(Rtd. Senior Assessor- Department of inland Revenue)

கடந்த 17.08.2012 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (12.09.2012) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய, சபிண்டீகரண கிரியைகள் இன்று (15.09.2012) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.
தொ.பே.: 021 227 0144
(22867)(5-6-7)

குடும்பத்தினர்.

IELTS A1 B1 B2
Knowledge University Sri Lanka
October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரூ.5 கோடி செலவில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள்



மட்டக்களப்பு,செப்.15

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் தடவையாக சுமார் 5 கோடி ரூபா செலவிலான பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் பீதாம்பரம் ஜீபராவின் அழைப்பின்பேரில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வந்த ஆஸ்திரேலிய நாட்டு சத்திரசிகிச்சை நிபுணர்களால் இந்தச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் எம்.முருகானந்தம் தெரிவித்தார். இதன்போது, **45** பேருக்கு பிளாஸ்டிக் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முதலமைச்சர் பதவிக்கு அமீரலியே பொருத்தம்

## இவரை நியமித்தால் மக்களுக்கு பெரும் பாக்கியம் என்கிறார் நவரட்ணராஜா

அம்பாறை,செப்.15

கிழக்கு மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைக்கவிருக்கும் ஆட்சியில் முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படுமானால் அதனை முன்னாள் அமைச்சர் எம்.எஸ். எஸ். அமீரலிக்கு வழங்குவதே மிகப் பொருத்தமானதாகும் என்று கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் துரையப்பா நவரட்ணராஜா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நியமனம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீரலியே கிழக்கு மாகாண முதலமைச்சராக இம்முறை வருவதற்கு மிகப் பொருத்தமானவர்

இனவாதமற்ற, சகல இனங்களையும் சமத்துவமாக மதித்துச் செயற்படும் ஓர் உன்னத சேவையாளனாக அவர் திகழ்ந்து வந்துள்ளார்.

மத்திய அரசில் அமைச்சராக இருந்த காலகட்டத்தில் அவர் சிறந்த, நேர்மையான மக்கள் சேவகனாகத் திகழ்ந்ததுடன் சகல இன மக்களதும் நல்ல அபிமானத்தையும் வென்றவராகத் திகழ்ந்தார்.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கிழக்கில் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கும் மூன்று இனங்களையும் பொறுப்புடன் அனுசரித்துச் செயற்படத்தக்க ஒரு முதலமைச்சரை நியமிப்பதில் அக்கறை கொள்ளவேண்டும்.

முஸ்லிம் ஒருவரையே முதலமைச்சராக நியமிக்கும் முடிவு எடுக்கப்படுமானால் அமீரலியையே அத் தெரிவில் முதன்மைப்படுத்த வேண்டும்.

அவ்வாறு அவர் முதலமைச்சராக நியமிக்கப்படுவாரானால் கிழக்கு மக்களுக்கு அது பெரும் பாக்கியமாக அமையும்- என்றார். (ச-30)


## அம்பாறை -ஹற்றன் பஸ் சேவை

ஹற்றன்,செப்.15

30 வருடங்களுக்குப் பின்னர் ஹற்றன் அரச போக்குவரத்துச் சபையால், மஸ்கெலியா- அம்பாறைக்கிடையிலான பஸ் சேவை ஒன்று கடந்த புதன்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்டது. இந்தச்சேவையை ஹற்றன் பஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆரம்பித்து வைத்தார்.

அத்தோடு அம்பாறையிலிருந்து மஸ்கெலியாவை நோக்கி மற்றுமொரு பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டது. அம்பாறை- ஹற்றன் பஸ் சேவை தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

மக்கள் நலன்கருதி ஹற்றன் பஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்தச் சேவையை ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை வந்துள்ள பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று பார்வையிட்டனர்.

## வெளிநாடுக்கு தப்ப முயன்ற 20 பேர் வசமாகச் சிக்கினர்

பொத்துவில்,செப்.15

பொத்துவில் - கோமாரி பிரதேசக் கடல் வழியாக வெளிநாடு தப்பிச் செல்ல முயற்சித்த 20 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் உதவியுடன் இவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9.30 மணிக்கு பொத்துவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கத்தியால் குத்தி பெண் கொலை

### சிறிய தந்தை கைது

கண்டி,செப்.15

கண்டி - தலாத்துஓயாப் பகுதியில் 36 வயதுடைய பெண் ஒருவர் கத்தியால் குத்திக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணுக்கும் அவரது சிறிய தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக முற்றி கொலையில் சென்று முடிவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான சிறிய தந்தை கைது செய்யப்பட்டு கண்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ச)

# சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தல் முடிவு தமிழர் ஒற்றுமையை எடுத்துக் காட்டியது

### அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பெருமிதம்

இரத்தினபுரி,செப்.15

மலையக வரலாற்றில் சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய இரு மாவட்டங்களிலும் தமிழ் உறுப்பினர்கள் வெற்றி பெற்றிருப்பது அந்த மக்களின் ஒற்றுமையையும், ஏகோபித்த முடிவையும் எடுத்துக் காட்டுகின்றது என்று இ.தொ.கா. பொதுச் செயலாளரும், கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.



**இந்திய வம்சாவளி மக்கள் எந்தெந்தப் பிரதேசங்களில் வாழ்கின்றார்களோ அவர்களையும் இ.தொ.கா. ஒருபோதும் கைவிடாது.**

சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தலைமுறை தலைமுறையாக இதுவரையிலும் எந்தத் தேர்தல்களிலும் இப்பிரதேசத்துக்கு ஒரு பிரதிநிதித்துவத்தைக் கூட தக்கவைத்துக்கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம் இந்த மக்களிடையே நிலவி வந்தது.

ஆனால், இந்த மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையில் சேவல் சின்னத்தில் போட்டியிட்ட கூட்டணி சார்பாக கேகாலை, இரத்தினபுரி ஆகிய இரு மாவட்டங்களிலும் தலா இரண்டு உறுப்பினர்கள் வெற்றிபெற்றுள்ளமை அந்த மக்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும்.

இதேவேளை கேகாலை மாவட்டத்தில் 40,50 வருடங்களுக்குப் பின்னர் வரலாற்றில் இல்லாத ஒரு வெற்றியைக் கண்டிருக்கின்றோம்.

அண்மைக் காலங்களில் இப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் தோட்டத் தொழிலாளர்கள் அச்சுறுத்தல்களாலும், வன்முறைகளாலும் பல்வேறு துன்பங்களையும், இடர்பாடுகளையும் எதிர்நோக்கியவர்கள். இதற்கெல்லாம் அப்பிரதேசங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாததே காரணம். ஆனால், அதனை இந்தத் தேர்தலில் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்ததன் மூலம் அந்த நோக்கத்தை நிறைவேற்றி இருக்கின்றார்கள்.

இந்திய வம்சாவளி மக்கள் எந்தெந்தப் பிரதேசங்களில் வாழ்கின்றார்களோ அவர்களையும் இ.தொ.கா. ஒருபோதும் கைவிடாது.

இந்த மாகாணத் தமிழ் மக்களின் அனைத்து தேவைகளுக்கும் அவர்களது உணர்வுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் மதிப்பளித்து சேவையாற்றுவேன்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மட்டு. நகரை அபிவிருத்தி செய்ய ஐந்து ஆண்டுத் திட்டம் ஆராய்வு



மட்டக்களப்பு,செப்.15

மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் ஐந்து ஆண்டுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத் திணைக்களங்களின் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு இதன்போது திட்டம் தொடர்பிலான விளக்கங்களும், நடைமுறைப்படுத்தல் தொடர்பான விவரங்களும் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தில், இடர்காலப் பிரச்சினைகளை எதிர்கொள்ளல், விவசாய, மீன்பிடி, கால்நடை அபிவிருத்தி, சிறு கைத்தொழில், சுகாதாரம் போன்றவற்றுக்கான திட்ட வரைபுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலின்போது, நிறுவனப் பிரதிநிதிகளிடம் ஆலோசனைகளும் கருத்துக்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இந்தநிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா நாயகிக்கு சேவை நயப்பும் பாராட்டும்

திருமதி **சௌமியாதேவி விசுவலிங்கம்**

(உப அதிபர், யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை)




சேவைக்காலம்

- யா/யூனியன் கல்லூரி (தெல்லிப்பழை) 20.11.1978 - 31.12.1978
- யா /யூனியன் கனிஷ்ட வித்தியாலயம் (தெல்லிப்பழை) 01.01.1979 - 31.01.1980
- யா/ சைவப்பிரகாச வித்தியாலயம் (தெல்லிப்பழை) 01.02.1980 - 17.01.1982
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி 18.01.1982 - 31.12.1983
- தி/ கன்னியா அ.த.க. பாடசாலை 01.01.1984 - 01.06.1986
- தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி 02.06.1986 - 05.07.1987
- யா/சைவப்பிரகாச வித்தியாலயம், தெல்லிப்பழை 06.07.1987 - 01.03.1988
- யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை 02.03.1988 -31.08.1993
- யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை 01.09.1993 - 14.09.2012

யா/மகாஜனக்கல்லூரியில் பதின்மூன்று ஆண்டுகள் ஆசிரியராக ஆறு ஆண்டுகள் உதவி அதிபராக (இடைநிலை) உப அதிபராகச் சேவையாற்றியுள்ளார்.

சேவைக்காலத்தில் பாடசாலைக்கு ஆற்றிய பணிகள் என்றென்றும் நினைவு கூரத்தக்கன. சிறந்த கணித பாட ஆசிரியராக, கணித பாட இணைப்பாளராக கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட அணிகளின் பொறுப்பாசிரியராக, விளையாட்டுத்துறைச் செயலாளராக இயற்கை அவதானிப்புக் கழக வழிகாட்டியாக ஒழுக்காற்றுக்குழு பரிசில் குழுக்களின் ஆலோசகராகக் கடமையாற்றி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரினதும் பெரு மதிப்பைப் பெற்று ஓய்வு பெறுகின்றார்.

*இன்று (15.09.2012) சனிக்கிழமை மணிவிழாக்காணும் உபஅதிபர், திருமதி சௌமியாதேவி விசுவலிங்கம் அவர்களின் சேவையை நயந்து போற்றுகின்றோம்.*

ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று என்றும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்.

(சி3369)(6.7.8)

# ஹோட்டல் டிப்ளோமா சான்றிதழ் வழங்கல் இன்று

லண்டன் தொலைக் கல்வி மூலம் ஹோட்டல் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு இன்று மாலை சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

லண்டன்-லங்கா திறன் அபிவிருத்தி பயிற்சி நிறுவனத் தலைவர் எஸ்.செந்திலிங்கம் தலைமையில் டிப்ளோமா பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கையை தொடர்ந்து 23 பேரில் 5 பேர் மட்டுமே இந்தப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

யாழ்.திருமறைக் கலாமன்றில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு கொழும்பில் இருந்து விருந்தினர்கள் வருகை தரவுள்ளனர்.

(ம-50)

# திருமணப் பொன்விழா

நிறைவு வாழ்த்து

**குணரத்தினம் தம்பதிகள்**

*15.09.2012*




கோப்பாய் தெற்கு இருபாலை "இரத்தினவாசம்" கும்பப்பிள்ளையில் வாழ்ந்து கடந்த 30 ஆண்டுகள் மேலாக பேர்லின் ஜேர்மனியில் வாழ்ந்து வரும் எங்கள் அன்பும் பாசத்துக்குமுரிய பெற்றோர் தமது, திருமணவாழ்வின் 50 ஆவது நிறைவை எய்தும் இந்நாளில் இறையருள் வேண்டி "நீடூழிவாழ்க!" வென அனைவரும் அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள் மற்றும் குடும்ப உறவுகள்.

# காணவில்லை



மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்காலிகமாக காலையடி பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் சிவகரன் (அப்புச்சி - வயது 15) என்பவரை கடந்த 28.08.2012 தொடக்கம் காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அறியத்தரவும்

தொ.பே. 077 0066 037, 077 8515 318

077 3618 580

தகவல்: கயல்விழி (அக்கா - கௌரி)

(22906) (45.6.7)

# Van விற்பனைக்கு

DAIHATSU MODEL JAPAN VAN

விற்பனைக்கு உண்டு YOM 1999

7 ஆசனங்களைக் கொண்டது

தொடர்புகளுக்கு:

**077 7531 461**

(22886) (45.6.7)

# கொழும்பு செல்லும் பயணிகளுக்கு SPS ஸ் தாபனத்தாரின் மகிழ்ச்சியான செய்தி

இதுவரை காலமும் யாழ் - கொழும்பு ஒரு வழிப் பயணக் கட்டணமாக இருந்த ரூபா *1500/=, 15.09.2012* இல் இருந்து *1350* ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**SPS ஆசனப் பதிவகம்**

**378, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

தொ.பே: 021 4925 025 077 5172 723 077 7306 049 077 7349 142 077 2208 432

(22887) (45.6.7)

# தென்மராட்சியின் புகழ் பூத்த தமிழாசான்

**உயர் திரு.க.தர்மராஜா** அவர்களின்

## கௌரவ விழா அழைப்பு

காலம்:- இன்று (15.09.2012) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி

இடம்:- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

அவர்களின் மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- விழாக்குழு.

(9371) (2-6)

சில சந்தர்ப்பங்கள் பெறுமதியானவை..............

Prince City Campus இன் பட்டப்படிப்பு போல

The world standard undergraduate programme

**EdHat IHD in Law leading to LL.B (UK)**




Affordable course fee — Qualified lecture panel

Dual standard LL.B (UK) Degree

**Registration is open for New Batch**

Don't miss the free seminars on 15th and 16th of September, 2012

Join us, and obtain your dream degree

**Prince City Campus**

No. 275, Clock Tower Road, Jaffna.

Hotline: 0775 949 272

E-mail: Princeenquiries@Yahoo.com

# கேன் புற்றுநோயாளர் காப்பகம்

*இல.05, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.*

*தொ.பே.: 021 224 0258*

3½ வருடங்கள் வரை மாத்திரம் பாவிக்கப்பட்ட தும், திருத்திப் பாவிக்க கூடியதும் சீனா தேச தயாரிப்புமான 5KV JAP model டீசல் மின் பிறப்பாக்கி (Generator) ஒன்று இக் காப்பகத்தில் விற்பனைக்கு உள்ளது.

கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தங்களின் கேள்விப் பத்திரத்தை எமது அலுவலகத்தில் உள்ள, இதற்குரிய பெட்டியில் 01.10.2012 ஆம் திகதி 12 மணிக்கு முன்னர் இடவும். தபால் மூலமாக அனுப்ப விரும்புவோர் தலைவர், கேன் புற்றுநோயாளர் காப்பகம், இல.5, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம். என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மேற்படி திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

இதை பார்வையிட விரும்புவோர் - 17.09.2012 தொடக்கம் 29.09.2012 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் 12 மணி வரை மேற்படி முகவரியில் உள்ள எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

தலைவர்:

கேன் புற்றுநோயாளர் காப்பகம்.

(22905)(5.6.7)

# வேலையாள்கள் தேவை

ஐப்பசி மாதம் புதிதாக திறக்கப்படவுள்ள எமது கிளை நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. (ஆண், பெண் இரு பாலாரும்) பழக விரும்புகிறவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 8000/= தகைமைக் கேற்ற ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும்.

**நல்லி சில்க்ஸ்**

121/1, [illegible] வீதி,

யாழ்ப்பாணம்.

(சி/3363)(6.7.8)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 20.06.1923

உதிர்வு 15.08.2012

## திருமதி அகஸ்ரின் றோசம்மா

கடந்த 15.08.2012 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அகஸ்ரின் றோசம்மா அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நாள் இன்று (15.09.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

இருதயபுரம், மட்டக்களப்பு. (2,6,7) இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மது அருந்தியோர் வைத்தியசாலையில்

### மதுபான நிலையத்துக்கு 'சீல்'

கொழும்பு,செப்.15

வாரியபொல நகரில் அமைந்துள்ள மதுபான நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மதுபானத்தை அருந்திய நால்வர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாந்தி, வயிற்றுவலி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இவர்கள் நால்வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த மதுபான நிலையத்தைச் சேர்ந்த மதுபானங்களில் சில இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக குருணாகல் கலால் திணைக்கள அலுவலகம் தெரிவித்தது. இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை வரும் வரையில் குறித்த மதுபான நிலையம் சீல் வைக்கப்பட்டுள்ளது என்று அத்திணைக்கள அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த மதுபான நிலையமானது வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதியொருவருக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## ரயில் நிலையங்களில் இலவச இணைய வசதி

### திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,செப்.15

ரயில் நிலையங்களில் இலவசமாக இணையத்தள வசதிகளை வழங்குவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தொழில்நுட்பம் ஊடாக பயணிகளுக்கு அந்த வசதிகளை வழங்கவுள்ளது என்று ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

அதிக வருமானத்தை ஈட்டித்தருகின்ற ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்த வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

கொழும்புக்கோட்டை, கண்டி, கம்பஹா, அனுராதபுரம், மருதானை, வேயாங்கொடை, வவுனியா, ராகமை, காலி மற்றும் மட்டக்களப்பு ஆகிய ரயில் நிலையங்களே தற்போது அதிக வருமானத்தைப் பெற்றுத்தருகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய இந்த ரயில் நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள், அங்கவீனர்களுக்கான வசதிகள் என்பவற்றை நவீன மயப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ரயில் கால அட்டவணையை இலத்திரனியல் கட்டமைப்புக்கு உட்படுத்துவதற்கும் ரயில்வே நிலையங்களில் அனுமதிச்சீட்டு விநியோகிக்கும் கருமபீடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மக்கள் விருப்புக்கு எதிராக மஹிந்த அரசு செயற்படுகிறது

### அதனை ஏற்க முடியாது என்கிறார் கருஜயசூரிய எம்.பி.

கொழும்பு,செப்.15

கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அரசு ஏனைய கட்சிகளுக்குப் பரிசுகளையும், சிறப்புரிமைகளையும் வழங்குவது மக்களின் விருப்பத்துக்கு முரணாகச் செயற்படுவதாகும். அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அதிகாரத்தைப் பெறுவதற்காக இவ்வாறு செயற்படுவதானது, இறுதியில் அரசுக்கு அதளபாதாளமாக மாறிவிடும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நாராஹேன்பிட்டி, கிருளப்பனை அவனியூவில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

17 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தாது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் நீதியான தேர்தலை எதிர்பார்க்க முடியாது. கடந்த மாகாண சபைத் தேர்தலானது, மக்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட தேர்தல். இவ்வாறான தேர்தல்கள் மூலம் உண்மையான மக்களின் கருத்துக்களை வெளிக்கொண்டு வர முடியாது.

தேர்தல் ஆரம்பமாகும் போது, அனைத்துத் துறைகளிலும் உள்ளவர்களும் அரசுக்கு எதிராகச் செயற்பட்டனர். விவசாயிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் போராட்டத்தில் இறங்கியிருந்தனர்.



அரசு மூன்று மணிநேர மின்வெட்டை நடைமுறைப்படுத்தியிருந்தது. தரம் குறைந்த பெற்றோல், டீசல், மோசடியான கொடுக்கல், வாங்கல்கள், நிதி முறைகேடுகள் ஆகிய பிரச்சினைகள் நாட்டில் ஏற்பட்டிருந்தன. சட்டம் சீர்குலைந்திருந்தது. அரசில் உள்ள சிலர் நீதிமன்றத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்திருந்தனர். இந்த நிலைமை அரசுக்குப் பாதிப்பாக இருந்தது மாத்திரமல்லாது, தெளிவான மக்கள் எதிர்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

மக்களை அணிதிரட்ட அரசு எங்களிடம் அரசியல் என்ற ஆயுதத்தை வழங்கியிருந்தது. எனினும் துரதிர்ஷ்டவசமாக அந்த அரசியல் ஆயுதத்தை உரிய முறையில் எம்மால் பயன்படுத்த முடியாது போனது. இதற்கு கட்சியில் உள்ள தலைவர்கள் பொறுப்புக் கூறவேண்டும். இந்த அரிய சந்தர்ப்பதை பயன்படுத்த இந்தத் தலைவர்களுக்கு இயலாமல் போனது துரதிர்ஷ்டமானது- என்றார். (ச)

## ஹிக்கடுவை கரையோரப் பகுதியில் சட்டவிரோத கட்டடங்களை அகற்ற துரித நடவடிக்கை

ஹிக்கடுவை கரையோரப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சட்டவிரோதக் கட்டடங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதக் கட்டடங்கள் சில அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் குறித்த பகுதியிலிருந்து அகற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹிக்கடுவை கரையோரப் பகுதிகளில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹோட்டல் கட்டடங்களை அகற்றுவதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## குப்பைக்குள் இருந்து சிசுவின் சடலம் மீட்பு

கொழும்பு,செப்.15

மாத்தறை பொலிஸ் பிரிவில் கொட்டுவேகொட பொது மக்கள் சந்தைக்கு பின்பகுதியில் உள்ள குப்பை கொட்டும் இடத்தில் இருந்து சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மாத்தறை பொலிஸாருக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மாத்தறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## உறுப்பினர்களின் பெயர்களைச் சமர்ப்பிக்குக

### தேர்தல்கள் செயலகம் அறிவுறுத்து

கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாண சபைகளின் போனஸ் ஆசனங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களை முன்வைக்குமாறு தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர், அது தொடர்பான விவரங்களை அறியத் தருமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருக்கு தாம் அறிவித்துள்ளார் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

மூன்று மாகாண சபைகளுக்கும் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானியில் அறி[illegible] தாமதம் ஏற்பட்டுள்ளது.

**திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே சொத்துக்கள் உடைமைகள் குறித்த விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**

திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே சொத்துக்கள், உடைமைகள் குறித்த விவரங்கள் இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்குத் தெரிவாகியுள்ள சிலரது சொத்துக்கள் உடைமைகள் தொடர்பான விவரங்களே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (ச)

## மருத்துவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் ஒதுக்கீடு தேவை

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு,செப்.15

மருத்துவர்களின் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்கு விசேட ஒதுக்கீடுகள் வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

அடிக்கடி இடம்மாற்றப்படுவதால் மருத்துவர்கள் ஐந்து வருடகாலம் ஒரு இடத்தில் வசிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனால் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்குத் தேவையான சில தகுதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக குறித்த சங்கம் கூறியுள்ளது.

பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதிலுள்ள பிரச்சினை காரணமாக பல மருத்துவர்கள் நாட்டைவிட்டுச் சென்றிருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உப தலைவர் நளின் ஆரியரட்ன கூறினார்.

இந்த ஒதுக்கீட்டை அரசு வழங்காவிட்டால் நடவடிக்கை மேற்கொள்வதற்கு குறித்த சங்கம் தயாராகவுள்ளது என்று அவர் கூறினார்.

எமக்கு விசேட சிறப்புரிமை வழங்குமாறு அரசை நாம் கோரவில்லை. எமது நிலையைக் கருத்தில் கொண்டு எமது பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதியை வழங்குமாறே கோருகிறோம் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களுக்கு பணம் கடனாகக் கொடுக்க சிலர் தாமாக முன் வருவர். தொழிலில் இருக்கும் மந்தகதியை சரிசெய்ய புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவது அவசியம். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதம் இருக்கும். அதிக பயன்பாடு தருகிற ஒரு பொருளை தொலைத்து விட நேரிடலாம். கவனம் தேவை.

**இடபம்:** உங்களின் எதார்த்த பேச்சு, பிறருக்கு சிரமம் தரலாம். இதனால், தேவையற்ற விடயங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழிற்சாலையில் கூடுதல் பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். பணவரவை விட, நடைமுறை பணச்செலவு கூடும். சீரான ஓய்வு உடல்நலம் பெற உதவும்.

**மிதுனம்:** உங்கள் வாழ்வில் எதிர்வருகின்ற சிரமங்களை வென்று சாதனை புரிவீர்கள். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து கிடைக்கும். தொழில் வளர்ச்சி பெற அதிக மூலதனம் செய்வீர்கள். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். குடும்பத்தின் முக்கிய தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.

**கடகம்:** நீங்கள் செய்த உதவியை மறந்த சிலரை நினைத்து மனம் வருந்துவீர்கள். இருப்பினும், உங்களின் நற்செயல்கள் தொடரும். தொழில்வளர கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வதால் நேரம், பணவிரயம் தவிர்க்கலாம்.

**சிங்கம்:** உங்கள் மனதில் உற்சாகமும், பெருமிதமும் ஏற்படும். எந்தச் செயலிலும் திறமையைப் பயன்படுத்தி கூடுதல் நன்மை பெறுவீர்கள். தொழில் வளர்ச்சி பெற முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். உடல்பிணி, தொந்தரவு குறையும். உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகத்திடமிருந்து வெகுமதி கிடைக்கும்.

**கன்னி:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். எதிர்பாராத பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். சிக்கனமாக இருங்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**நாளை**

ஆவணி - 31 ஞாயிற்றுக்கிழமை 16.09.2012
திதி: அமாவாசை மு.ப 08.35 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ 03.28 வரை
சுபநேரம்: 09.03- 10.33 வரை
ராகுகாலம்: 04.33- 06.03 வரை

**துலாம்:** உங்கள் மனதில் சுதந்திரமாக செயற்படுகிற எண்ணம் வளரும். சுயகௌரவ சிந்தனைகளை ஓரளவு குறைத்துக் கொள்வது நல்லது. தொழிலில் முன்னேற்றம் அதிகரிக்கும். உங்கள் வாழ்க்கைத்தரம் உயர்வு கண்டு, உறவினர், நண்பர் பாராட்டுவர்.

**விருச்சிகம்:** உங்களின் அணுகுமுறை மாற்றத்தால், சமூகத்தில் நன்மதிப்பு பெறுவீர்கள். எதிர்வரும் சூழ்நிலைகள் அனுகூல பலனை உருவாக்கும். தொழில்வளம் சிறந்து, புதிய சாதனை ஏற்படும். ஓய்வு நேரத்தில் இசையை ரசித்து மகிழ்வீர்கள்.

**தனுசு:** உங்கள் உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். மாற்று ஏற்பாடுகளை செய்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவு குறைந்தளவில் இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவான சொல் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

**மகரம்:** உங்கள் பணியை நிதானமாகச் செயற்படுத்துவதால் மட்டுமே, எதிர்பார்த்த பலன் கிடைக்கும். அனுபவசாலிகளின் ஆலோசனை செயல்சிறக்க உதவும். எதிர்பார்த்த பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும். மனம் விரும்பாத பணச்செலவை தவிர்ப்பீர்கள்.

**கும்பம்:** உங்கள் வாழ்வில் கடந்த காலத்தில் எதிர்மறையாக செயற்பட்டவர் விலகிப்போவர். மனதில் கூடுதல் நம்பிக்கையும், புதிய திட்டமும் உருவாகும். தொழிலில் உள்ள நிலுவைப்பணி நிறைவேற்றுவீர்கள். தாராளபணவரவு கிடைக்கும்.

**மீனம்:** உங்கள் மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். உங்கள் வாழ்வை சிரமப்படுத்த முயற்சித்தவர்களுக்கும் மறைமுக உதவிபுரிவீர்கள். தொழிலில் இருந்த இடையூறு எளிதாக விலகும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | | 3 | | 2 | | | 1 |
| 1 | | 7 | 8 | | 9 | 4 | | |
| | 4 | | | 5 | | | | |
| 8 | 7 | | | | | | | 5 |
| | | 3 | 5 | | 1 | 2 | | |
| 4 | | | | | | | 1 | 9 |
| | | | | 8 | | | 9 | |
| | | 4 | 9 | | 3 | 5 | | 6 |
| 3 | | | 7 | | 6 | | 8 | 4 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 2 | 5 | 3 | 4 | 1 | 8 | 6 |
| 3 | 8 | 6 | 1 | 2 | 7 | 9 | 4 | 5 |
| 4 | 1 | 5 | 6 | 9 | 8 | 3 | 7 | 2 |
| 1 | 2 | 4 | 8 | 6 | 5 | 7 | 9 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 7 | 1 | 4 | 2 | 8 |
| 8 | 9 | 7 | 2 | 4 | 3 | 6 | 5 | 1 |
| 7 | 6 | 1 | 4 | 8 | 2 | 5 | 3 | 9 |
| 5 | 3 | 8 | 7 | 1 | 9 | 2 | 6 | 4 |
| 2 | 4 | 9 | 3 | 5 | 6 | 8 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது, நாளை (16.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு எமது சங்கப் பணிமனையில் பொதுக்கூட்டம் இடம் பெறும். அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- சில முக்கிய முடிவுகள் எடுக்க இருப்பதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.**

(22847) (2-6-7)

## விற்பனைக்கு/வாடகைக்கு

NP - XXXX தொடரிலக்கமுடைய Isuzu (ELF) 10 ½ அடி அலுமினிய பொடி வாகனம் (சேல்ஸ் தேவைக்கு மிகப் பொருத்தமானது)
தொடர்பு: 0777361215

(21523) (2-6-7)

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் வடக்கு, ஆலங்குளாய் முருகன் கோயிலுக்கு அருகில் நான்கு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776146434

(22837) (2-6-7)

## வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் கண்டி றோட்டில் HOLIDAYINN (A9 HOTEL RESTRAURANT க்கு அருகில்) எல்லா வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கோ அல்லது வாடகைக்கோ உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 0773965369 (காலை 8.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)
தொடர்பு:- 0778078661

(22840) (2-6-7)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 06 . 1987

உதிர்வு 30 . 08 . 2008



### அமரர் கோபிநாத் யுகவர்ணன்

( பழைய மாணவன் - ST.JOHN'S COLLEGE A/L - 2006)

திதி : அமாவாசை

வருடங்கள் நான்கை கடந்து வந்த போதிலும் எங்கள் நினைவில் என்றும் அணையாத நித்திய ஜோதியாய் நீக்கமற நிறைந்துள்ளீர்
உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கை, உறவுகள்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(22436)(6.7.8)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை திறக்கப் படும்.

நல்லூர் பாம் சென்ரர்,
# 19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்,யாழ்ப்பாணம்

(22759)(5-6-7)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

- அடியாள்.

(22685) (2-7-6)

## வேலைவாய்ப்பு

Sri Lanka Insurance

காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தனது

**50 ஆவது ஆண்டு நிறைவில்**

துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகர்களுக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

- நீங்கள் விற்பனைத் துறையில் ஆர்வமுள்ளவரா?
- பகுதிநேர வேலைவாய்ப்பினைத் தேடிநிற்பவரா?
- துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
- 18 வயதினைக் கடந்தவரா?
- குறுகிய காலத்திலேயே அதிக வருமானத்தை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
- ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
- சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
- ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம் உடன் இணையுங்கள்!

தகைமை:

G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக
நீங்கள் எம்முடன் இணைந்தால்....

- அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்
- வெளிநாட்டுச் சுற்றுலா
- ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ற பரிசில்களும்
- இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள் வாகன கடனுதவி
- போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
- தகைமைக் காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு Bank Assurance.
- சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் EPF, ETF, வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்

காப்புறுதியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள்

இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 30.09.2012 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விற்பனை முகாமையாளர்
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்,
இல. 571, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்**
**தந்தையும் தாயும் போன்று**

(22605) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன்கூடிய காலநிலை நிலவும்.

### வண்ணைப் பெருமாளுக்கு 17 இல் கொடியேற்றம்

யாழ்ப்பாணம்-வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயப் பெருந்திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள இந்தப் பெருந் திருவிழாவில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் தொடங்கி 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் 26 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (3)

# ஜெனிவாவில் பொங்குதமிழ்

## கனேடியத் தமிழர் அவை அழைப்பு

புலம்பெயர் மக்கள் ஒன்று கூடித் தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற தமிழர் கோட்பாட்டை வலியுறுத்தி எழுச்சியுடன் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு தமது விடுதலை நோக்கிய பாதையை வலுப்படுத்த வேண்டும் எனக் கனேடியத் தமிழர் அவையின் தமிழ் மொழிக்கான ஊடகப் பேச்சாளர் தேவாசபாபதி வேண்டு கோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமைஅன்று ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து கனடா வாழ் தமிழ் மக்களின் சார்பாக பல்லாயிரக் கணக்கானவர்கள் கலந்து கொள்வதன் மூலம் தமிழ் மக்களின் தேசிய எழுச்சியை எந்தச் சக்தியாலும் மழுங்கடிக்க முடியாது என்பதை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்த உள்ளோம்.

விரைவில் நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் நிகழ்வுக்கு எமது மக்கள் திரண்டு சென்று எமது தாயக மக்களின் விடுதலைக்காக ஓங்கிக் குரல் கொடுப்பார்கள் என நம்புகின்றேன் என அந்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளார். (3)

## 'வேலணையின் வரலாறு இன்று வெளியீடு

வவுனியா செப்.15

வேலணை ஊரின் பெருமைகளையும், அந்த மண்ணின் மைந்தர்களது பெருமைகளையும் எடுத்துக் கூறுகின்ற வரலாற்று மணம் மிக்க 'வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்' என்ற நூல் இன்று வெளியிடப்படுகிறது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் யாழ் பல்கலைக்கழக துணை வேந்தருமாகிய பொன்.பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும், யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், நல்லை ஆதீனகர்த்தா ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

பிரதம விருந்தினர் நூலை வெளியிட்டு வைக்க தொழில் அதிபர் எஸ்.பி.சாமி நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

நூலின் அறிமுகவுரையை பேராசிரியர் இரா.சிவசந்திரன் ஆற்றுவார். பேராசிரியர்களான சத்தியசீலன், குகபாலன், முன்னாள் கல்விப் பணிப்பாளர் அருணகிரிநாதன் கல்வியியலாளர் சட்டநாதர் மற்றும் நூலின் துணைப் பதிப்பாசிரியர் ச.மாணிக்கவாசகர் ஆகியோரும் இந்த நிகழ்வில் கருத்துரை வழங்குவார்கள். ஆறு. திருமுருகன், தமிழருவி த.சிவ குமாரன் ஆகியோர் நயப்புரையாற்றுவார் கள்.

கொழும்பு, வவுனியா, கனடா, லண்டன், சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா என பல்வேறு இடங்களில் வெளியிடப்பட்டுள்ள 'வேலணை ஓர் வரலாற்று அறிமுகம்' என்ற இந்த நூல் இப்போது யாழ்ப்பாணத் தில் வெளியிடப்படவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (3-400)

## 3 மணிநேர சோதனையில் 25 வாகனங்களுக்குத் தடை

பதுளை - காலி-எல நகரில் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து நிலை பரிசோதனையின் போது 25 வாகனங்களுக்கு தடை உத்தரவு பிறப்பிக்க பதுளை மோட்டார் வாகனப் பரிசோதகர் எம்.எம்.தயாரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.

மூன்று மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட, இந்தச் சோதனை நடவடிக்கையில்52 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பஸ், வான், முச்சக்கரவண்டி, கார் என்பன இதன்போது சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பாவனைக்கு உதவாத வாகனத் தொகையில் 5 பாடசாலை வாகனங்களும் அடங்குவதாக தெரியவந்துள்ளது. (3)

# அகப்பட்டான் திருடன்

அளவெட்டி, செப்.15

தெல்லிப்பழை வைத்தியசாலை வளாகத்தில் பின்புறமாக அமைந்துள்ள கழிவுகள் அகற்றும் பகுதியில் பட்டப் பகலில் இரண்டு வேலிகளைத் தாண்டி உட்புகுந்த திருடன் அங்கிருந்த பெரும் குழிகளின் மேல் போடப்பட்டிருந்த அலுமினியத் தகடுகளை களவாடிய சம்பவம் கடந்த செவ்வாய்கிழமை பி.ப 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தின்போது அங்கு காணப்பட்ட பித்தளைத்தண்ணீர்ப் பைப்புகளும் களவாடப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

வைத்தியசாலையில் காவல் கடமையில் நின்ற பணியாளர் உணவு அருந்தி விட்டு கை கழுவுவதற்காக வெளியில் வந்தபோது மேற்படி பொருள்கள் களவாடப்பட்டு இருப்பதை அவதானித்தமையால் உடன் வைத்தியசாலை அத்தியட்சகருக்கு தெரியப்படுத்தியதுடன் தெல்லிப்பழை பொலிஸாருக்கும் தகவல் பரிமாறப்பட்டது.

உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால் திருடன் மடக்கிப் பிடிக்கப்பட்டான். அதன்பின் களவாடப்பட்ட பொருள்களும், திருட்டுக்கு பாவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளும் தெல்லிப்பழை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

களவாடப்பட்ட பொருள்களும், மோட்டார் சைக் கிளும் மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைப்பதற்காக பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மேற்படி வைத்தியசாலையில் பல தடவைகள் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றன. இது தொடர்பாக பல முறைப்பாடுகளும் தெல்லிப்பழைப் பொலிஸில் செய்யப்பட்டுள்ளன என வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

(3-36)

### ஆன்மிகச் சொற்பொழிவு

வல்வெட்டித்துறை ஊரிக்காடு நிறுவத்தம்மை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் ஒன்பதாம் திருவிழாவை முன்னிட்டு இன்று முற்பகல் 11மணிக்கு 'ஆலய வழிபாட்டின் மகத்துவம்' எனும் தலைப்பில் சின்மயாமிஷனின் வதிவிட ஆச்சாரி பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ம-14)

**IMMIDIATE VACANCY**

DMI அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு Manager, Assistant Manager, Supervisors, Distributors தேவை.
தகைமை:- (A/L), (O/L), வயதெல்லை: 18 - 35
பயிற்சியளிக்கப்பட்டு நிரந்தர வேலை வாய்ப்பும் வெளி நாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.
பயிற்சியின் போது ரூ 12 000/= - 15 000 வரை.
பயிற்சிக்குப் பின் ரூ. 50000/= இற்கு மேல்
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
(தங்குமிட வசதியுண்டு) (22885) (2-6-7)
தொடர்புகளுக்கு:- 021 7200867, 0775566224

**கரைச்சிப்பிரதேச சபை, கிளிநொச்சி**

**அறிவித்தல்**

**இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்துதல்**

மேற்படி விடயம் தொடர்பாக, எமது சபையால் அவ்வப்போது குறிப்பிடப்படுகின்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்குக் கீழ் வரும் இயந்திரங்களை வாடகைக்குப் பெறவுள்ளதால் அவ்வாகனத்தின் வாடகை விவரங்களைக் குறிப்பிட்டு (மணித்தியாலய அடிப்படையில்) எதிர்வரும் 25.09.2012 ஆம் திகதிக்குள் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

* JCB
* பைக்கோ
* டிப்பர்
* மோட்டர் கிறைண்டர்
* றோலர்

**ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக, எமது சபையால் நடைமுறைப் படுத்தப்படும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காகக் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக் காரர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதால் பின்வரும் ஆவணங்களுடன் எதிர்வரும் 25.09.2012 ஆம் திகதிக்குள் கரைச்சிப்பிரதேச சபைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்

* இக்ராட் புத்தகத்தின் மூலப்பிரதியும், நிழல்பிரதியும் (நிழல்பிரதி சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்)
* கடந்த காலங்களில் தங்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை விவரங்கள்.
* தங்களால் மேற்கொள்ளத்தக்க வேலை விவரங்கள்.

தலைவர், செயலாளர்,
கரைச்சிப்பிரதேச சபை, கிளிநொச்சி.
(F/3361) (2-6-7)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

★ டல்மேசன் ஒரிஜினல் - ஆண் (5 மாதம்)
★ பொமரான் - பெண் (2 மாதம்)
(வக்சினேசன் போடப்பட்டது)
விலை 22000/=
0777363797, 0789978899

**வேலையாள்கள் தேவை**

* கைத்தொலை பேசி திருத்துவதில் முன் அனுபவமுள்ள Software, Hardware தெரிந்தவர்கள்
* லிகிதர் (பெண்)
(22865) (2-6-7)
T.P. 0778722307

**Electrician & Plumber**

உங்கள் விருப்பத்துக்கு ஏற்றவாறு நவீன முறையில் உடன் செய்து தரப்படும்.
தொடர்பு: 0778002591
(22883) (2-6-7)

**காணி விற்பனைக்கு**

உடுவில் முருகமூர்த்தி பாடசாலைக்குப் பின் காணி 2 பரப்பு 20.03 குளி 14 அடிப்பாதையுடன் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:071 8034 179

**கடை வாடகைக்கு**

யாழ். கன்னாதிட்டி சந்திக்கு அருகில் சகல வசதியுடன் கூடிய கடை வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:021 222 9372
077 4002 780

**PERSONAL CLASSES**

**தமிழ் மொழி**

தரம்: 6, 7, 8,9
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
தொடர்பு:077 7293 781 (கஜானன்)

**பெயர் மாற்றம்**

புத்தூர் மேற்கைச் சேர்ந்த குமணதாசன் தமிழீழன் ஆகிய நான் எனது பெயரை குமணதாசன் தமிழினியன் எனப் பெயர் மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் தமிழினியன் என்றே ஒப்பம் இடுவேன்.
-குமணதாசன் தமிழினியன்.
(22904) (2-6-7)

**SHAALI MARKETING**

**விநியோகஸ்தர்கள் தேவை**

தரத்தில் உயர்ந்த சமையல் எண்ணெய், குடிநீர், பழச்சாறு, ஜாம், கோடியல், நூடில்ஸ், தேயிலை வகைகளினை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விநியோகம் செய்து வரும் எமது நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம்-1, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.

சலுகைகள்:
* உயர்ந்த வீத விற்பனைத் தரகு
* கம்பனி விற்பனை பிரதிநிதிகள், மேற்பார்வையாளர்கள்
* விநியோக வாகனத்திற்கான கொடுப்பனவுகள்

மேற்கூறிய வசதிகளினை கருத்திற் கொண்டு முதலீடுகளை மேற்கொள்ள விரும்பும் மாவட்ட விற்பனை விநியோகஸ்தர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 021 205 1060, 077 429 9052
பணிப்பாளர்,
சாலி மார்கெற்றிங்
(21526) (5.6.7)

**45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



02.12.1993 இல் ஒளியாகி

02.08.2012இல் அணைந்தது

திருமதி
**சுதர்சினி அஜந்**

கடந்த 02.08.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் திருமதி சுதர்சினி அஜந் அவர்களின் அந்தியேட்டிகிரியைகள் இன்று[15.09.2012]சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந் நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றி ஆறுதல், அஞ்சலிகள் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழியிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்]

சிவன் கோயிலடி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் 1912–2012

**ஆசியுரை**




'இளமையில் கல், கசடற கல், அதற்குத்தக நில்'என்பவற்றினை அறிந்து உணர்ந்து ஞானமும் கல்வியும் நயக்கும் பிறப்பு மானிடப்பிறப்பு. மனிதர்களிலே தேடற்கரிய பொருள் கல்விப் பொருள் ஆகும்.

தொண்டைமானாறு தந்த பெருமகனார் திரு. சி. வீரகத்திப்பிள்ளை அவர்கள் கடல்படு கடாம் கொண்ட தரும சிந்தையர். இப்பகுதி மழலைகள் இளமையில் கற்று அள்ள அள்ளக் குறையாத கல்வி அறிவு பெற்றுக்கொள்ள விரும்பினர். அதற்கேற்ப தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் அன்னாரது உயரிய உள்ளம் போல வளர்ந்து இன்று நூற்றாண்டு அகவை விழாக் காண்கின்றது. இந்த வித்தியாலயத்தை ஆரம்பித்து வைத்த பிதாமகரை நாம் நன்றி கூர்வது எம் தலையாய பணியாகின்றது.

ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகம்ஐயர்
பிரதமகுரு, ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்,
தொண்டைமானாறு.

**அதிபரின் வாழ்த்துச் செய்தி**



ஒளியைக் காண்போம்' என்ற மகுட வாசகத்தைத் தன்னகத்தே கொண்ட எமது வித்தியாலயம் இன்று தனது நூறாவது அகவையில் காலடி பதித்து நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. 1912ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொண்டைமானாற்றில் வாழ்ந்த பிரபல வர்த்தகர் உயர்திரு. சி. வீரகத்திப்பிள்ளை அவர்களினதும், அவரது சகோதரர்களினதும் உயர் சிந்தனையில் உதித்த இக் கல்விக்கூடம் காலவோட்டத்தில் வளர்ச்சி பெற்று இன்று வடமராட்சிக் கல்வி வலயத்தில் உயர்தரப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. இதன் வளர்ச்சிப்போக்கில் அவ்வப்போது பல்வேறு தடங்கல்களும், இடப்பெயர்வுகளும் ஏற்பட்டுள்ளன.

இப் பாடசாலையில் அக்கறை கொண்ட நல்ல உள்ளங்களின் பெருமுயற்சிகளினால் புதுப்பொலிவு பெற்று இன்று கம்பீரமாக எழுந்து நிற்கின்றது. இந்நிலையில் எமது கல்வித் தாயின் நூற்றாண்டுச் சிறப்பு மலராக 'ஆறு' என்ற பெயரோடு இந்நூல் வெளிவருவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன். என்றுமே வற்றாத நீர்கொண்டதும், பெரும் கடலே தேடி வருகின்றதுமான தொண்டைமானாறு பாய்ந்தோடுவதைப்போன்று இச் சஞ்சிகையும் உலகின் பல பாகங்களிலும் வாழுகின்ற இந்தவித்தியாலயத்தின் பங்காளர்களின் கரங்களிலே தவழவேண்டும். என வாழ்த்துகின்றோம்.

இரா. ஸ்ரீநடராசா
அதிபர்,யா/தொண்டைமானாறு வீ.ம.வித்தியாலயம்.

**சாதனைகள் தொடரட்டும்**



வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த நூறு ஆண்டுகளாக கல்விப்புலத்தில் தனக்கென ஒரு இடத்தினைப் பிடித்து பல்லாயிரக்கணக்கான கல்விமான்களை உருவாக்கியுள்ளது.

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய வடமராட்சிப் பிரதேசம் தனித்துவமான பாரம்பரியத்தினையும் வரலாற்றினையும் கொண்ட பிரதேசமாகும். இந்தப் பிரதேச மக்களின் கடின உழைப்பும் விடாமுயற்சியும் கல்வியை மூலதன மாகக் கொண்ட வாழ்வியல் அமைப்பும் கல்வி உயர்விற்கான அடித்தளங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பாடசாலை 'ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி' இன்று பெருவிருட்சமாக வளர்ச்சியடைந்திருப்பதனைக் காணும்போது பெருமிதமாகவுள்ளது.

திரு. சி. சத்தியசீலன்
செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை
அமைச்சு,வடமாகாணம்.

**கல்விப்பணி சிறக்கட்டும்**



நூறு ஆண்டுகள் வரலாற்றினைக் கொண்ட இவ்வித்தியாசாலை 'ஒளியைக் காண்போம்' என்ற மகுடவாசகத்தை தன் அணிகலனாகக் கொண்டு இப்பிரதேச வறிய, ஏழைச்சிறார்களுக்கு கல்வி ஒளி கொடுத்து வருவது பாராட்டுக்குரியது.

பலமாடி வகுப்பறைக் கட்டடங்கள், கணினி வளநிலையம், ஒன்றுகூடல் மண்டபம், விஞ்ஞான ஆய்வு கூடம், விளையாட்டு மைதானம் என பௌதீக வளங்களையும் ஆசிரிய ஆளணி வளங்களையும் கொண்டு வடமராட்சி வலயத்தில் முன்னணி 1சி பாடசாலையாக வளர்ந்திருப்பது ஸ்தாபகரது எண்ணத்திற்கு வலுவூட்டுவதாக உள்ளது.

இவ்வித்தியாசாலை எதிர்காலத்தில் ஆற்றல்மிக்க, ஆளுமைமிக்க, மனிதப்பண்புகளைப் பேணுகின்ற நல் மாணாக்கர்களை இப்பிரதேசத்திற்கு வழங்கவேண்டுமென வாழ்த்துவதுடன் இக்கல்லூரியின் கல்விப்பணி மேலும் சிறக்க செல்வச் சந்நிதியானை வேண்டிநிற்கின்றேன்.

சி. நந்தகுமார்
வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.

**சிறப்புமலர் வடிவமைப்பு**

சு.குணேஸ்வரன்,
ஆசிரியர் யா/தொ.வீ.ம.வித்தியாலயம்.



**பாடசாலை வரலாறு**



யாழ்ப்பாண இராட்சியத்துடனும், தென்னிந்தியாவுடனும் வரலாற்றுத் தொடர்புள்ள தொண்டைமானாற்றுக் கிராமத்தில் மேலும் ஒரு வரலாற்று நிகழ்வாக 1912ஆம் ஆண்டு திரை கடலோடிய வள்ளல் உயர்திரு சின்னத்தம்ப வீரகத்திப்பிள்ளை அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டதே யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயமாகும்.

நூறு ஆண்டுகள் ஆகிவிட்ட எமது கல்வித்தாய்க்கு 15.09.2012 சனிக்கிழமையும், 16.09.2012 ஞாயிற்றுக்கிழமையும் சிறப்பாக நூற்றாண்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிறுவுனர் சிலை திரைநீக்கம், சாதனையாளர் கௌரவிப்பு, தேசிய ரீதியில் நடைபெற்ற சிறுகதைப் போட்டிக்கான பரிசளிப்பு, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் ஆகியன சிறப்பாக நடைபெறவுள்ளன.

1912 ஆம் ஆண்டு தொண்டைமானாற்றுக் கிராமத்தில் தமிழ்ப்பாடசாலை ஒன்றை ஸ்தாபித்த வீரகத்திப்பிள்ளை அவர்கள் பண்பு தேவை கருதி ஆங்கிலப் பாடசாலை ஒன்றையும் உருவாக்கினார். 1961 ஆம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் தேசியமயமாக்கிய சந்தர்ப்பத்தில் இரண்டு பாடசாலைகளும் ஒரேபாடசாலையாக இணைக்கப்பட்டு அரசாங்கப் பாடசாலையாக ஆக்கப்பட்டது. இப்பாடசாலை 1965 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு க.பொ. த உயர்தரப் பாடசாலையாக உயர்வு பெற்றது.

''ஒளியைக் காண்போம்'' என்ற மகுட வாசகத்தை தன்னகத்தே கொண்ட எமது பாடசாலை இப்பகுதிப் பிள்ளைகளுக்கு கல்விஒளியை மட்டுமன்றி எல்லாவிதமான உயர்வுக்கும் வழிகாட்டி தனது வரலாற்றுப் பணியை சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

சைவப்பாரம்பரியம் கொண்ட எமது கிராமத்தில் வீரகத்திப்பிள்ளை அவர்கள் ஸ்தாபித்த எமது வித்தியாலயம் உயர்வான சைவ பண்பாட்டு விழுமியங்களையும் மிகச் சிறப்பாக இப்பகுதி மக்களுக்கு ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது.

எமது கல்வித்தாயால் உருவாக்கப்பட்ட பல்துறை சார்ந்த சான்றோர்கள் இன்று எமது தாயகத்தில் மட்டுமன்றி உலகம் பரந்து வாழ்ந்து கொண்டாடுகின்றனர். நீதித்துறைக்கு தலைமகனாகத் திகழ்ந்த உயர்நீதிமன்ற நீதிபதி பொன்.சிறீஸ்காந்தராசா, பாக்கு நீரிணையை முதன்முதல் நீந்திக்கடந்து தேசிய புகழ்பெற்ற நவரட்ணசாமி, புகழ்பூத்த அரசியல்வாதி க. துரைரட்ணம், அதே போன்று இன்று விமானப்படையில் விமானப் படைத்தளபதிக்கு அடுத்த நிலையில் வரக்கூடிய எல்லாவித தகைமைகளும் கொண்ட பாலசுந்தரம் பிறேமச்சந்திரன், ஆகியோர் எமது கல்வித்தாயின் தவப்புதல்வர்கள் என்பதை நினைத்து நாம் பெருமையடைகின்றோம்.

தொண்டைமானாறு என்றால் ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயம் எல்லோருக்கும் மனக்கண்முன் தோன்றுவதுபோல தொண்டைமானாற்றில் இன்னொரு புகழ்புத்த நிறுவனமாக யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் வடமராட்சி வலயத்தில் மட்டுமல்லாது யாழ். மாவட்டம் முழுவதிலும் அறியப்படும் நிலைக்கு உயர்வு பெற்றுள்ளது.

இந்த உயர்வுநிலைக்கு வழிவகுத்த இப்பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஸ்தாபகரின் வாரிசுகள், எல்லோரும் வணக்கத்துக்குரியவர்கள்.எம் கல்வித்தாயின் உயர்வுக்காக உணர்வுபூர்வமாகப் பங்காற்றிய அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் இருகரம் கூப்பி வாழ்த்தி வணங்குகிறோம். வாழ்க எமது கல்வித்தாய்.

ந. அரியரத்தினம்
ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்.

**எங்களைக் கல்வியில் உயர்த்திய பாடசாலை**



நூறு வருடங்களுக்கு முன்பு இப்பிரதேசத்தில் முறையான கல்விக்கூடம் இல்லாதநிலை 'வள்ளல்' வீரகத்திப்பிள்ளை அவர்களின் மனதை உறுத்தியது. இதற்கு வடிகாலாக இரு வேறு இடங்களில் 'தமிழ்ப் பாடசாலை' (மதவடிக்கு அண்மையில்) ஒன்றும் ஆங்கிலப் பாடசாலை ஒன்றும் என இரு பாடசாலைகளை தமது சகோதரன் 'இராமசாமி' அவர்களின் உதவியுடன் உருவாக்கினார். காலப்போக்கில் இரு பாடசாலைகளையும் ஒன்றாக்கினார். இது

யாழ் இந்து ஆங்கிலப் பாடசாலை என்று அழைக்கப்பட்டது. இப்பாடசாலையில் தொண்டைமானாறு மட்டுமல்லாது 'இடைக்காடு' போன்ற அயற் கிராம மாணவர்களும் கல்வி கற்று மேல்நிலையை அடைந்தனர்.காலப்போக்கில் தென்னிந்திய திருச்சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட வேதப்பள்ளிக்கூடமும் உள்வாங்கப்பட்டு 'தொண்டைமானாறு மகா வித்தியாலயம்' என அழைக்கப்பட்டது.

எமது பாடசாலை மென்மேலும் பல வளர்ச்சிப்படிகளை அடைய வேண்டும் என வாழ்த்துவதோடு 'பழைய மாணவர் சங்கத் தலைவன் என்ற முறையிலும் இப்பாடசாலையின் ஸ்தாபகரின் உறவினர் என்ற வகையிலும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கனகராஜா ஜெயராஜா
தலைவர்
பழைய மாணவர் சங்கம்.

**ஆசிச்செய்தி**



எமது வித்தியாலயம் நூறு ஆண்டுகளை பூர்த்தி செய்கின்ற இச்சந்தர்ப்பத்தில் அதற்கான விழாவினை கொண்டாடுவதுடன் நூற்றாண்டு விழா மலர் ஒன்றினையும் வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். நாங்கள் எமது மண்ணில் இல்லாவிட்டாலும் உணர்வு பூர்வமாக உள்ளத்தால் எமது கல்வித் தாயை வாழ்த்துகின்றோம்.

கனடாவில் எமது பாடசாலைக்கு உதவுவதற்காக புலம்பெயர்ந்து அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது பாடசாலைச் சமூகத்தினரை உள்ளடக்கி 2011ஆம் ஆண்டு ஒரு அமைப்பை அங்கே ஆரம்பித்தோம். இந்த அமைப்பு இந்த வருடத்தின் ஆரம்பத்தில் எமது கல்வித்தாயின் நூற்றாண்டு நிகழ்வை கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் கலாசார மண்டபத்தில் வெகு விமரிசையாக கொண்டாடியது.

நூற்றாண்டு விழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் எமது வித்தியாலயம் மேலும் எல்லாவகையிலும் சிறப்படைய வேண்டும் என்று எந்நிதியும் தரும் சந்நிதி வேலவனின் திருப்பாதங்களை வேண்டுகின்றேன்.

பொன். புவனேந்திரஐயர்
பிரதமகுரு, கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி
ஆலயம்

**சிறந்த சமுதாயத்தை உருவாக்குகிறது**



''தொண்டைமானாறு'' என்றதும் இரண்டு நிறுவனங்கள் நினைவுக்கு வரும். ஆற்றங்கரையோரமாக நின்று அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ''செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்'' மற்றையது தொண்டை மானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தி யாலயம் ஆகிய இரண்டும் நிறுவன மயப் படுத்தப்பட்டு இலங்கையின் புகழ் பெற்ற இரு தலங்களாக விளங்கு கின்றன.

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் கல்வி அபிவிருத்தியில் மட்டுமல்லாது பல்வேறு துறைகளிலும் வளரர்ச்சி பெற்று வருவதால் உயர் விழுமியங்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தை யும் உருவாக்கி வருகின்றது. இவ்வாறு எல்லாவகையிலும் இவ் வித்தியாலயம் மேலும் வளரர்ச்சியடைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
நிறைவேற்றுப் பணிப்பாளர், ''ஆறுதல்'' நிறுவனம்.

**கல்வியில் முன்னிலையில்**



இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்திலும், தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களிலும் மேலோங்கி நிற்கும் தொண்டைமானாறு, உலக மக்களுக்கு ஆன்மிக ஒளிபரப்பும் ஒரு புண்ணிய கிராமம். 'எந்நிதியும் தருவான் செல்வச் சந்நிதியான்' என்பதற்கிணங்க சந்நிதியான் குடிகொண்ட கோயில் நகரத்தில் கப்பலோட்டி எமது மண்ணுக்குப் பெருமையும் பொன்னும் சேர்த்த வள்ளல் வீரகத்திப்பிள்ளை அவர்களை ஈன்றெடுத்த பெருமையும் தொண்டைமானாற்றுக்கே உரியது.

ஆரம்பப் பாடசாலையாகத் தோற்றம்பெற்ற இப் பாடசாலை பின்னர் இடைநிலைப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்ட நிலையில் பல வருடங்கள் தொடர்ச்சியாக க.பொ.த. சாதாரண தரத்தில் மிக உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று தொண்டைமானாறு மண்ணுக்கே பெருமை சேர்த்து வந்தபோதும் இங்கு க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் இல்லாததால் பல மாணவர்கள் தமது உயர் கல்வியைப் பெறமுடியாத நிலையில் தவித்தனர்.

ஒவ்வொரு வருடமும் பல மாணவர்கள் பல்கலைக் கழகத் திற்கும், கல்வியியல் கல்லூரிக்கும் சென்று தமது மூன்றாம் நிலைக் கல்வியைப் பெறக்கூடிய ஒரு வாய்ப்பு தொண்டைமானாறு மாணவர்களுக்குக் கிடைத்து வருவது அமரர் வீரகத்திப்பிள்ளை அவர் களது கல்விப் பணியின் பெறுபேறுதான். மேலும் பல சாதனைகளை படைக்க வாழ்த்துகிறேன்.

நடராசா ஆனந்தராஜ்,
நகரசபைத் தலைவர்,வல்வெட்டித்துறை

**நூற்றாண்டு விழா சிறக்கட்டும்**



தொன்மைகள் நிறைந்த தொண்டைமானாற்றுக் கிராமத்தில் கல்வி ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் யாழ். தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடு வதையிட்டு இப் பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

நூற்றாண்டு விழா காலப்பகுதியில் இப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து பணிபுரிய கிடைத்தமை பெரும் பேறாகவே கருதுகிறேன். எமது பாடசாலை இயற்கை நிழலில் ஒற்றுமையான சமூகத்தில் அமைந்திருப்பது மேலும் ஒரு சிறப்பாகும்.

எமது பாடசாலை இக் கிராமத்துக்கு மட்டுமன்றி அயற் கிராமத்துக்கும் கல்வி ஒளி பரப்பி பல கல்விமான்களையும், புத்திஜீவிகளையும், விளையாட்டு வீரர்களையும், சாதனையாளர்களையும் உருவாக்கியுள்ளது. மேலும் பல சாதனைகளைப் படைக்கவும் நூற்றாண்டு விழா சிறக்கவும் எல்லாம் வல்ல சந்நிதி முருகனை வேண்டி எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. உதயகுமார்
யாழ்.தொண்டைமானாறு வீ.ம.வி.
அபிவிருத்தி சங்க செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லின விதை நெல்லை வழங்குமாறு முல்லைத்தீவு விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு,செப்.15

முல்லைத்தீவில் வறட்சியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நல்லின விதை நெல்லை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இம்முறை சிறுபோகத்தின்போது வறட்சி காரணமாக நோய்களால் பாதிக்கப்பட்ட நெல்லையே விவசாயிகள் அறுவடை செய்துள்ளனர். இதனால் காலபோகத்துக்குத் தேவையான விதைநெல் இல்லாத நிலையே இங்கு காணப்படுகிறது.

சிறுபோகத்தின்போது தம்மால் அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் காலபோகத்தின்போது விதை நெல்லாக உபயோகித்தால் விதைகள் பாதிக்கப்பட்டு தாம் பெரும் நட்டத்தையே எதிர்கொள்ள நேரிடுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே காலபோக நெற்செய்கைக்குத் தேவைப்படும் விதை நெல்லைப் பெற்றுத் தருமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் மிகப் பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன் கட்டுக்குளம் வேகமாக வற்றிவருவதால் இதிலுள்ள மீன்கள் சாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அத்துடன் குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழி லாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள சிறு குளங்கள் யாவும் வற்றிய நிலையில் முத்து ஐயன் கட்டுக்குளம் மட்டுமே சிறிதளவு நீருடன் காணப்படுகின்றது. குடிப்பதற்கு நீரில்லாததால் கால்நடைகளும், காட்டு மிருகங்களும் சாவின் விளிம்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## பொலிஸ் நிலையத்தை திறப்பதற்கான ஏற்பாடு



துணுக்காய்,செப்.15

மல்லாவியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மல்லாவி பொதுச் சந்தையின் அருகில் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள இடத்தில் பொலிஸ்நிலையமும்பொலிஸார் தங்குவதற்கான விடுதியும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

மேலும் இந்தப் பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள இடங்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரின் மேற்பார்வையில் சீர்செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கெனக் கனரக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றின் மூலமாகப் பள்ளமான இடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

விரைவில் இந்தப் பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-415)

## வவுனியா மேல் நீதிமன்றத்தால் 43 வழக்குகள் கையளிப்பு

வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வந்த 43 வழக்குகள் மன்னார் மேல் நீதிமன்றில் விசாரணைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மேல் நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன் மேல் நீதிமன்ற நீதிபதியாக எஸ்.தியா கேந்திரன் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் மன்னாரில் மேல் நீதிமன்றத்தின் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் வவுனியா மேல் நீதிமன்றில் முன்பு இடம் பெற்று வந்த மன்னார் நியாயாதிக்க எல்லைக்குள் நிகழ்ந்த குற்றச் சம்பவங்களில் 43 வழக்குகள் மன்னார் மேல் நீதிமன்றில் விசாரணைக்காக கடந்த 3 ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றத்தின் அதிகாரிகளினால் மன்னார் மேல் நீதிமன்றில் கையளிக்கப்பட்டன.

கொள்ளை வழக்குகள்-3, கொலைவழக்குகள்-2,கொலை முயற்சி வழக்குகள்-2, பாலியல் வல்லுறவு வழக்கு-1, பாலியல் வல்லுறவுக்கு முயற்சித்தல் தொடர்பான வழக்கு-1,அபாயகரமான ஆயுதங்களை வைத்திருந்தமை தொடர்பான வழக்குகள்-7, ஹெரோயின் போதைவஸ்து வழக்குகள்-2,கஞ்சா போதைவஸ்து வழக்கு-1, விடுதலைப்புலிகள் தொடர்பான வழக்குகள்- 11,தடை செய்யப்பட்ட பொருள்களைக் கடத்தியமை தொடர்பான வழக்குகள்-10, பண மோசடி வழக்கு-1, இலஞ்சம் வாங்கியமை தொடர்பான வழக்குகள்-2, ஆகிய 43 வழக்குகளே வவுனியா மேல் நீதிமன்ற உயர் அதிகாரிகளினால் கையளிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற வழக்குகள் அனைத்தும் இனிவரும் காலங்களில் மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## சொரூபத்தை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு

மன்னார் உப்புக் கூட்டுத் தாபனத்துக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டுள்ள சொரூபத்தை அகற்றுமாறு மன்னார் நீதிவான் ஏ.யூட்சன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் உப்பள நிர்வாகத்தினர் தமக்குச் சொந்தமான காணியில் தமது அனுமதியின்றி மதச் சொரூபம் ஒன்று வைக்கப்பட்டுள்ளதாகக் கடந்த ஜனவரி மாதம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த னர்.

இந்த வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கு மீண்டும் மன்னார் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

இதனை விசாரணை செய்த நீதிவான் குறித்த சொரூபத்தை அகற்றுமாறு மன்னாப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (க-12)

## பயங்கரவாதத்தை விரட்ட பாகிஸ்தான் பங்களித்தது

### ஜனாதிபதி அந்த நாட்டு எம்பிக்களுக்கு புகழாரம்

பாகிஸ்தானின் உதவிகள் இன்றி இலங்கையில் பயங்கரவாதத்தை விரட்டியடித்திருக்க முடியாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார். பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை அலரிமாளிகையில் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

''பாகிஸ்தான் இலங்கையின் உண்மையான நண்பன் என்று நிரூபித்துவிட்டது என்பதை எனது தலைமையிலான அரசும் நாட்டு மக்களும் அறிவர். இதற்காக பாகிஸ்தான் மீது நாம் ஆழமான பற்றைக் கொண்டிருப்போம்'' என அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் நபிஷா ஷா தலைமையில் 22 உறுப்பினர்கள் அடங்கிய குழு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்த நிலையில் நேற்று ஜனாதிபதியை சந்தித்தது.

இலங்கையில் 30 ஆண்டுகளாக தொடர்ந்த போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பாகிஸ்தான் நிபந்தனைகள் ஏதுமற்ற முழுமையான ஆதரவை வழங்கியதை இந்த சந்தர்ப்பத்தில்ஷாநினைவுகூர்ந்தார்.

இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளையும் புரிந்துணர்வுகளையும் மேலும் அதிகரித்து நெருக்கமாக பணியாற்றுவது பற்றியும் இந்த சந்திப்பில் ஆராயப்பட்டது. (உ-10)

## சமூகச் சீர்கேடுகளால் குடும்பங்களுக்கு பாதிப்பு

முல்லைத்தீவு,செப்.15

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நிலவும் சமூகச் சீர்கேடுகளால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியா விலிருந்து இங்கு வருகை தந்த பெண்ணொருவருடன் குடும்பஸ்தர் ஒருவர் தொடர்புகளை ஏற்படுத்தியதால் பெரும் அமளி ஏற்பட்டுக் கடைசியில் அடிதடியில் முடிந்தது.

விடயம் வெளியே வந்த தால் அந்தக் குடும்பஸ்தர் அவமானம் தாங்க முடியாது எங்கேயோ சென்று விட்ட தாகவும் கூறப்படுகின்றது.

இதைப்போன்று பல குடும்பங்கள் பாதிக்கப் படு வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## ரெலோ செயலாளரின் பெயரில் தவறு வழக்கு டிசெம்பருக்கு ஒத்திவைப்பு

### தமிழ் கட்சிகளுக்கு எதிரான வழக்கில்

நான்குதமிழ் கட்சிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் மனுதாரர்கள் ரெலோ அமைப்பின் செயலாளரின் பெயரை பிழையாக குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்து டிசெம்பர் 5 ஆம் திகதி வரை விசாரணைகளை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய நான்கு தமிழ் கட்சிகளும் இலங்கைக்குள் தமிழர்களுக்கான தனி நாடு ஒன்றை அமைப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதை நீதிமன்றம் வெளிப்படுத்த வேண்டும் என்று கோரி சிங்கள ஜாதிக பெரமுன என்ற அமைப்பால் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

நீதியரசர்களான என்.ஜீ. அமரதுங்க, சலீம் மர்ஸூப், பீ.ஏ. ரட்னாயக்க ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை உயர் நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது ரெலோ அமைப்பின் செயலாளர் தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளும் நீதிமன்றில் பிரசன்னமாயிருந்தனர்.

இந்த விசாரணையின் போது பிரதிவாதிகள் தரப்பில் ரெலோ கட்சியின் செயலாளரின் பெயர் பிழையாகக் குறிப்பிட்டுள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரனால் ஆட்சேபனை ஒன்று எழுப்பப்பட்டது. ரெலோ அமைப்பின் செயலாளரின் பெயர் மகேந்திரன் என்பதற்கு பதிலாக மனுதாரர்கள் என்.இந்திரகுமார் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இது தவறானது என்று அவர் தெரிவித்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் டிசெம்பர் 5 திகதிவரை விசாரணைகளை ஒத்திவைத்ததுடன், அடுத்த விசாரணையின் போது குறித்த தவறை மனுதாரர்கள் திருத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய மூன்று கட்சிகளும், தமது பெயரில் நேரடியாகவே தனி நாட்டுக் கோரிக்கையை கொண்டிருப்பதாகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது அதுவும் தமிழர்களுக்கான தனிநாட்டை நிறுவுவதை நோக்கமாக கொண்டதாகவே இருப்பதாகவும் மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ங)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**POST OF WORKS SUPRINTENDENT [ELECTRICAL] [ON ASSIGNMENT]**
**WALK IN INTERVIEW**

The University of Jaffna requires the services of Works Superintendent [Electrical], / [Civil] on Assignment Basis.

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV and relevant documents on 24.09.2012 at 10.00 a.m in the Board Room of the University of Jaffna.

A candidate who possesses the following qualifications may apply:

A. National Diploma in Technology [NDT] or equivalent qualifications and have at least four years experience in the relevant filed after obtaining such qualifications.

Note:- Period of in-plant training will not be counted for the four years experience.

OR

B. National Certificate in Technology [NCT] or equivalent qualifications and have at least ten years experience in the relevant field after obtaining such qualifications.

Preference will be given to those who have knowledge and experience in Civil Work.

Salary:- Rs. 25,475/- will be paid as a monthly remuneration during the period of appointment on assignment basis.

REGISTRAR,
University of Jaffna,
14.09.2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலக்கினார் மதுசன் கவிழ்ந்தது ஹாட்லி


சஜீகன்

**ஹாட்லி அணிக்கெதிரான இந்தப் போட்டியில் யாழ். இந்துவின் மதுசன் 60 ஓட்டங்களை விளாசியதுடன், நான்கு இலக்குகளையும் வீழ்த்தினார். அவருடன் இணைந்து சஜீகனும் 48 ஓட்டங்களைக் குவித்து வெற்றிக்கு வழிசமைத்தார்.**


மதுசன்

யாழ்ப்பாணம், செப்.15

சஜீகனுடன் இணைந்து அற்புதமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியதுடன், நான்கு இலக்குகளையும் வீழ்த்தி மதுசன் பிரகாசிக்க, 54 ஓட்டங்களால் ஹாட்லிக் கல்லூரியை வீழ்த்தியது யாழ். இந்துக் கல்லூரி அணி.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் பிரிவு 3 இற்கான 17 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்று, கடந்த புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய யாழ். இந்துக் கல்லூரி அணியினர் 39 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் மதுசன் 60 ஓட்டங்களையும், சஜீகன்48 ஓட்டங்களையும், நிலோஜன் 30 ஓட்டங்கள்ளையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஹாட்லிக் கல்லூரி சார்பாக அருள்ராஜ், நிரோஜன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 30.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதனால் இந்து அணி 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹாட்லிக் கல்லூரியை வெற்றி கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஹாட்லி வீரர்களான அனந்தசஜன் 39 ஓட்டங்களையும், சஜீவன் 33 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். இந்து கல்லூரி அணி சார்பாக மதுசன் 4 இலக்குகளையும்,சிந்துஜன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (ங-23)

# இன்றைய ஆட்டம்

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப. 3.30 மணிக்கு**

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்

**பி.ப. 4.30 மணிக்கு**

கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சுடர்ஒளி விளையாட்டுக் கழகம்

* * *

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்ற ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

**காலை 8.30 மணி**

திருநெல்வேலி மத்திய விளையாட்டுக் கழகம் எதிர் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழகம்.

**முற்பகல் 11 மணிக்கு**

ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம்

**பிற்பகல் 2.30 மணிக்கு**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் கிறாஸ் ஹொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம்

* * *

வவுனியா செவ்வானம் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'வவுனியா பிறிமிர் லீக் 20/20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்ற உள்ள அணிகளின் விவரம் வருமாறு -

**காலை 8.30 மணி**

செட்டிகுளம் கலைமகள் விளையாட்டுக்கழகம் எதிர் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

**பிற்பகல் 1 மணிக்கு**

தோணிக்கல் குட்ஸ்ரார் விளையாட்டுக்கழம் எதிர் வவுனியா யுனிபைட் விளையாட்டுக்கழகம்.

(ங-23)

# தரவரிசையில் கே.ஸி.ஸி.ஸி. முதலிடம்

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் மேற்கொண்டு வரும் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கான தரப்படுத்தலில் கே.ஸி.ஸி.ஸி. அணி தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கிறது.

யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் 09.09.2012 ஆம் திகதி வரை நடைபெற்ற 96 கிரிக்கெட் போட்டிகளின் அடிப்படையில் கணிக்கப்பட்ட தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலின் அடிப்படையில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி 21 போட்டிகளில் பங்குபற்றி 16 போட்டிகளில் வெற்றி பெற்று 112.6 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 20 போட்டிகளில் பங்குபற்றி 12 போட்டிகளில் வெற்றி பெற்று 100.2 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் யாழ்.பல்கலைக்கழக அணி 15 போட்டிகளில் பங்குபற்றி 10 போட்டிகளில் வெற்றி பெற்று 89.1 புள்ளிகளைப் பெற்று 3 ஆவது இடத்திலும் உள்ளன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 82.5 புள்ளிகளைப் பெற்று 4 ஆவது இடத்திலும், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 67.3 புள்ளிகளைப் பெற்று 5 ஆவது இடத்திலும், யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம், பற்றீசியன் விளையாட்டுக்கழகம் என்பன தலா 54.2 புள்ளிகளைப் பெற்று ஆறாவது இடத்திலும், ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 31.7புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்திலும், யூனியன் விளையாட்டுக்கழகம் 30.3 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்திலும், மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் 25.2 புள்ளிகளைப் பெற்று 10 ஆவது இடத்திலும், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழகம் 24.8 புள்ளிகளைப்பெற்று 11 ஆவது இடத்திலும் உள்ளன.

அத்துடன் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 23.9 புள்ளிகளைப் பெற்று 12 ஆவது இடத்தையும், கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக 'பி' அணி 23.9 புள்ளிகளைப் பெற்று 13 ஆவது இடத்தையும், கிறாஸ் ஹொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் 22.3 புள்ளிகளைப் 14 ஆவது இடத்தையும், ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் 18.7 புள்ளிகளைப் பெற்று 15 ஆவது இடத்தையும் , ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 12.5 புள்ளிகளைப் பெற்று 16 ஆவது இடத்தையும் அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் 11.6 புள்ளிகளைப் பெற்று 17 ஆவது இடத்தையும் , கழுகு விளையாட்டுக்கழகம் 10.0 புள்ளிகளைப் பெற்று 18 ஆவது இடத்தையும், நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 7.3 புள்ளிகளைப்பெற்று 19 ஆவது இடத்தையும் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழகம் 3.6 புள்ளிகளைப் பெற்று 20 ஆவது இடத்தையும் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் (புளுஸ்) 3.5 புள்ளிகளுடன் 21 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. எதுவித புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளாத வளர்மதி விளையாட்டுக்கழக அணி 22 ஆவது இடத்தில் உள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலில் 44 புள்ளிகளுடன் முதலாவது இடத்தை யாழ். பல்கலைக்கழக அணியும்,37 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும், 28 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தை யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணியும் கைப்பற்றியிருந்தன.

இதேபோன்று 2011 ஆம் ஆண்டு 59 புள்ளிகளைப் பெற்ற யாழ். பல்கலைக் கழக அணி முதலாம் இடத்தினையும் 51.5 புள்ளியைப் பெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி இரண்டாவது இடத்தினையும், 47 புள்ளிகளைப் பெற்ற கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி 3 ஆம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தரவரிசைப் பட்டியல் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளுக்கிடையே 2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முக்கோணத் தொடர் கிரிக்கெட் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றிக்கிண்ணத்தை பெற்றிருந்தது. 2012 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்படும் முதல் மூன்று அணிகளும் 2013 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் முக்கோணத்தொடர் போட்டியில் கலந்துகொள்வதற்கான தகுதியைப் பெறவுள்ளன.

(ங-23)

# வவுனியா நெளுக்குளம் கலைமகள் தேசிய மட்ட எறிபந்துப் போட்டிக்கு

இன்றும் நாளையும் கண்டியில் உள்ள கிங்ஸ் வூட் மைதானத்தில் நடைபெறவுள்ள தேசியமட்ட மகளிர் எறிபந்து விளையாட்டில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியும் பங்குபற்றவுள்ளது. மாகாண மட்டத்தில் சாதித்த இந்த அணி தேசிய மட்டப் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி பதக்கங்களை வெல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மகளிர் எறிபந்து அணியில் பங்கேற்கும் வீராங்கனைகளின் விவரம் வருமாறு-

ஜே.நிவேதிகா, எஸ்.தீபிகா, கே. சங்கீதா, கே.கீதாஞ்சலி, கே.தயாளினி, ரி.கிருஷாந்தினி, கே.கருணாகரி, பி.ஜானகி ஆகியோரைக் கொண்ட 10 பேர் அடங்கிய அணியே தேசிய மட்டப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது. இந்த அணிக்குப் பயிற்றுநர்களாக ஆசிரியர் திருமதி க. யூட் பரதமாறன், பிரதி அதிபர் திருமதி எஸ். பத்மநாதன் ஆகியோர் உடன் சென்றுள்ளனர்.

(ங-23-402)

# தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றச் செல்லும் தென்மராட்சி வீர,வீராங்கனைகள் கௌரவிப்பு

தென்மராட்சி, செப்.15

தேசிய நிலை விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றவுள்ள தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் விளையாட்டு உடைகளும் கேடயங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் சுமார் 50ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உடைகளும் கேடயங்களும் இவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தேசிய நிலை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 43 வீர,வீராங்கனைகளுக்கும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கும் பிரதேசத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் வெற்றிகளைப் பெறுவதற்குரிய ஆசிகளை விழாவில் கலந்து கொண்ட பலரும் தெரிவித்தனர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டு வீர, வீராங்கனைகளுக்கு ஆசிகளை வழங்கினர்.

பல்லேகலையில் நடைபெறவுள்ள தேசிய நிலை போட்டிகளில் பங்குபற்றச் செல்லும் தென்மராட்சி கல்வி வலயத்தை சேர்ந்த

19 வயதின் கீழ் பிரிவு எல்லே-ஆண்கள்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி (20 பேர்) 15 வயதின் கீழ் பெண்கள்-கபடிப் போட்டி-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (12 பேர்) 15 வயது-பெண்கள் கராத்தே-கைதடி நவீல்ட் பாடசாலை (5 பேர்)

மற்றும் தடகளப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள

ம.ரஜிதரன்- மட்டுவில் ஸ்கந்தவரோதய ம.வி. (400 மீற்றர், முப்பாய்ச்சல், நீளம் பாய்தல்-21 வயதின் கீழ்)

எஸ்.மிதுலன் -சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (400 மீற்றர் ஓட்டம்-17 வயதின் கீழ்)

கே.கலைமகள்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி (100 மீற்றர் தடைதாண்டல்- 19 வயதுக் குட்பட்ட பெண்கள் பிரிவு)

ஆர்.இராஜலக்ஸ்மி- உசன் இராமநாதன் ம.வி. (200 மீற்றர் ஓட்டம்- 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு)

ஆகியோரும் அவர்களின் பயிற்றுநர்களுமே இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

(ங-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

# இன்னும் 3 தினங்களே

## அறிமுகம்:

“ மாற்றம் என்பது உலகில் மாற்றமில்லாதது. கிரிக்கெட் மாத்திரம் விதிவிலக்கல்ல. அவசர உலகத்தின் போக்குக்கு தேவை விரைவான முடிவு. அதற்காக படைக்கப்பட்டது ரி-20’. இதன் பிரவேசம் 2003. கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்தில் பரீட்சார்த்தம். சர்வதேசத்துக்குச் செல்ல காலம் எடுத்தது. மெல்ல மெல்ல இதன் ருசியை சர்வதேசம் நுகர்ந்தது. இதனால் இதன் மீதான தாகம் பன்மடங்காகியது.”





செப்.18 முதல் – ஒக். 7 வரை



# தினம் ஒரு பரிசு

உதயன் வழங்கும் விசேட பரிசு மழையில் நனைவதற்குத் தயாராகுங்கள்...

## 2007 ஆம் ஆண்டு முதலாவது ரி-20

2007 ஆம் ஆண்டில் முதலாவது ‘ரி-20’ அரங்கேறியது. புதிய களம். பழைய வீரர்கள். அதிரடிகளின் விற்பன்னர்களுக்கு வாய்ப்பு. ஆபிரிக்காவின் தென் முனையில் அமைந்துள்ள தென்னாபிரிக்காவில் முதலாவது சரவெடி. முதல் ஆட்டத்தில் மோதின தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள். 20 பந்துப் பரிமாற்றங்களில் இரு அணிகளும் 200 ஓட்டங்களை தாண்டி பரவசப்படுத்தியது.

தொடர் ஆட்டங்களில் இலங்கையும் பங்கெடுத்தது. எம்மவர்களுக்கு அதிரடிகள் புதிதல்ல. இதனால் இற்றைவரையில் முறியடிக்கப்படாத ‘ரி-20’ சாதனை எங்களுக்குரியது. 2007 ஆம் ஆண்டில் ஆபிரிக்க மண்ணுக்கு சொந்தமான அணியுடன் ஓர் ஆட்டம். கென்யாவுடன் மோதியது இலங்கை சிங்கங்கள். வெளுத்து அடித்ததில் எங்களவர்கள் 6 இலக்கைப் பறிகொடுத்து அடித்தனர் 260 ஓட்டங்கள். இன்று வரையில் ‘ரி-20’ அதிகூடிய ஓட்டம் எங்களுடையதே.

பரவசத்துடன் நகர்ந்த தொடர். எட்டியது இறுதியை. பரம எதிரிகள் முதலாவது கிண்ணத்துக்காக மோதல். பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றாலும் இருவரும் திறமையான சண்டைக்காரர்கள். இந்தியா, பாகிஸ்தான் மோதியது அந்தக் கிண்ணத்துக்காக. இருவரும் பல்துறை விற்பன்னர்களை கொண்டிருந்ததால் வெற்றி எவருக்கு என்பதை கணிப்பதற்கு கஷ்டமாக இருந்தது.

இந்தியர்கள் பூவா தலையா போட்டுப் பார்த்ததில் வென்றனர். தெரிந்தெடுத்தனர் துடுப்பாட்டத்தை. களமிறங்கிய அணியில் கம்பீர் மட்டும் அதிரடியாட்டம். ஏனையோர் சுருண்டனர். தனித்தாடிய கம்பீர் 54 பந்துகளில் 75 ஓட்டங்கள் ‘சிம்பிளாய்’ பெற்றுக் கொடுக்க பாரத தேசம் 157 ஓட்டங்களை 5 இலக்குகளைப் பறிகொடுத்துப் பெற்றது.

பதிலளிக்கத் தொடங்கியது பாகிஸ்தான். சீராக சிதறியது அவர்கள் இலக்கு. பூம் பூம் அப்ரிடி ‘டக் அவுட்டாக’ பாகிஸ்தான் ஆட்டம் முடிவுரை கண்டது. இருந்தும் துளி நம்பிக்கை மிஷ்பா. கடைசி 4 பந்துகள் மீதமிருப்பு. பெற வேண்டிய ஓட்டம் 6. இருப்பது ஓர் இலக்கு. மிஷ்பாவின் ‘ஷொட்’ தவறியது. கிண்ணம் இந்தியாவிடம் வீழ்ந்தது. ஆட்டநாயகன் இப்ரான் பதான். பந்து வீச்சு அவரது கட்டுப்பாட்டினுள் இருந்ததால். தொடர் நாயகன் அப்ரிடி. இறுதி ஆட்டம் தவிர மற்றைய ஆட்டங்களில் சகலதுறையிலும் கலக்கியதால். [5]




குழு ‘ஏ’
ஏ - 1 இங்கிலாந்து, ஏ - 2 இந்தியா, தகுதி அணி - 2 ஆப்கானிஸ்தான்
குழு ‘பி’
பி - 1 ஆஸ்திரேலியா, பி - 2 மேற்கிந்தியத்தீவுகள், தகுதி அணி - 1 அயர்லாந்து
குழு ‘சி’
சி - 1 இலங்கை, சி - 2 தென்னாபிரிக்கா, சிம்பாப்வே
குழு ‘டி’
டி - 1 பாகிஸ்தான், டி - 2 நியூஸிலாந்து, பங்களாதேஷ்

| திகதி | நேரம் | அணிகள் | மைதானம் |
|---|---|---|---|
| 18/09/2012 | இரவு. 7.30 | இலங்கை எதிர் சிம்பாப்வே | அம்பாந்தோட்டை விளையாட்டரங்கு |
| 19/09/2012 | பி.ப. 3.30 | ஆஸ்திரேலியா எதிர் அயர்லாந்து | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 19/09/2012 | இரவு 7.30 | ஆப்கானிஸ்தான் எதிர் இந்தியா | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 20/09/2012 | இரவு 7.30 | தென்னாபிரிக்கா எதிர் சிம்பாப்வே | அம்பாந்தோட்டை விளையாட்டரங்கு |
| 21/09/2012 | பி.ப. 3.30 | பங்களாதேஷ் எதிர் நியூஸிலாந்து | பல்லேகல |
| 21/09/2012 | இரவு 7.30 | ஆப்கானிஸ்தான் எதிர் இங்கிலாந்து | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 22/09/2012 | பி.ப. 3.30 | இலங்கை எதிர் தென்னாபிரிக்கா | அம்பாந்தோட்டை விளையாட்டரங்கு |
| 22/09/2012 | இரவு 7.30 | ஆஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியத்தீவுகள் | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 23/09/2012 | பி.ப. 3.30 | நியூஸிலாந்து எதிர் பாகிஸ்தான் | பல்லேகல |
| 23/09/2012 | இரவு 7.30 | இங்கிலாந்து எதிர் இந்தியா | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 24/09/2012 | இரவு 7.30 | அயர்லாந்த எதிர் மேற்கிந்தியத்தீவுகள் | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 25/09/2012 | இரவு 7.30 | பங்களாதேஷ் எதிர் பாகிஸ்தான் | பல்லேகல |

| திகதி | நேரம் | அணிகள் | மைதானம் |
|---|---|---|---|
| 27/09/2012 | பி.ப. 3.30 | சுப்பர் - 8 சுற்று | பல்லேகல |
| 27/09/2012 | இரவு 7.30 | சுப்பர் - 8 சுற்று | பல்லேகல |
| 28/09/2012 | பி.ப. 3.30 | சுப்பர் - 8 சுற்று | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 28/09/2012 | இரவு 7.30 | சுப்பர் - 8 சுற்று | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 29/09/2012 | பி.ப. 3.30 | சுப்பர் - 8 சுற்று | பல்லேகல |
| 29/09/2012 | இரவு 7.30 | சுப்பர் - 8 சுற்று | பல்லேகல |
| 30/09/2012 | பி.ப. 3.30 | சுப்பர் - 8 சுற்று | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 30/09/2012 | இரவு 7.30 | சுப்பர் - 8 சுற்று | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 01/10/2012 | பி.ப. 3.30 | சுப்பர் - 8 சுற்று | பல்லேகல |
| 01/10/2012 | இரவு 7.30 | சுப்பர் - 8 சுற்று | பல்லேகல |
| 02/10/2012 | பி.ப. 3.30 | சுப்பர் - 8 சுற்று | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 02/10/2012 | இரவு 7.30 | சுப்பர் - 8 சுற்று | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 04/10/2012 | இரவு 7.00 | முதலாவது அரையிறுதி | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 05/10/2012 | இரவு 7.00 | இரண்டாவது அரையிறுதி | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |
| 07/10/2012 | இரவு 7.00 | இறுதி ஆட்டம் | ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இணைவாரா பீற்றர்ஸன்

இங்கிலாந்து அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் பீற்றர்சன் சமீபத்தில் ஓய்வு பெற்ற ஸ்ரோரஸ் மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட பிரச்னை காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

பயிற்சியாளர் அண்டி பிளவர் மற்றும் ஸ்ரோரஸை கிண்டல் செய்து எஸ்.எம்.எஸ் அனுப்பிய விவகாரத்தில் அவர் நீக்கப்பட்டார். இதற்கிடையே அவர் தனது செயலுக்காக வருத்தம் தெரிவித்து இருந்தார். இதை இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஏற்றுக் கொண்டு பீற்றர்சனை மீண்டும் அணியில் சேர்க்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இங்கிலாந்து அணியில் பீற்றர்சன் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய சுற்றுப் பயணத்திற்கான இங்கிலாந்து அணி எதிர்வரும் 18 ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது. இங்கிலாந்து அணி நவம்பர், டிசெம்பர் மாதங்களில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட் மற்றும் இரண்டு 'ரி-20' போட்டியில் ஆடுகிறது. பின்னர் ஜனவரி மாதம் 5 ஒரு நாள் போட்டியில் விளையாடுகிறது. (5)

**BIT Project மற்றும் Semester வகுப்புகள்**
- 2007 இல் இருந்து Supervisor(30 Projects)
- யாழில் 25 இற்கு மேற்பட்ட Software
- Windows and Web based Projects
- BIT மற்றும் ஏனைய IT Group classes
- சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில்

இல:28/23, மணல்தரை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS) 0779785796
(Sat 11am - 1pm, Sun 9am - 2pm, week days 4.30pm - 8.30pm)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா பொன்னையா



நந்தாவில் ஒழுங்கை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகனவும் கொண்ட திருமதி தங்கம்மா பொன்னையா (இரத்தினக்கா) நேற்றுமுன்தினம் (13.09.2012)வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் சந்திரலீலா (கொக்குவில்), யோகதாசன் (கனடா), சாந்தகுமாரி (கனடா), செல்வகுமாரி (கனடா), நந்தகுமாரி (லண்டன்), மோகனதாசன்(கனடா), ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சீதாலட்சுமி(கனடா), தவராஜா(கனடா), மகேஸ்வரன்(கனடா), ஸ்ரீதரன்(லண்டன்), சகுந்தலா(கனடா), ஆகியோரின் அன்பு மாமியும், அசோகன்(யாழ். மாநகர சபை), சோபனா (AVIVA NDB INSURANCE) , ஜெயசீலன் (கனடா) அனுசா (கனடா), மேனகா(கனடா), சுதாகரன்(கனடா), ரேகா(கனடா), தசிகா(கனடா), தஷாந் (கனடா), லவன் (கனடா), லாவன்ஜா(கனடா), நிருஜா(லண்டன்), மிதுசா (லண்டன்), மிசாலினி(கனடா), சாஜினி(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரிஷ்,ஹரினி, நிகாஷ்(கனடா), நிக்கிஷா(கனடா), ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(16.09.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கரிஷ் காடின்'
நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்

**CIMA கல்வி @ CAPSTONE**
0771 250 350
No. 154,A/1, Navalar Road, Jaffna.

**கணினி மலிவு விற்பனை**
Intel 3.2 GHZ D/Core, 160GB Harddisk, 1 GB Ram, Keyboard, Mouse, Speaker, 19" LED Monitor, DVD Writter,
Free: Web Cam/ 4 GB Pen/ Cover/ Head phone
மூன்று வருட உத்தரவாதம்
39500/= மட்டுமே
SKY Computer
162, Main Street, Jaffna
021 2221417, 077 7271645
(அ/3025)(6-87-8)

**வேலையாட்கள் தேவை**
கணனி ரைப்பிங் (தமிழ். ஆங்கிலம்) தெரிந்தவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு : 0772099104
(யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
101, கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## கொழும்பு சைவமங்கையர் கழக பாடசாலை மாணவரின் முத்தோர் மகிழ்வித்தல் நிகழ்ச்சி

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் வசிக்கும் முத்தோரை மகிழ்விக்கும் பொருட்டு இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலம் - 15.09.2012 - மாலை 5.30 மணி
இடம் - சிவபூமி முதியோர் இல்லம் பாலச்சந்திரன் அரங்கம்
தலைவர் - செஞ்சொற் செல்வர் கலாநிதி . ஆறு. திருமுருகன் தலைவர் (சிவபூமி அறக்கட்டளை)
தொடக்கவுரை - திருமதி பத்மா கஜேந்திரதாஸ் அதிபர் (கொழும்பு சைவமங்கையர் கழகப் பாடசாலை)
பிரதம விருந்தினர் உரை - உயர்திரு S.R.கனகஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணி)

சிறப்பு விருந்தினர் உரை - உயர்திரு கந்தையா நீலகண்டன் (சட்டத்தரணி - கௌரவ செயலாளர் அகில இலங்கை இந்து மாமன்றம்)

### கலைநிகழ்ச்சிகள்

இசை, நடனம்
சிறப்பு நாடகம்
ஈரம் தேடும் இதயங்கள்
சிவபூமி மூத்தோரின் இசை நிகழ்ச்சி

அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகசபை
சிவபூமி முதியோர் இல்லம்,
தொல்புரம், சுழிபுரம்.

021 321 4230
021 225 0085
(22846)(6.7.8)

**வெளிவந்துவிட்டது**
அரச திணைக்கள தாபன அலுவலக முறைமை, நிதி முறைமை
பதவி உயர்வு - வினைத்திறன் காண் பரீட்சை
திருத்திய ஆறாம் பதிப்பு
2012 ஒகஸ்ட்
ஆக்கம் : T. ஜெயராஜ்
N. கமலநாதன்
நாடுமுழுவதுக்குமான ஏக விநியோகஸ்தர்
(அ/3366)(6.7.8)
**அன்னை புத்தகசாலை**
யாழ்ப்பாணம் 021 222 9881

**After A/L??** FREE Training } Multimedia,Networking Web Designing
Type Free <Course><Name> & Sms to 772395895
தொழில் வாய்ப்பு நிறைந்த கற்கை நெறிகள்
Computer Engineering USA
CCNA
BIT University of Colombo
A/L (3 Pass)
O/L FIT
A/L 2012 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
CIMA-UK
சாதனைச்சித்திகள் MCS இல்!
F.M(67%), F.O(80%)
P.O(70%), E.O(66%)
Foundation level 100%
Schl UK Reg Fee 15500/= free
TOEFL,IELTS A1,A2,B1,B2
HDCS Higher Diploma in Computer Studies
Introduction to ICT, Business Application, Java,Python/C, Photoshop , Corel draw X5 ,Flash, Pagemaker,Hardware,Html, Javascript,Dream weaver, Joomla,Premiere
MCS IT CAMPUS
Supported by UNDP/JRRP
324, Palay Road, Jaffna.
For details 772 395 895

**வீடும் கடைக்கட்டடமும் விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதிச்சந்திக்கு மிக அருகில் இரண்டு பரப்புக் காணியில் மூன்று மாடி வர்த்தகக்கட்டடமும் நான்கு அறைகள் கொண்ட வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ள Tele Phone : 077 7262653
(22877)(6.7.8)

**"பளிச்சென்று ஒரு முகம்"**
கரும்புள்ளிகள்,கருவளையம்,முககருமைநீக்கம்,கழுத்துக்கருமை, பருக்கள், பாலுண்ணிகள், போன்றவை நீக்கும் சிகிச்சைகள்,ஆயுர்வேத ஒயில்மசாஜ் உடன் கூடிய நிரந்தர தீர்வுகள்.
0777351954, 0773988276
'நீங்களா?!? என அதிசயிக்கும் மாற்றம்'
(ஆண், பெண் இருபாலாருக்கும்)
"சானியா கேயர்கெயர்"
இல.262, நாயன்மார்கட்டு ஆயுர்வேதவைத்தியசாலை செம்மணி வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.

**பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் 7-12 வயதிற்கு இடைப்பட்டவர்களா? இவர்களின் வளமான எதிர்காலத்திற்காக**
BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
17th Sept. 2012 பெருமையுடன் அறிமுகப்படுத்தும்
**Young Learners for English (YLE)**
* இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்
* Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
மாணவர்களின் ஆங்கில அறிவிற்கான சர்வதேச அடித்தளமாக இது கருதப்படுவதால் இன்றே உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்
Batch I 17.09.2012
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

**After A/L......?**
இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து Pendrive ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்
New batches
14th Sept 2012
15th Sept 2012
17th Sept 2012
@ 9.00 am
DiTEC Diploma in Information Technology 4 Months
DiCA Diploma in Computerized Accounting 4 Months
DiBM Diploma in Business management 4 Months
DiSE Diploma in Software Engineering 6 Months
DiWE Diploma in Web Engineering
DiE Diploma in English 4 Months
HOTLINE 077 309 9 308



ESOFT Computer Studies (Pvt)Ltd.
17/1, Brown Road, Jaffna.
Tel :021 2224142 , Web :www.esoft.lk
Nelliady 151, Jaffna Rd 021 226 4940
Kilinochchi 01, Kanagapuram Rd, 077 990 5611
Uduppidy Jaffna Rd, Uduppidy. 021 320 1303

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நல்ல எண்ணங்களைத் தூவினால்தான் நல்ல பயனைப் பெறலாம். -அண்ணா

# வார வசந்தம் 01

உதயன் 15 செப்ரெம்பர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# மரத்தோடு மரம் பேசுமா

■ முத்து

கண்ணும் கண்ணும் பேசுவது பெண்ணால் என்று பாடுவார்கள். தமிழ் வசப்பட்டால் காதுகளில் தேன் பாயும். அறிவியலில் நாக்கினால் பார்க்கலாம். நாக்கு இல்லாமலே உண்ணலாம். பேசலாம். மனிதர்களும் சரி, விலங்குகளும் சரி, தங்களுக்குள் பல்வேறு சமிக்ஞைகளால் கருத்துப் பரிமாறிக் கொள்கின்றன. ஆனால் இன்று மரங்களும் தங்களுக்குள் பேசிக் கொள்வது தான் புதிய கண்டுபிடிப்பு.


புலன் அறிவாக உணரப்பட்டு அந்த உணர்வால் ஏதேனும் ஒரு தகவல் புரிந்து கொள்ளப்பட்டால் அதுதானே தகவல் சமிக்ஞை. அதன் பின்பு மரங்களும் தங்களுக்குள் சமிக்ஞைகள் பரிமாறிக் கொள்வதில் என்ன சந்தேகம்? ஆனால் இந்த சமிக்ஞைகள் எழுத்துகள் அல்ல; சொற்களும் அல்ல; கணினிக் குறியீடுகளும் அல்லவே அல்ல. சின்னச் சின்ன வேதிம மூலக்கூறுகள். ஆவியாகும் கரிம மூலக்கூறுகள் (Volatile Organic Compounds). ஆங்கிலத்தில் வி.ஓ.சி (VOC) என்கிறார்கள். ஆவியாகும் கரிமக் கூட்டுப் பொருள்கள்.


அரசமாதேவியின் கூந்தலுக்கு மணம் உண்டா இல்லையா என்று தேசிய அளவில் மணப்பொருள் ஆராய்ச்சி மேற்கொண்டார் பண்டைய வேந்தர் ஒருவர்.

உண்மையில் இன்று தாவரம் சார்ந்து மணம் பரப்பக்கூடிய கிட்டத்தட்ட 7000 கூட்டுப் பொருள்கள் உண்டு. தக்காளியில் மட்டும் 400 மணப் பொருள்கள் உள்ளன. அவற்றில் அடர்த்தியான வாசனைக்குக் காரணம் மீத்தைல் ஹெப்டினோன் என்னும் ஒருவகை காரோடீனாய்டு. இது ஏ - விற்றமினின் தாய். ஆயிரம் லீற்றர் தொட்டியில் ஒரு கடுகளவு போட்டாலே வாசம் மூக்கைத் துளைக்கும்.

தேநீர் அல்லது புகையிலை வாசத்துக்கு காரணம் விளம்பரக் கம்பெனி அல்ல. அதில் இயற்கையாகக் கலந்து உள்ள டைக்ளோரோ அக்டினிடையோலைட் என்கிற வாயில் நுழையாத வேதிப்பொருள். மஞ்சள் வாசம் அதில் அடங்கிய குக்குமின் உபயம். வெள்ளைப் பூண்டில் அல்லிசின் (aallicin) - இப்படி ஒவ்வொரு வாசனைக்கும் அர்த்தம் உண்டு.

பொதுவாக, தாவரப் பொருள்கள் மக்கிப் போகும். பழம், இலை போன்ற எதுவானாலும் அழுகி நாறும். காரணம் அதில் இருந்து வெளிப்படும் துர்கந்த வேதிமங்கள். அவற்றை உண்ட தாவரப் பட்சினிகள் பொதுவாக நோயூக்கி (Pathogens) கிருமிகளைப் பரப்புகின்றன. தம்மை உண்ண வரும் விலங்குகளைக் காட்டிலும் அவை பரப்பும் நோயூக்கிகளைத் தாவரங்கள் முழுவதும் உணர முற்படுகின்றனவாம். தழை தின்ன வருவதை முன்கூட்டியே அறிந்து சில செடிகள் அண்டைப் புதருக்குச் சிக்னல் கொடுத்துவிடுமாமே!





மரங்கள் மனிதர்களுடன் மட்டுமன்றி மரங்களுடனேயும் உரையாடும். பக்கத்துச் செடிகள் தம் நீல நிறப் போர்வை வழியாக வெளியிடும் கதிர்வீச்சினைப் புரிந்து கொள்ளக்கூடியது புகையிலைச் செடி.

இருந்தாலும், தாவரங்களைப் பாதுகாக்கும் ஃபீனாலிக்ஸ் காரமங்கள் (alkaloids), டெர்ப்பீன்கள் (ஒருவகை கொழுப்பு) போன்ற பொருள்கள் தாவரப் பட்சினிகளுக்குத் தெரியும்.

எப்படியோ, ஆண்டுதோறும் வளிமண்டலத்தின் கரியமில வாயுவில் அடங்கிய கரி அணுக்களில் 36 சதவீதம் பெரும்பாலும் ஆவியாகக் கூடிய சிறு மூலக்கூறுகளாக மீண்டும் காற்றில் வந்து கலந்து விடுகின்றன. இருந்தாலும் சூரிய வெளிச்சத்தையும் ஏனைய நுண்சத்துத் தனிமங்களையும் போட்டி போட்டுக் கொண்டு உறிஞ்சுவதில் தாவரங்கள் சுயநலவாதிகள் தாம்.

சூரியனைப் பார்த்து சில பூக்கள் முகம் திருப்புகின்றன. காரணம் ஒளிச்சேர்க்கைக்கு சூரிய ஒளி அவசியம். அதாவது தாவரங்கள் காற்றில் கலந்து [illegible] அசுத்தமான கரியமில வாயுவை உறிஞ்சி நிலத்தில் இருந்து தண்ணீரையும் உட்கொண்டு சூரிய வெளிச்சத்தில் உணவு தயாரிக்கின்றன. இதற்குப் பச்சையம் என்கிற குளோரோஃபில் ஒத்துழைக்கிறது. தாவரங்களின் பச்சையம் என்பது விலங்குகளில் ரத்தத்தில் சிவப்பு அணுக்கள் மாதிரி. ரத்தத்தில் இரும்பு அணு நடுநாயகம். பச்சையத்தில் மக்னீசியம். நிழலில் வளரும் செடிகள் இருண்ட பச்சை நிறமாய்த் தோன்றும். காரணம் அதில் கூடுதல் பச்சையம் சூரிய ஒளியை ஏற்பதற்கு வசதியாகச் செறிவாக உள்ளது. ஆக, சூரிய ஒளி நிறமற்ற தண்ணீர், அசுத்தமான கரியமில வாயு, பச்சை நிற குளோரோஃபில் ஆகிய நான்கு பொருள்களின் கூட்டணியில் கார்போஹைட்ரேட்டு எனும் [illegible] வெந்து கொண்டிருக்கும் அரிசி.

உணவு மட்டுமா? மனிதனுக்கு மூச்சுக் காற்று இலவசமாக வழங்குவதும் மரங்கள்தாம். கார்போஹைட்ரேட்டு தயாரிப்பின்போது ஒட்சிசன் வெளியிடப்படுகிறது. ஆனாலும் காற்றின் 10 சதவீத ஒட்சிசனை மட்டுமே நிலத் தாவரங்கள் விநியோகிக்கின்றன. எஞ்சிய ஆக்சிஜன் கடற்பாசிகளின் பங்களிப்பு. அதனால் வனம் வளர்க்கிறோமோ இல்லையோ கடல் காக்க வேண்டும்.

விலங்குகளும் மனிதர்களும் தான் இந்தப் பச்சையத் தாவரங்களை உண்கின்றன என்றால் சில தாவரங்களோ விலங்குகளைத் தின்னும் மாமிசப் பட்சினிகள் ஆகவும் விளங்குகின்றன. தாவர இயலில் தமிழ்ப் பெயர்கள் என்னவோ, ஆனால் பனித்துளிகள் (Sundews), கூஜாச் செடிகள் (Pitcher Plants), குடுக்கை (bladerworts), ஈசல் பொறி (Venus flytrap) போன்ற தாவரங்களுக்கு உணவுத் தயாரிப்பில் சூரிய ஒளி, கரியமில வாயு, தண்ணீர் மட்டும் போதாது. கொஞ்சம் மாமிசமும் வேண்டும். செடிகளில் அசைவச் செடிகளும் உண்டு. அதனால் ஜாடி போன்ற பூக்களுக்குள் தும்பிகளையும், வண்டுகளையும் சிறைப்பிடித்து உண்ணும்.

தொட்டால்சிணுங்கி இலைகளோ இதற்கு நேர் எதிர். யாரையும் தன்மீது படுகின்றதோ பட்டதுமே முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்கின்றன. அந்தச் செடியின் இலை நரம்பு நடுமுண்டுகளில் கட்டி நிற்கும் தண்ணீர் வடிந்துவிடுவதால் இலை விறைப்பு இழந்து தலை தாழ்த்துகிறது. ஆனால் கொஞ்ச நேரத்தில் சவ்வூடு பரவல் (Osmosis) என்கிற உத்தியில் தண்ணீர் தலைக்கு ஏறி மீண்டும் கழுத்து நிமிர்கிறது.

மரங்கள் மனிதர்களுடன் மட்டுமன்றி மரங்களுடனேயும் உரையாடும். பக்கத்துச் செடிகள் தம் நீல நிறப் போர்வை வழியாக வெளியிடும் கதிர்வீச்சினைப் புரிந்து கொள்ளக்கூடியது புகையிலைச் செடி. தொலைவு அகச்சிவப்பு (Far Infrared) அலைகளாக அது உணரப்படும். அதிலும் எத்திலின் ஆவியினை உணர்ந்து கொள்ள இயலாத புகையிலையால் அந்தக் கதிர் வீச்சைப் புரிந்து கொள்வது கடினம்.

பார்லி உற்பத்தியிலும் இனம் புரியாத கூட்டுப்பொருள் (VOC) ஒன்று வேர்களிலும் மொட்டுகளிலும் உணவு அளவு மாறுபடச் செய்கிறதாம். சுற்றுச்சூழல் சார்ந்து ஒவ்வொரு தாவரமும் பக்கத்துச் செடிகொடிகளின் சமிக்ஞைகளை எதிர்பார்த்தே வாழ்கின்றன என்பது மாக்ஸ் பிளாங்க் வேதிமச் சூழலியல் நிறுவனத்தின் மூலக்கூறு சூழலியல் துறை ஆய்வு முடிவு.


எத்திலின், மெத்தனோல், ஐசோப்ரீன், அக்ரோலீன், மெத்தாக்ரோலீன் போன்றவை ஆவியாகக் கூடிய எளிய மூலக்கூறுகள். மீத்தைல் ஜாஸ்மோனேட், மீத்தைல் சாலிசிலேட் மற்றும் பச்சை இலை ஆவிப் பொருள்கள் (Green Leaf Volatiles) போன்ற டெர்ப்பீன் ஆல்கஹால் ரகங்கள் கனத்த மூலக்கூறுகள். தாவரங்கள் தங்களுக்குள் கிசுகிசுக்க உதவும் இரசாயனச் சொற்கள் இவை.

உள்ளபடியே குட்டைக் காட்டுப் புகையிலைக்கும் (Narcotiana attenuata) முனிப் புதர் (Sagebrush) செடிக்கும் இடையே தகவல் பரிமாற்றம் நடந்தது பரிசோதனை ரீதியில் நிரூபணம் ஆகி இருக்கிறது. இந்தப் புதர்ச்செடி அருகில் இருந்தால் புகையிலையை ஆடு மாடுகள் சீண்டாதாம். காரணம் அந்தப் புதரில் இருந்து கிளம்பும் மெத்தாக்ரோலீன் கூட்டுப்பொருள் புகையிலைக்குப் பாதுகாப்பு சமிக்ஞை ஆகி விடுகிறது என்கின்றனர் விஞ்ஞானிகள். ஏனைய சிறு மூலக்கூறுகளும் அதற்கு உதவிற்றாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்




### சனி வளையம்

சனி வளையம் குருமேட்டுக்கு மத்தியில் உற்பத்தியாகி சனி விரலை வளைந்து கொண்டு சனிமேட்டுக்கும் சூரிய மேட்டுக்கும் மத்தியில் சென்றிருக்கும். அதாவது சனிமேட்டை நன்கு சூழ்ந்து கொண்டிருக்கும். சில கைகளில் சனி வளையம் இரட்டை ரேகையாகவும் அமைந்திருக்கும். இது அரை குறையாயுமிருக்கவும் கூடும்.

இந்த ரேகை, ஒரு தொழிலில் இருந்து இன்னொன்றுக்கு அடிக்கடி தாவும்படி செய்யும். ஒரு தொழிலிலாவது ஸ்திரமாக இருக்க மாட்டார். ஸ்திர புத்தியில்லாததால் வாழ்க்கையில் சித்தி பெறுவது இயலாது போய்விடுகிறது. ஆனால் தொழில் தடையேதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சனி வளையம் பின்னப்பட்டுத் துண்டுபட்டிருக்குமாயின், அல்லது சனி வளையத்தில் குறுக்கிட்ட பல ரேகைகள் காணப்படுமாயின் ஞான சூனியத்தைக் கொடுத்துவிடுவதால் ஸ்திர புத்தியும், வாழ்க்கையில் அழுத்தமும் இல்லாது போய் விடுகிறது.

பொதுவாக சனிக்குள்ள துர்க் குணங்களெல்லாம் படிந்து விடும். கொலை, களவு செய்யப்படாவிடினும் நிதானமின்றிப் பல தொழிலிலும் ஈடுபட்டு பயனற்றவராய் விடுவர். முடிவில் எல்லாம் தோல்வியாகவே முடியும். அவ்வித பலன் உண்டாகும் போது கையில் இதர குறிகளும் கவனிக்கத் தக்கது. செவ்வாய் ரேகை தணிந்தும், கட்டை விரல் சிறுத்தும், புதன் ரேகை பின்னப்பட்டுமிருக்கும். தீவு அல்லது நட்சத்திரக் குறி காணப்படில், அதைரியம் அதிகப்பட்டு, புத்தி சுவாதீனமற்று தற்கொலை புரியவும் எத்தனிப்பர். சதை பற்றிய கை, கலைந்த புத்தி ரேகை, ஒடுங்கிய கட்டை விரல்கள், தாழ்ந்த செவ்வாய் மேடு அல்லது மிக்க உப்பலான சந்திரமேடு முதலியவைகளெல்லாம் சனி வளையத்துக்கும் பல வீனத்தைக் கொடுப்பவைகளாகும்.

1. சனிவளையத்தோடு, சந்திர மேட்டில் தொடங்கிப் புத்தி ரேகையும் அம்மேட்டில் வலைக்குறியும் அமையப்பெறின், அளவுக்கு மிஞ்சி மாறி மாறி, தளர்வின்றி யோசனையில் ஆழ்ந்திருப்பர். தன்னைப் பற்றி முற்றிலும் மறந்திருப்பர்.

சனி ரேகையான விதி ரேகை கெட்டுப் போனதுமன்றி, வளையமும் இருந்துவிடில் வெற்றி ஏற்படினும் அழிந்துபோகும். ஒரு வழிப்பட்டு நிற்க முடியாததால், அவ்வித முடிவைக் கொடுக்கின்றது. மேலும் இதற்கு ஆதாரமாய் சூரிய ரேகையும் பின்னப்பட்டிருக்கக் காணலாம். சந்திர ஆதாரமுள்ளவருக்குச் சனி வளையம் காணப்படில் அடிக்கடி மாறுங் குண முடையவராயிருப்பர். இத்தகையோருக்கு நீடித்த அல்லது நிலையான வெற்றி உண்டாவது அபூர்வம்.

2. சனிவளையம் துண்டுபட்டு இரண்டாகக் காணப்படில், அல்லது சனி வளையம் சரிவர அமையப் பெற்றிருப்பினும் அதற்குரிய பலன் இல்லாமற் போகாது. ஸ்திர புத்தி ஒருவருக்கில்லையென அறியும் போது குறைவு அதிகமென எப்படி அளவிடக் கூடும்? பின்னப்பட்ட வளையம் பட்டும் படாமலுமிருந்தாலும் மங்கலாய்க் காணப்பட்டாலும் மாறுதலுக்கான எண்ணம் உதிக்காமல் இருக்காது.

3. சனிவளையம் இரண்டு சிறு ரேகைகள் குறுக்கிட்டு காணப்படில், சரியாக அமைந்துள்ள சனிவளையத்துக் குள்ள குணமேயாகும். பெரும்பாலும் வாழ்வை முடித்துக் கொள்ளும் எண்ணமே முன்னிற்கும்.

ஒருவர் கையில் சனிவளையம் காணப்படில், அதனாலுள்ள கெடுதியையெடுத்துரைத்து எச்சரிக்கை செய்து திடபுத்தியினுடனிருக்கச் செய்வதே காலச் சிறப்புடையதாகும். சனிவளையம் கையில் காணப்படில், அதனால் ஏற்படும் துர்க்குணங்களை அகற்றுவதற்குக் கெட்டியான கட்டை விரலின் முதல் ஆரம்பமும், நன்கு அமையப் பெற்ற புத்தி ரேகையும் பாதுகாப்பாகுமென்பது நினைவிலிருக்க வேண்டும்.

(தொடரும்)

# உலக சினிமா வரலாறு

■வலையவன்

சிறுவயதில் தன் தந்தையிடம் பெர்க்மென் வாங்கிய பிரம்படிகள் மிரட்சிகள், இவை உண்டாக்கிய மனவலிகளை தேர்ந்தெடுத்து பார்வையாளனுக்குள் மறக்கமுடியாத வடுக்களை நிகழ்த்தினார். நமக்குள் சிறுவயதிலிருந்து அழுத்தப்பட்ட பல்வேறு உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்வதுதான் பெர்கமனின் வெற்றி. ஆனால் அதற்காக அவர் எப்போதும் தன் நேரத்தை செலவிடுவதில்லை. படத்தில் எங்கிருந்து அந்த உணர்வு நமக்குள் தோன்றுகிறது என்பதை நாமறியா வண்ணம் நம்மை நம் மேல் விழுந்த அடிகளை உணரச்செய்வதுதான் பெர்க்மென் எனும் மகத்தான கலைஞனின் வெற்றியாக உலக சினிமா விமர்சகர்கள் கருதுகின்றனர்.

பிற்பாடு மீண்டும் ஸ்வீடனுக்குள் பெர்க்மென் திரும்பிய போது அரசாங்கம் பெரும் குற்றவுணர்ச்சியுடன் அவரை வரவேற்று அவர் பெயரில் ஒரு திரைப்படப் பயிற்சி நிறுவனத்தையும் உருவாக்கியது.

1988இல் தனது வாழ்க்கை வரலாற்றை மேஜிக் லாண்டர்ன் எனும்பெயரில் எழுதிய பெர்க்மென் 1993இல் பெஸ்ட் இண்டென்ஷன்ஸ் எனும் பெயரில் நாவல் ஒன்றையும் எழுதினார். பிற்பாடு சினிமாவுக்கான திரைக்கதையாகவும் இதை வடித்தார். அவரது தாய்க்கும் தோமஸ் எனும் பாதிரியாருக்குமிடையில் நடந்த ஒரு உறவை அடிப்படையாக வைத்து அவர் இந்தக் கதையை எழுதியிருந்தார்.


பெர்க்மெனின் திரைப்படங்கள் ஆஸ்கார், கேன்ஸ், கோல்டன் குளோப், பாப்டா, பெர்லின் தங்க கரடி உள்ளிட்ட உலகின் பலமூலைகளில் பல விருதுகளை அள்ளிக் குவித்துள்ளன.

1995இல் தன் 77ஆம் வயதில் Ingrid von Rosen என்ற விதவைப் பெண்ணை அவர் திருமணம் செய்தபோது அவருக்கு அது முறைப்படி ஐந்தாவது திருமணம். இதற்கு முன்பான நான்கு மனைவிகளையும் சேர்த்து அவரது குழந்தைகளின் எண்ணிக்கை பலவாக இருந்தாலும் மொத்தம் 12 குழந்தைகளை மட்டுமே அவர் தன் வாரிசுகளாக அங்கீகரித்துள்ளார்.

அவரது அநேக படங்களில் நடித்த உலகப் புகழ் நடிகையான லிவ் உல்மன் தானாக விரும்பி தாய்மை அடைந்து அவரது ஒரு குழந்தைக்குத் தாயானார்.

உலகசினிமாவின் ஆச்சரிய மூட்டும் ஒற்றுமையாக விமர்சகர்கள் இவரையும் மைக்கேல் ஏஞ்சலோ ஆண்டனியோனியையும் கருதுகின்றனர். காரணம் இருவரது வாழ்க்கையும் ஒரே தன்மையுடையன. பலவிடயங்களில் இருவருக்குமிடையே காணப்பட்ட ஆச்சர்யமான ஒற்றுமை இவர்களது இறப்பிலும் தொடர்ந்தது.

ஜூலை 30, 2007, ஒரே நாளில் இருவரது சாவுச்செய்தியும் அடுத்தடுத்து வந்து உலகசினிமா ரசிகர்களையும் பார்வையாளர்களையும் ஒருசேர அதிர்ச்சிக்குள்ளாகியது.




அமரத்துவம் வாய்ந்த பெர்க்மனின் படங்களை நாம் இன்றும் பார்க்கும் போது அவர் நம் முதுகின் பின்னால் இருப்பதை அவரது படங்களின் மூலமாக உணரமுடியும்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனஉறுதியே பலம்

ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவரது நண்பர் ஒருவரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அந்தப் பண்ணை வீடு மிகப் பெரிய நிலப்பரப்பில், இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் இருந்தது. அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன.

ஒரு நாள் மாலை, பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடன் நண்பரும், நண்பரின் மனைவியும் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அதன் மூர்க்கத்தனமான ஓட்டத்தைப் பார்த்து பயந்து போன நண்பரின் மனைவி, அப்படியே மயங்கி விழுந்துவிட்டார்.

நண்பர், மனைவியைத் தூக்க முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கிவிட்டது. நண்பருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

இன்னும் சில நொடிகள் அங்கே இருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்பதை உணர்ந்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எழுந்து வேறு திசையில் ஓடினார். ஆனால், விவேகானந்தர் அப்படி இப்படி அசையாமல் ஆணி அடித்தது போல் அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

பாய்ந்து வந்த மாடு கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விவேகானந்தரையும் விட்டு விட்டு, ஓடிக்கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது. அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டடத்திற்குள் புகுந்து தப்பினார் நண்பர். அதன் பிறகே பண்ணை ஊழியர்கள் ஓடி வந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப்போட்டனர்.

விவேகானந்தர் அதன் பிறகே அந்த இடத்தை விட்டு அசைந்தார். அங்கு வந்த நண்பருக்கோ ஒரே வியப்பு. அப்போது நண்பரின் மனைவியும் மயக்கம் தெளிந்து எழுந்தார்.

சிறிது கூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்தில் உறுதியாக உங்களால் எப்படி நிற்க முடிந்தது? என்று கேட்டார் நண்பர்.

அதைக் கேட்டு மெல்லப் புன்னகைத்த விவேகானந்தர், நான் வித்தியாசமாக எதையும் செய்து விடவில்லை. வருவது வரட்டும்; சமாளிப்போம் என்ற ஒரு வித மன உறுதியுடன் நின்றுவிட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால்தான் மாடு என்னை விட்டுவிட்டு, ஓடிக்கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது, என்று முடித்தார்.

உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, அதைக் கண்டு பயந்து ஓடாமல், வருவது வரட்டும் என்ற மன உறுதி பெற்றிருந்த சுவாமி விவேகானந்தரைப் பார்த்துப் பெரிதும் வியந்தார் நண்பர்.



## உங்களுக்குத் தெரியுமா?

| | |
|---|---|
| ஏகம் | - ஒன்று |
| துவி | - இரண்டு |
| திரி | - மூன்று |
| சதுர் | - நான்கு |
| பஞ்ச | - ஐந்து |
| ரிஷி | - ஆறு |
| சப்த | - ஏழு |
| அட்ட | - எட்டு |
| நவம் | - ஒன்பது |
| தசம் | - பத்து |
| சதம் | - நூறு |
| சங்கம் | - ஆயிரம் |

க.கஜீபன், மன்/சித்தி விநாயகர்
இ.க (தேசிய பாடசாலை)

## சொர்க்க பூங்கா






ஐக்கிய அரபு இராச்சியத்தில் சொர்க்க பூங்கா (Ain paradise) என்று அழைக்கப்படும் பூந்தோட்டத்தில் ஏராளமான சாடிகளில் பூங்கன்றுகள் தொங்கவிடப்பட்டுள்ளன. இருதடவைகள் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த சாதனையும் இந்தப் பூங்காவுக்கே உரியது. கண்ணைக் கவரும் அழகான பூக்களை இந்தச் சொர்க்க பூங்காவில் தான் காண முடியும்.

சா.சிந்துஜா
கோண்டாவில்.

## கண்ணிவெடி

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
கண்ணிவெடிகள் பாராய்
மனதைத் தொடும் வடிவங்களில் மண்ணில்
புதைந்ததைப் பாராய்
மாணவ மணிகளே சின்னஞ்சிறார்களே
கண்டதும் ஓடிக் களிப்புடன் அதைக் கையில்
எடுக்காதீர்
கண்ணிவெடி அகற்றும் பிரிவை உடன்நாடி
தகவலைக் கொடுத்திடுவீர்
பட்டாம் பூச்சியாய் பறந்திடும் நீங்கள்
பாரினிலே சிறந்து விளங்கிட வேண்டும்
படைத்தவன் எமக்கு அழகாய் அழித்திட்ட
கைகளை, கால்களை இழக்காது
காலம் முழுவதும் வாழ்ந்திடவேண்டும்.

அஜந்தா,
தரம் 6,



## ஒலிம்பிக் விளையாட்டு பற்றிய விடயம்

1.ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம்-கிரேக்கம்

2.கிரேக்கர்களின் வீரக் கடவுள்-சீயஸ்

3.நவீன ஒலிம்பிக் போட்டி நடத்தப்பட்ட ஆண்டு-1896

4.நவீன ஒலிம்பிக் போட்டி நடத்தப்பட்ட நகரம்-ஏதென்ஸ்

5.நவீன ஒலிம்பிக் போட்டியைத் தோற்றுவித்தவர்-பிரான்ஸ் நாட்டின் பிரபு பியஸ் டி.குபேற்றின்

6.ஒலிம்பிக் கொடியில் உள்ள வளையங்களின் நிறங்கள்-கறுப்பு, நீலம், மஞ்சள், பச்சை, சிவப்பு

7.ஒலிம்பிக் விளையாட்டின் நோக்கம்-உலக நாடுகளிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவது

நேச-வித்தியாசாகர் கிளிநொச்சி ம.வி.






## வேப்பமரம்

நண்பர்களே! என்னைத்
தெரிகிறதா?
நான்தான் வேப்பமரம் பேசுகிறேன்.
நீங்கள் நலமாக இருக்கிறீர்களா?
நான் நலமாக இல்லை
நீங்கள் மரங்களை
வெட்டுகிறீர்களே!
பிறகு என்னால் எப்படி நலமாக
இருக்க முடியும்.
எங்கள் சேவையைப் புரிந்து
கொள்கிறீர்கள் இல்லையே.
நாங்கள் மழையைத் தர
உதவுகிறோம்.
மண் சரிவைத் தடுக்க உதவுகிறோம்.
மண் வளத்தைக் காக்க
உதவுகிறோம்.
எங்கள் சேவை இவ்வுலகத்திற்குத்
தேவை.
ஏன் இதனைப் புரிந்து கொள்ள
மறுக்கிறீர்கள்?
வேதனையாக இருக்கின்றது

ம. தேனுஜன் தரம்-4பி
யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அப்பாவிகளைத் தண்டிக்காதே

■ புத்தகவாசி

தியானத்தின் மூலம் ஞானம் கிடைக்கிறது. தியானத்தின் குறைவால் ஞானம் குன்றி விடுகிறது. திருப்திதான் பெருஞ்செல்வம்.

தீமை புரிபவன் இந்த உலகில் துன்புறுகிறான். மறுமையிலும் துன்புறுகிறான். இரண்டிலும் அவனுக்குத் துன்பமே. தான் செய்த தீமையைப் பற்றி நினைக்கும்போது அவன் துன்புறுகிறான். தீய பாதையில் செல்லும்போது இன்னும் அதிகமாய்த் துன்புறுகிறான்.

காஷாய ஆடைகளால் தோள்களை மூடிக் கொண்டிருப்பவர்களிலும் கூட பலர் தன்னடக்கமின்றி சீர்கெட்டுப் போயிருக்கிறார்கள்.

அத்தகைய தீமை புரிபவர்கள் தங்கள் தீய செயல்களாலேயே நரகத்தை அடைகிறார்கள்.

குற்றமற்றவர்களைத் தண்டித்துத் தீங்கு செய்கிறவன், கூர்மையான வேதனை, வியாதி, உடற்குலைவு, பெரும் விபத்து, சித்தப்பிரமை, அரசு தண்டனை, பயங்கரமான குற்றச்சாட்டு,

உறவினர்களை இழத்தல், அனைத்து செல்வம் இழப்பு, நெருப்பாலோ, இடியாலோ அவன் வீடு எரிந்துபோதல் ஆகிய துன்பங்களில் ஒன்றை உறுதியாகக் காண்பான். மரணத்தின்போதும் அந்த வறட்டு மூடன் துக்கத்தில்தான் மறுஜனனம் காண்கிறான்.

கருத்துடைமையில் களிப்புறு; உன் எண்ணங்களைக் கட்டிக்காத்துக்கொள்; சோர்வுறாதே. சேற்றில் விழுந்த யானையைத் தூக்கி விடுவதுபோல் உன்னைத் தீயவழியிலிருந்து மீட்டுக்கொள்.

வெளிப்புறத்தைக் கழுவியது போதும்! உட்புறத்தைக் கழுவுவதே எனக்குத் தேவை.

நம்பிக்கை, ஒழுக்கம், வீரியம், சித்தம், நடுவுடைமை, தர்மத்தை ஆராய்ந்து தெளிதல், அறிவு, நற்பயிற்சிகள், சிந்தனை ஒருமிப்பு இவற்றில் பரிபூரண நிறைவு பெற்றால், துன்பங்களை விரட்டி விடலாம்.



# தற்பெருமை அழி

■ சிந்தாமணி

மருத்துவர்கள் நோயாளிகளிடம் 'எனக்கு வியாதியே இல்லை' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும் படி அறிவுரை கூறுகின்றனர். நோயாளிகள் அப்படிச் சொல்வதனால் வியாதிகள் அகலுவதற்கான சாதகமான நிலை உண்டாகிறது. அது போல, இவ்வுலகில் நீ தாழ்ந்தவன் என்று எண்ணிக் கொண்டால், சீக்கிரத்தில் தாழ்ந்தவனாகவே ஆகிவிடுவாய். அளவிட முடியாத அளவிற்குத் திறமை உன்னிடம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டால், அவ்வாறே திறமைகள் மிகுந்தவனாய் ஆகிவிடுவாய்.

கல்லானது தண்ணீருக்குள் வருடக் கணக்கில் கிடந்தாலும் அதனுள் தண்ணீர் நுழையாது. ஆனால், களிமண் தண்ணீருக்குள் கிடந்தால் கரைந்து விடும். அதுபோல திடமான நம்

# புத்தகங்கள் அழியுமா?



ஒவ்வொரு புதிய தொழில் நுட்பம் வரும்போதும் பழைய தொழில்நுட்பத்துக்கு அச்சுறுத்தல் எழும் என்பதை மறுக்கமுடியாது. ஊருக்கு போனதும் மறக்காம கடுதாசி போடுப்பா என்று இப்போது யாராவது சொல்கிறார்களா? அவர்களுக்கு செல்போனும், எஸ்.எம்.எஸ்ஸும் பக்க துணையாய் இருக்கின்றன.

பிறந்தநாள், தீபாவளி, பொங்கல் என வரிசையாய் வரும் பண்டிகைகளுக்காக கடைகளில் போய் வாழ்த்து அட்டைகள் வாங்குவது பழைய பல்லவி. இப்போது எல்லாம் மின்மயம். ஏதோ ஒரு இணையப்பக்கத்தில் போய் ஒரு வாழ்த்தை கிளிக் பண்ணி மெயில் பண்ணிவிட்டால் விடயம் முடிந்தது !

தந்தி, தந்தி என்றொரு சமாச்சாரம் இருந்தது ஞாபகம் இருக்கிறதா ? அதை இனிமேல் அரசியல் தலைவர்களின் பேட்டிகளில் தான் கேட்க முடியும். எந்த பிரச்சினையானாலும் பிரதமருக்கு தந்தி கொடுப்பது அவர்கள் மட்டும் தான். ஏனைய எல்லோருமே மின்னஞ்சல், போன், எஸ்.எம்.எஸ், 3ஜி என எங்கேயோ போய்விட்டார்கள்.

இப்படியே வழக்கொழிந்து போன விடயங்கள், அல்லது புதுமையான வகையில் உருமாறிய விடயங்கள் நிறையவே உண்டு. இப்போது அந்தப் பட்டியலில் எமது புத்தகங்களும் இணைந்து விடுமோ எனும் நிலை உருவாகி வருகிறது.

மென்புத்தகங்களின் வருகையும், அதை வாசிக்க வசதியாக வந்திருக்கின்ற ரீடர்கள், டேப்லெட்கள் போன்றவையும் அச்சுப் புத்தகங்களின் வளர்ச்சியை அசைக்கத் தொடங்கியிருக்கின்றன. உலக அளவில் அச்சுப் புத்தகங்களின் விலை பெருமளவு குறைக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்கிறது இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று.

ஒரு புத்தகத்தைச் சுமக்கும் எடையில் ஒரு புக் ரீடரை நீங்கள் தூக்கிச் சுமக்கலாம். சொல்லப்போனால் ஒரு நாவல் சுமார் 300 கிராம் எடை உண்டு. ஆனால் பொதுவான ரீடர்கள் 200 கிராம் எடையை விடக் குறைவு தான். அதில் சுமார் 1400 நாவல்களைச் சேமிக்கலாம். இப்படி மிக எளிமையான வாய்ப்பு வந்திருப்பதால் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக புத்தகங்களை விட்டு விட்டு மென் புத்தகங்கள் பக்கமாய் தலை சாய்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

பயணத்தின் போதெல்லாம் ரீடர்கள் மிகவும் உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லவும் தேவையில்லை. இந்த ஆண்டைய முதல் காலாண்டு புள்ளி விவரம் என்ன சொல்கிறது தெரியுமா ? சுமார் 25% அச்சுப்புத்தகங்கள் விற்பனையில் சரிவு ஏற்பட்டிருக்கிறதாம். நீல்சனின் அறிக்கைபடி கடந்த ஆண்டில் சுமார் 11% அச்சுப் புத்தக விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது !

அச்சுப் புத்தகங்களின் விற்பனை வீழ்ச்சி கண்கூடு. 2020ல் அச்சுப் புத்தகங்கள் ரொம்பக் கொஞ்சமே இருக்கும். மென்புத்தகங்களே ஆட்சி புரியும் என்கிறார் புகழ் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான ஜி.பி.[illegible]லர்.

இசை உலகை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு சிடிக்களின் விற்பனை ரொம்பக்கம்மி. அதுவும் ஆப்பிள் தயாரிப்புகளான ஐபாட் போன்றவை அறிமுகமானபின் வெளிநாடுகளில் சகட்டு மேனிக்கு சரிவு ஏற்பட்டது. காரணம் மக்கள் பெரும்பாலும் இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்வதை விரும்பியது தான்! ஐ-டியூன் போன்ற பணம் கொடுத்து இறக்குமதியாகும் தளங்களில் விற்பனை ஜோராக நடக்கிறது. இதே நிலை இனிமேல் புத்தகங்களுக்கும் வரும்.

எப்போது வேண்டுமானாலும் பிடித்தமான நூலை தரவிறக்கம் செய்து வாசிக்கலாம் எனும் நிலை வரும். இதனால் நூலுக்காக கடை கடையாய் ஏறி இறங்க வேண்டிய அவசியம் இல்லை. ஆர்டர் கொடுத்து விட்டு வாரக் கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

புத்தம் புதிய நாவல்களும் மென்வடிவமாகவே தயாரானால் ஹாரி பாட்டர் கணக்கான ரசிகர்கள் கொட்டும் பனியில் புத்தகத்துக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. சுற்றுப்புறச் சூழலுக்கும் இது ரொம்ப நல்லது. மரங்கள் பிழைக்கும். பெரிய பெரிய அச்சு நிறுவனங்களெல்லாம் ஓய்வெடுக்கும் !

ஹாரிபாட்டர் என்று சொன்னதும் நினைவுக்கு வருகிறது. சமீபத்தில் ஹாரி பாட்டர் நாவல்கள் மென்வடிவம் பெற்றன. சில நாட்களிலேயே சுமார் 8 கோடி ரூபாய்களுக்கான நூல்கள் விற்றுத் தீர்ந்தன ! ஒவ்வொரு நிமிடமும் சுமார் 20,000 ரூபாய்க்கான விற்பனை ஹாரிபாட்டர் மூலம் நடந்து கொண்டிருக்கிறதாம் !

மென்புத்தகங்களின் விலை மிகவும் குறைவாக இருப்பதால் அதன் விற்பனை எண்ணிக்கையும் மிக அதிக அளவில் இருக்கிறது. புத்தக வாசனை வேண்டும், சேமிக்க வேண்டும் எனும் எண்ணம் உடையவர்கள் இன்னும் அச்சுப் புத்தகங்களையே நாடி வருகின்றனர்.

மென்புத்தகங்களின் வளர்ச்சி வரவேற்கப்பட வேண்டியதே ! படிக்கும் பழக்கம் அதன் மூலம் அதிகரித்தால் இரட்டை மகிழ்ச்சி ! **நன்றி : தினத் தந்தி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ழிவைத்தரும்

...தாமணி

...பிக்கையுள்ள மனமுள்ளவர்கள், சோதனையால் தடுமாற்றம் அடைவதில்லை. நம்பிக்கை இல்லாதவருடைய மனம் சிறு காரணத்திற்கு கூட சலனமடையும்.

குருவின் சக்தியின்மீது திடமான நம்பிக்கை கொண்ட ஒரு சிஷ்யன், குருவின் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மீது நடந்து போனான். இதைக் கண்ட குரு என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கிறதென்றால், எனக்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும்.

இது எனக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போய்விட்டதே என்று நினைத்தபடியே, அவரும் தண்ணீரின் மீது நடக்க ஆரம்பித்தார். ஆனால், கால் வைத்தவுடன் மூழ்கிவிட்டார். நம்பிக்கையால் அபூர்வமான காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால், தற்பெருமை அழிவைத் தரும்

# ஈஸ்டர் தீவின் மர்மங்கள்

செம்மொழி



ஈஸ்டர் தீவு, தென் அமெரிக்கா நாட்டுக்கு அருகே உள்ள குட்டித் தீவு. 17ஆம் நூற்றாண்டில் இந்தத் தீவு ஐரோப்பியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத்தீவு 37 அடி உயர மிகப் பிரம்மாண்டமான சிலைகளுக்கு பெயர் போனது. அத்தீவு ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டது. தற்பொழுது அத்தீவிலே ஒரு மரம் கூட கிடையாது, ஒரே வகையான புல் வகை மட்டுமே உள்ளது. மொத்தம் 60 இற்கும் மேற்பட்ட 200 தொன் எடை கொண்ட பிரம்மாண்ட சிலைகள் இருக்கின்றன. இந்தத்தீவு கண்டுபிடிக்கப்பட்ட புதிதில், இந்தச் சிலைகள் எல்லாம் எவ்வாறு வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன என்பது புரியாத புதிராக இருந்தது.

இந்தத்தீவில் கி.பி. 200 ஆம் ஆண்டில் 2000 மக்கள் வசித்ததாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆனால், இன்றோ வெறும் இருநூறுக்கும் குறைவான மக்களே வசிக்கின்றனர். 2000 மக்கள் கி.பி. 200 ஆம் ஆண்டிலே வசித்தால் இப்பொழுது அதற்கும் அதிகமான மக்கள் வசிக்கவேண்டும் அல்லவா? மக்கள் தொகை குறைவதற்கான காரணம் என்ன? மற்றும் எவ்வாறு இந்தச் சிலைகளை தொழில் நுட்பத்தோடு செய்தனரா? என்ற கேள்விகள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

கேள்விக்கு பதில் தேடும் விதமாக, அத்தீவில் தொல்பொருள், தாவரவியல் ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அதிக மரங்களும், உயிரினங்களும் அத் தீவில் இருந்தன என்பதைக் கண்டறிந்தனர். புவியைத் தோண்டி ஆராய்ந்தபோது, நிறைய விதைகள், பறவைகள் மற்றும் வேறு பல உயிரினங்களின் எச்சங்களும், தொன்மங்களும் கிடைத்தன.

இவையெல்லாவற்றையும் விட உருளை வடிவிலான மரம் ஒன்றின் விதையும் கிடைத்தது. இன்று அம்மரம் இவ்வுலகில் இல்லை. அவற்றின் வழித் தோன்றலான, சில மரங்களும், அம்மரத்தின் குடும்ப மரங்களும் உள்ளன. எவ்வாறு உருளை மரம் காணாமல் போனது? பல வகை உயிரினங்கள் என்ன ஆகின என்பது விஞ்ஞானிகளுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியை அளித்துள்ளது. பல்வேறு ஆய்வு முடிவுகளை மேற்கொண்ட பின், சில உண்மைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். ஈஸ்டர் தீவு பழங்குடியினர் டொல்பின் மீன்களை விரும்பி உண்டனர். கடலின் ஆழப்பகுதியில்தான் டொல்பின்கள் கிடைக்கும். ஆழப்பகுதியில் மீன் பிடிப்பதற்காக உருளை மரங்களை வெட்டி, கட்டு மரம் செய்வதற்கு பயன்படுத்தினர். டொல்பின் கறி சுவை காரணமாக, அதிகமான கட்டுமரங்கள் செய்தனர். அதிகமான கட்டுமரங்கள் தேவைப்பட்டதால், நிறைய மரங்களை வெட்டினர்.

நாகரிகத்தின் உச்சமாக கலைகள் வளர ஆரம்பித்தன. ஈஸ்டர் தீவு மக்கள் சிற்பக் கலையில் கை தேர்ந்து விளங்கினர். அவர்கள் மிகவும் பிரம்மாண்டமான சிலைகளைச் செய்தனர். அவர்கள் செய்த சிலைகளின் எடை 200 தொன்னிற்கும் மேலாக இருந்தது. சிலைகளை தீவின் எல்லையோரங்களில் நிறுவினர். சிலைகளை [illegible] செல்வதற்கு அவர்கள் உருளை மரங்களை வெட்ட ஆரம்பித்தனர். மனித பேராசை காரணமாக, அளவு தெரியாமல் உருளை மரங்களை வெட்டினர். உருளை மரங்கள் மீண்டும் இனப்பெருக்கம் செய்து பெருக முடியாத அளவிற்கு வெட்டிச் சாய்த்தனர். அத்தீவில், ஒரு கால கட்டத்தில் உருளை மரங்களே இல்லாமல் போனது.

உருளை மரங்கள் அழிந்தபின், அத்தீவில் இருந்த ஆறு பறவை இனங்கள் அழிந்து போயின. அவை அழிந்த பின் தான் தெரிந்தது; அப்பறவை இனங்கள் அனைத்தும் உருளை மரங்களைச் சார்ந்து இருந்தவை. பறவை இனங்கள் அழிந்தபின், தீவில் இருந்த தாவரங்கள் எல்லாம் அழிந்துவிட்டன. பறவைகள் உண்டு போட்ட பழத்தில் இருந்த விதைகளினால் தான், பெரும்பாலான செடி, கொடிகள் மற்றும் தாவரங்கள் வளர்ந்தன. தாவரங்கள் இனப் பெருக்கத்திற்கு காரணமான, பறவை இனங்கள் அழிந்ததால் அனைத்து தாவரங்களும் அழிய ஆரம்பித்தன. தாவர இனங்களை நம்பி வாழ்ந்த அனைத்து உயிரினங்களும் அழிய ஆரம்பித்தன.

உருளை மரங்கள் இல்லாததால், பழங்குடியின மக்களால் டொல்பின்களை வேட்டையாட முடியவில்லை. தாவரங்களும் மற்ற அனைத்து பயிர் வகைகளும் அழிந்ததால், உணவு உற்பத்தியே இல்லாமல் போனது. உணவு தட்டுப்பாடு நிலவியது. இதையடுத்து ஏற்பட்ட பசி, பட்டினியாலும், உணவிற்கு ஏற்பட்ட சண்டையாலும் மக்கள் அதிகமானோர் இறந்தனர்.

இங்கு ஒரு உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உருளை மரங்களை பழங்குடியின மக்கள் உணவிற்காகப் பயன்படுத்தவில்லை. உணவிற்காக பயன்படாத ஒரு மரத்தை வெட்டியதாலே, ஒரு தீவில் மனித இனம் அழிந்தது. நாம் இன்று வாழும் வாழ்க்கையால், எவ்வளவு மரங்களை அழித்து கொண்டிருக்கின்றோம், அதன் மூலம் எவ்வளவு பிரச்சினைகள் வரும் என்பதை உணர்த்துவதற்காக, பகிர்ந்து கொள்ளப்பட்டது.

## சுமந்த நினைவுகள்

செல்வா

தோளில் சுமந்த
நினைவுகள் தான்
இறக்கி வைத்த பின்னும்
வருகிறது.
வரிசைப்படி
அணிவகுத்து நின்ற
நாள்களில்
கைகொடுத்த உறவுகள்
அணி குழைந்த பின்
கைவிட்டது.
வாழ்ந்ததுக்கான
இருப்பிடம் இல்லை,
இறந்ததுக்கான
அடையாளமும் இல்லை,
முள்ளிவாய்க்காலில்
எல்லோரையும்
புதைத்திருக்கலாம்
புனர்வாழ்வளிக்கப்பட்டு
விட்டதாக
கூறும் அரசு
எம்மை
புலம்பெயர
வைக்கிறது.
துரோகத்தனங்களும்
போர் வரைமுறைக்கு
மீறிய செயல்களும்
நியாயத்தை
குழி தோண்டிப்
புதைத்தது. விடுதலை
அடைந்து விட்டோம்
அடிமைகளாக
இருந்து கொண்டும்
குரல் மேலெழும்பி
ஒலிக்கிறது.
நாங்கள்
வாழ்ந்த இடங்கள்
பயன்படுத்திய
போர்த் தளபாடங்கள்
பார்வைக்காக்
விடப்பட்டுள்ளன.
எங்களைப் பார்க்க
ஒருவரும் இல்லை.



## இன்னும் என்னடா விளையாட்டு



இழந்த உயிர்களோ
கணக்கில்லை
இருமிச் சாவதில்
சிறப்பில்லை
இன்னும் என்னடா
விளையாட்டு
எதிரி நரம்பிலே
கொடியேற்று.
வீரத்தைக் குண்டுகள்
துளைக்காது
வீரனைச் சரித்திரம்
புதைக்காது
நாட்டை நினைக்கும்
நெஞ்சங்கள்
வாடகை மூச்சில்
வாழாது.!

அறிவுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சத்தியம்' சார்ந்த நம்பிக்கைகள்

கழனியூரான்

இன்றும் நீதிமன்ற நடைமுறை சாட்சிகளிடமும் சரி வழக்கு சம்பந்தப்பட்டவாதி: பிரதிவாதி ' போன்றவர்களிடமும் சரி அவர்கள் கூண்டில் ஏறியதும் , 'நான் சொல்வதெல்லாம் உண்மை.உண்மையைத்தவிர வேறொன்றும் இல்லை ' என்று வேதப் புத்தகத்தின் மேல் கையை வைத்துச் சொல்லச் சொல்கிறார்கள்.

'சத்தியம் என்ற சொல்லின் மேல் கிராமத்து மக்கள் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். 'கள்ளச்சத்தியம் பண்ணினா கண்ணு அவிஞ்சிபோயிடும்' என்று நம்புகிறார்கள்.

' நீ அந்தப்பொருளை எடுத்தியா?'

'இல்லை நான் எடுக்கலியே!'

'பொய் சொல்லாமச் சொல்லு'

' சத்தியமா நான் எடுக்கலை'

இப்படி இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இரண்டாவதாகச் சொன்னவன் ' சத்தியமா' என்று சொன்னதும் பேச்சு முடிந்து விடுகிறது.அதற்கு பிறகு வார்த்தையாட வழி இல்லை .

'முழுகி, கோயிலுக்கு வந்து சத்தியம் செய்துவிட்டு போயிடு, அதோட லாப நஷ்டத்தை ஆண்டவன் பார்ப்பான்' என்று கிராமத்தவர்கள் சொல்வதைக் கேட்கலாம்

சத்தியத்தில் தான் எத்தனை வகைகள் இருக் கின்றன?

தலைப்பிள்ளையின் தலையில் அடித்து சத்தியம் செய்வது; தன் தலையில் தானே அடித்து சத்தியம் செய்வது; நிறைமாத கர்ப்பிணியான பெண் தன் வயிற்றில் அடித்து சத்தியம் செய்வது, கண்ணில் அடித்து அல்லது தன் கண்களைத் தடவியபடி 'கண் ணாணை' என்று சொல்லி சத்தியம் செய்வது என்று எத்தனையோ விதங்களில் சத்தியம் செய்கிறார்கள்.

கண்களைத் தடவியபடி 'கண்ணாணை' என்று சத்தியம் செய்து அது பொய் என்றால் அப்படிச் சத்தியம் செய்தவன் கண்கள் அவிந்து விடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இத்தகைய வழக்கங்கள் சமூகத்தில் தோன்றி வளர்ந்து நிலை பெற்றிருக்கின்றன.

கோயில் வாசலில் சூடத்தைக் கொளுத்தி வைத்து சூடத்தை அணைத்து சத்தியம் செய்கிறார்கள்.

தான் பெற்ற பிள்ளை மேல் சத்தியம் செய்வதை யாரும் விரும்புவதில்லை! சில நேரம் சத்தியம் செய்யச் சொல்கிறவன் தலையில் அடித்து 'உன்தலைச் சத்தியமா நான் அந்தக் காரியத்தைச் செய்யலை!' என்று சொல்லி சத்தியம் செய்வதும் உண்டு.

சிலர் சத்தியத்தை நினைத்து கவலைப்படாமலும் இருந்திருக்கிறார்கள். 'அடேயப்பா அவனுக்கு சத்தியம் சர்க்கரைப் பொங்கலா' என்று அப்படிப்பட்டவர்களைப் பார்த்துக் கிராமத்து மக்கள் கூறுகின்றார்கள்.

அடிக்கடி பொய் சொல்கிறவர்களை இனங் காட்டுவதற்காக, கிராமத்து மக்கள் 'ஆனைப்புழுகன் , வீரப்புழுகன், அண்டப்புழுகன், ஆகாசப்புழுகன் 'புழுகுணிக்கருப்பாயி' என்பன போன்ற அடைமொழிகளால் அவர்களை அழைக்கிறார்கள்.

பொதுவாக, பாமர மக்கள் சத்தியம் செய்ய பயப்படுகிறார்கள் . தயங்குகிறார்கள்.

சிலர், சத்தியம் செய்யும் போதோ சொல்புரட்டு செய்வார்கள் , 'சத்தியமா நான்செய்யலை! ' என்று சொல்வதற்குப் பதில் வேகமாக 'சத்திரமா நான் செய்யலை!' என்று சொல்லி விடுவார்கள்.

சத்தியம் - சத்திரம் என்ற சொற்கள் ஒத்த ஓசை உடையன. எனவே வேகமாக உச்சரிக்கும் போது கூர்ந்து கவனித்தால் அன்றி வித்தியாசம் கண்டு பிடிக்கமுடியாது. சிலர் 'அசத்தியம் ' என்பார்கள் 'அ' என்ற எழுத்தை மனசுக்குள்ளேயே உச்சரித்துக் கொள்வார்கள் .

திருட்டுத்தனம் செய்தவர்கள் அதை மறைப் பதற்காக கள்ளச் சத்தியம் செய்வதுண்டு. பலர் முன் னிலையில் சத்தியம் செய்யவேண்டும். ஆனால் சத்திய தோஷம் தனக்கோ தன்பிள்ளைகளுக்கோ வந்து விடக்கூடாது என்று நினைத்த சிலர் சில தந்திரங் களைக் கையாண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொல்லலாம்.

ஒருவன் குற்றம் செய்துவிட்டான்; மாட்டிக் கொண்டான் ; சாட்சியில்லை எனவே மறுக்கிறான் . இப்போது ஊர் பெரியவர் 'இந்தக்குற்றத்தை என் தலைமேல் சத்தியமா நான் செய்யலை' என்று உன் தலையில் அடித்து சத்தியம் செய்துவிட்டு போ ' என்று கூறுகிறார்.

உடனே , குற்றம்செய்தவன் பலர் முன்னிலையில் தன் தலையில் அடித்து சத்தியம் செய்துவிட்டு வீட்டுக்குப் போய்விடுகிறான்.

வீட்டிற்கு போனதும் தன் தலையில் கட்டி இருந்த தலைப்பாகையை அவிழ்த்து அதற்குள் இருந்த 'ரொட்டி' யை எடுத்து தூரப் போட்டு விடுகிறான்.

இப்போது , 'ரொட்டியின் மேல் அடித்து தானே , நாம் சத்தியம் செய்திருக்கிறோம்' என்ற மன ஆறுதல் சத்தியம் செய்தவனுக்கு கிடைக்கிறது. ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒத்த ஒரு பிள்ளை வைத்திருப்பவர்களைப் பார்த்து. 'உன்பிள்ளை தலையில் கை வைத்து நான் இந்த ஒன்றையும் தின்று தண்ணி குடிப்பேன் என்று' சொல்லு பார்ப்போம்!' என்பார்கள் சத்தியத்தில் இதுவும் ஒருவகை

ஒரு பெண்ணுக்கு இப்படி ஒரு நிலை ஏற்படுகிறது. அதை எதிர்பார்த்த அந்தப் பெண் தன் ஒரு பிள்ளையின் தலைக்கு மேலே ஒரு ரொட்டியை வைத்து அதன் மேல் ஒரு தொப்பியைப்போட்டு ஊர் மக்களுக்கு முன் கூட்டிக்கிட்டு வந்திருக்கிறாள்.

அவள் எதிர்பார்த்தபடியே ஊர் பெரியவர் சொல்லவும், அவள், பிள்ளையின் தலை மேல் கை வைத்து பலர் முன்னிலையில் 'நான் அந்தக்காரியத்தைச் செய் திருந்தால் இந்த ஒன்றையும் தின்று தண்ணீர் குடிக்கிறேன்' என்று சத்தியம் செய்துவிட்டு வீட்டிற்குப் போய் தன் மகனின் தொப்பியின் கீழே இருந்த ரொட்டியை எடுத்து தின்று தண்ணியையும் குடித்தாளாம். .

இப்படி சத்தியம் செய்ய நாடகம் நடித்தவர்களின் கதைகள் பலவும் நாட்டுப்புறத்தில் நிலவுகின்றன.

நிறைமாத கர்ப்பிணியான பெண் ஒருத்தியை 'உன் வயிற்றில் இருக்கும் பிள்ளையின் மேல் அதாவது வயிற்றில் அடித்து சத்தியம் செய் என்று சொன்ன போது அவள் தன்மடியில் ரொட்டியைக் கட்டிக்கொண்டு வந்து அதன் மேல் அடித்துச் சத்தியம் செய்ததாகவும் ஒரு கதை உண்டு .

சட்டத்தை ஒருவன் உருவாக்குகிறான். அதில் நுழைந்து அதில் ஏதாவது ஓட்டை இருக்கிறதா என்பதை இன்னொருவன் கண்டுபிடிக்கிறான்.

இப்படி சத்தியம் செய்வது போல நடிப்பவர்களின் காரியமும் ஒரு நாள் வெட்ட வெளிச்சத்திற்கு வந்து விடுகிறது. எனவே தான் , தலையில் அடித்து சத்தியம் பண்ணும் போது தலையில் தொப்பிபோட்டுக் கொள்ளவோ தலைப்பாகை கட்டிக்கொள்ளவோ கூடாது என்று பின்னாளில் தலையில் அடித்து சத்தியம் செய்வதற்கான விதி முறைகளை வகுக்கிறார்கள்.

பெற்றோர்கள் மீது, மனைவி, மக்கள் மேல், தெய்வசாட்சியாக, தான் கற்ற கல்வியின்மேல், [ஏடு அல்லது புத்தகத்தின் மேல், கைவைத்து சத்தியம் செய்வது] வீடு, வாசல், நிலம் போன்ற விலைமதிப்புள்ள பொருள் மேல் சத்தியம் வாங்குகிறார்கள்.


பொய்யாக சத்தியம் செய்தால் எதன்மேல் கைவைத்து சத்தியம் செய்கிறோமோ அது தங்காது என்று நாட்டுப் புறத்து மக்கள் நம்புகிறார்கள்.

சத்தியம், உண்மைசொல், ஆணை போன்ற சொற்கள் கிராமத்து மக்களின் வழக்கம் இன்றும் உள்ளன.

பலர் முன்னிலையில் சத்தியம் செய்தவர்கள் அந்த தோஷம் கழிவதற்காக , வீட்டிற்குள் நுழையும் முன் படிவாசலில் நின்றுகொண்டு, 'முக்காலும் மூணுதரம் ஆணைஅழித்தேன்' என்று சொல்லிவிட்டுத்தான் வீட்டிற் குள் நுழைவார்கள். இப்படிச் சொல்வதால் சத்தியம் செய்த பாவம் தீர்ந்துவிடும் என்றும் நாட்டுப்புறத்து மக்கள் நம்புகிறார்கள்.



# இயன் மருத்துவம்...



02

(கடந்த வாரத் தொடர்ச்சி)

மூளை முடக்குவாதம், வளர்ச்சிப்படி நிலை பிந்துதல் (Development delay), Spina bifida, கழுத்துத் திருகு(torticolis), வளைந்த பாதம், வழமைக்கு மாறான நிலைக் கால்கள் (Club foot, bow less, Varum Valgus deformities) நரம்புத் தொகுதி, தசைத் தொகுதி, என்புத் தொகுதியில் காணப்படும் பிரச்சினைகள் என்பன இங்கு கையாளப்படுகின்றன. இந்தத் துறையின் சிகிச்சை முறையானது மா, நுண் இயக்கத் திறன்களை (gross & fine motor skills) விருத்தி செய்தல், சமனிலை, ஒருங்கிசைவு பயிற்சிகள், வலுவூட்டற் பயிற்சிகள், சகிப்புத் தன்மை (endurance) போன்ற பல பரிணாமங்களை உடையது.

மகப்பேறு தொடர்பில் இயன் மருத்துவமானது முக்கிய பங்காற்றுகிறது. மகப்பேற்றிற்கு முன்னரான நிலைமையும், பின்னரான நிலைமையும் இதில் கருத்தில் எடுக்கப்படும். உடல் இருக்கை நிலை சரிப்படுத்தல்(Posture Correction), மகப்பேற்றை இலகுவாக்குவதற்கான பயிற்சிகள், தசைகளின் வலுவூட்டல் பயிற்சிகள்(pdvic floor strengthening exercises) அடிக்கடி சிறுநீர் கழிப்பதற்கான பயிற்சிகள்(Urinary incontinance) ஒஸ்ரியோ பொறோசிஸ் நோய்நிலை தடுப்பு, இடுப்பு தசைகளில் ஏற்படும் நோ, வீக்கம் என்பவற்றை குறைத்தல், மகப்பேற்றின் முன்னும் பின்னும் செய்ய வேண்டிய விசேட பயிற்சிகள், மகப்பேற்றின் போது தசைகளில் ஏற்படும் பாதிப்புக்களின் முகாமை என்பன இந்தத் துறை மூலம் கையாளப்படுகின்றது.

அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் இயன் மருத்துவமானது அத்தியாவசிய தேவை உடையதாக காணப்படுகிறது. சுவாசப்பை, சுவாசக்குழாயை தடங்கல் இன்றியதாக்குதல் (Lungs Claring) ஆழ்நாளக் குருதியடைப்பு (DVT)வராமல் தடுத்தல், மூட்டு, தசைகளின் இயல்புகளை சீராகப் பேணுதல் என்பன அவற்றில் சிலவாகும். காது தொடர்பான சில பிரச்சினைகளிலும்(Frontal & Maxillary Sinus) தோல் சம்பந்தமான சில பிரச்சினைகளிலும் உதாரணமாக வெண்குஷ்டத்திலும் இயன் மருத்துவத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத் துறையில் இயன் மருத்துவமானது, எமது நாட்டில் இன்னமும் விருத்தியடையாத நிலையிலேயே காணப்படுகிறது. ஏனைய நாடுகளில் ஒவ்வொரு விளையாட்டுக் குழுவுக்கும் ஏன் சில வேளைகளில் தனி நபருக்கும், குறைந்தது ஒரு இயன் மருத்துவராவது இருப்பார். விளையாட்டு வீரரின் திறமை, சகிப்புத் தன்மை (Performance & endurance) என்பவற்றை அதிகரிக்க விளையாட்டின் ஆரம்பத்தில், இறுதியில் செய்ய வேண்டிய பயிற்சிகள், பயன்படுத்த வேண்டிய நுட்பங்கள் உடலில் இருந்து செலவாகும் சக்தியையும் களைப்பையும் குறைக்கப் பயன்படுத்தும் நுட்பங்கள், காயங்கள் வராமல் தடுப்பதற்குரிய நுட்பங்கள் என்பவை இயன் மருத்துவரால் வீரர்களுக்கு பயிற்றுவிக்கப்படும். மேலும் காயங்கள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை முகாமை செய்து உடனடியாகவோ அல்லது முடியுமானவரை விரைவாகவோ மீண்டும் வீரரை மைதானத்துக்கு அனுப்ப வேண்டிய கடப்பாடு இயன்மருத்துவருக்கு உண்டு.

மேலே இயன்மருத்துவத்தின் முக்கியமான சில துறைகள் அலசப்பட்டுள்ளன. இவற்றில் சிகிச்சை முறைகள் எவையும் விரிவாக ஆராயப்படவில்லை. அவை பொதுவாகவே கூறப்பட்டுள்ளன. ஆக மொத்தத்தில் இயன் மருத்துவமானது பல்வேறு நன்மைகளை அள்ளி வழங்கும் மருந்தில்லா மருத்துவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் வெற்றி

ஒரு வயதான பாட்டியும் தாத்தாவும் ஒரு பூங்காவிலே உட்கார்ந்து கதைத்துக் கொண்டு இருந்தார்கள்.

அவர்களுக்கு கல்யாணம் ஆகி 53 வருடம் ஆகிவிட்டது. பிள்ளைகளெல்லாம் படிச்சு பெரிய பெரிய வேலைகளில் இருக்கிறார்கள்.

பேரன் பேத்திகளும் நல்ல நிலையிலேயே இருக்கிறார்கள். இந்த தாத்தாவும் பாட்டியும் சிரித்து கதைத்துக் கொண்டு இருப்பதை ஒரு பெரியவர் ( சுவாமி சின்மயானந்தர்) பார்த்தார். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

"இந்த வயசிலேயும்இவ்வளவு அந்நியோன்யமாக கதைத்துக் கொண்டு இருக்கிறார்களே..." நேரிலேயே போய்க் கேட்டிடுவோம்" என்று நினைத்து அவர்கள் பக்கம் சென்றார்.

"உங்கள் மணவாழ்க்கையின் வெற்றிக்கான ரகசியம் என்ன?"என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் அந்தத் தாத்தா சிரித்துக் கொண்டே பாட்டியைப் பார்த்தார். அதற்குப் பிறகு சொன்னார்:

"நான் இந்த அம்மாவை கல்யாணம் செய்ததற்கும் எங்களுடைய இல்லவாழ்க்கை இவ்வளவு நாளாக பலம் குறையாமல் மகிழ்ச்சியாக இருக்கிறதுக்கும் காரணம் ஒன்றுதான்! அது என்ன காரணம்-என்றால் எங்களிடையே பொதுவாக நிறைய குறைகள் உண்டு-என்பதுதான் அது!-என்றார்.

அவர் சொல்வது சரிதான்-என்கிற மாதிரியே அந்தப்பாட்டியும் அவரை நிமிர்ந்து பார்த்தார்!

இந்தப் பெரியவர் மறுபடியும் அந்தப் பாட்டியைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டார்:

"உங்களுடைய நீண்ட கால மணவாழ்க்கைக்குக் கிடைத்த வெற்றி எதனால் என்று சொல்ல முடியுமா?"- என்று கேட்டார்.

அவர்களும் சிரித்துக் கொண்டு பதில் சொன்னார்கள்! என்ன பதில் தெரியுமா?

"சில பேரை நாம் குறிப்பிட்ட பண்புகளுக்காக நேசிக்கிறோம். வேறு சிலரை அந்தப் பண்புகள் இல்லாத காரணத்துக்காகவே விரும்பிப் பழகுகிறோம்! " அதேபோல்தான் நாமும் பழகுகிறோம்.

அவர்கள் அப்படிச் சொன்னதைக் கேட்டதும் இவருக்கு புதியதோர் ஞானம் பிறந்த உணர்வு உண்டானது.

இதுதான் மனம் நிறைந்த மணவாழ்க்கை. என்று சொல்கிறார் சுவாமி சின்மயானந்தர்.

பண்புகளை எப்படி நேசிக்க முடியாதோ அதே மாதிரி பண்புகள் இல்லாத குணங்களையும் நேசிக்க முடியும். மனம் தான் காரணம். ஒரு மேல் நாட்டுத் தம்பதி. அவர்களும் தாத்தா-பாட்டி தான்.

அவர்கள் இரண்டு பேரும் ஒரு பூங்காவிலே உட்கார்ந்து கதைத்துக் கொண்டு இருந்தார்கள்.

அதை ஒருவர் பார்த்தார் அவருக்கு ஆச்சரியம்.

இவ்வளவு காலம் ஆகியும் இந்த வயதிலேயும் இவ்வளவு அன்பா கதைத்துக் கொண்டு இருக்கிறார்களே என்று கிட்டே நெருங்கிப் போனார். கேட்டார்.

ஏன் தாத்தா... உங்களுக்கு கல்யாணம் ஆகி எவ்வளவு வருடம் ஆகி விட்டது என்று கேட்டார்.

"55 வருடம் ஆகிவிட்டது!"-என்றார் அவர்.

"இன்னமும் சந்தோஷமா இருக்கிறீர்களே அதுக்கு என்ன காரணம்?-"என்று கேட்டார்.

"அதற்கு என்ன காரணம் என்றால் இதுவரைக்கும் எங்களுக்குள்ளே சண்டையே வந்ததில்லே"-என்றார்.

"அது எப்படி" என்று ஆச்சரியமாக கேட்டார்!

"எங்களுக்கு கல்யாணம் ஆன புதிதிலே நானும் என் மனைவியும் ஒரு குதிரை மேல் ஏறி ஒரு காட்டு வழியாக போய்க் கொண்டிருந்தோம். கொஞ்சத் தூரம் போனதும் அந்தக் குதிரை போக மறுத்தது. நான் உடனே கீழே இறங்கி அந்தக் குதிரையைப் பார்த்து "இது உனக்கு முதல் தடவை !" அப்பிடி என்று மிரட்டலாக சொல்லி விட்டு ஏறி உட்கார்ந்தேன் . கொஞ்சத் தூரம் குதிரை நல்லபடியா நடந்து போனது! மறுபடியும் போக மறுத்தது.


நான் கீழே இறங்கினேன். கையிலே இருந்த சாட்டையாலே ஓங்கி ஒரு அடி கொடுத்தேன்... "இது உனக்கு இரண்டாவது தடவை!" என்று சொல்லிவிட்டு ஏறி உட்கார்ந்தேன் .

மறுபடியும் குதிரைகொஞ்சத் தூரம் நல்ல விதமாக நடந்து போனது. அதற்குப் பிறகு மீண்டும் போக மறுத்தது...

அந்த சமயம் ஆற்றுப் பாலத்திலே கடந்து போய்க் கொண்டிருந் தோம். நான் கீழே இறங்கினேன். என் மனைவியையும் கீழே இறங்கச் சொன்னேன். அந்தக் குதிரையைப் ஆற்றிலே தள்ளி விட்டு "இது உனக்கு கடைசித் தடவை!" என்று சொன்னேன்.

அதைப் பார்த்ததும் என் மனைவி பதறிப்போய்.. உங்களுக்கு மனசில கொஞ்சம் கூட இரக்கமே இல்லையா?" என்றார்.

நான் மெதுவா திரும்பி..."இது உனக்கு முதல் தடவை!" என்று சொன்னேன். அவ்வளவு தான். அன்றையிலிருந்து இன்றைய வரைக்கும் ஒருநாள் கூட எங்களுக்குள்ளே சண்டையே வந்ததில்லை!" என்றார் அந்தத் தாத்தா!



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வாசகர் திருமுகம்

## வரண்ட பகுதி அபிவிருத்திக்கு குளிர்ந்த பகுதியில் ஆராய்வு

ஒரு புறம் வடக்கின் வசந்தம் என்ற தொனிப் பொருளில் பல்வேறு திட்டங்கள் வடபகுதியில் முன்னெடுக்கப்படுகின்றன. மறுபுறம் வட பகுதி மக்கள் வறட்சியின் கொடுமை தாங்க முடியாது தவிக்கின்றனர். நீர் நிலைகள் வற்றியதால் பல இடங்களில் மக்கள் குடிதண்ணீர் தேடி அலைகின்றனர். இந்த நிலையில் வட பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் வறண்ட வடமாகாணத்தைத் தவிர்த்து இதமான மேல் மாகாணத்தின் பத்தரமுல்லையில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநரின் பணிமனையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது வட பகுதி மக்களுக்கு வியப்பையும் வேதனையையும் கொடுத்த தவறான நிர்வாக முறையாகும்.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கியவர் வடமாகாணத்தின் ஆளுநர் ஆவார். ஆளுநரின் செயலாளர், பிரதம செயலாளர் அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். செயலாளர்களுடன் பிரதி/ உதவிச் செயலாளர் சென்றிருப்பர். அவ்வாறே திணைக்களத் தலைவர்களுடனும் பொறுப்பான உதவி அதிகாரிகள் என ஏறக்குறைய நூற்றுக் கணக்கான அதிகாரிகள் வட பகுதியில் இருந்து கொழும்புக்கு சென்றிருப்பார்கள். செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் தனித் தனியே வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தத்தமது வாகனங்களிலேயே சென்றிருப்பார்கள். வாகனங்கள் பத்தரமுல்ல சென்று திரும்புவதற்கான எரிபொருள் செலவு, வாகனங்களின் தேய்மானச் செலவு ஆகியவற்றைக் கணக்கிட்டால் அது பல இலட்சம் ரூபாய்களைத் தாண்டும். கொழும்பு சென்று தங்கித் திரும்பியதற்கான அதிகாரிகளதும் சாரதிகளதும் மேலதிக வாழ்க்கைப் படியாக பல ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

முழுக்க முழுக்க வடபகுதியைப் பற்றியதும், முழுக்க முழுக்க வடபகுதி அதிகாரிகள் கலந்து கொண்டதுமான இந்தக் கலந்துரையாடல் வடமாகாண ஆளுநரின் பிரதான பணிமனை அமைந்துள்ள யாழ்ப்பாணத்திலேயே நடந்திருக்க வேண்டும் . அவ்வாறில்லாமல் பத்தரமுல்லவில் நடத்தியதன் மூலம் அரச நிதி பல லட்சங்கள் வீண் விரயம் செய்யப்பட்டுள்ளமை வெள்ளிடைமலை. உரிய முறையில் இதனை வட பகுதியில் நடத்தி இருந்தால் நேரமும், நிதியும் காப்பாற்றப்பட்டிருக்கும்.

இது போன்ற நிர்வாகத் தவறுகள் இனி மேலாவது நிகழாமல் பார்த்துக் கொள்வது சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் தலையாய கடமை ஆகும். செய்வார்களா ?

மு. தர்மலிங்கம்

## கொடிகாமம்– பருத்தித்துறை வீதியை புனரமைப்பார்களா

பருத்தித்துறை - கொடிகாமம் வீதி மிக நீண்டகாலமாக சரியான முறையில் திருத்தப் படாமல் இருக்கிறது.

கொடிகாமத்திலிருந்து முள்ளிச்சந்தி பகுதி வரைக்கும் வீதியில் உள்ள பள்ளங்கள் அனைத்திற்கும் தார் ஊற்றப்பட்டுள்ள போதும் முள்ளிப்பகுதியில் உள்ள பாலங்கள் அனைத்தும் சேதமடைந்தே காணப்படுகின்றன. வடமராட்சி பகுதிக்கு மிக விரைவாகவும் குறைந்த செலவிலும் பொருள்களை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கும் இந்தப் பாதை பயன்படுகின்றது. வடமராட்சி பகுதியிலிருந்து அரச தனியார்துறை ஊழியர்கள் வெளிமாவட்டங்களுக்கு நாளாந்தம் இந்த வீதியூடாகவே பயணிக்கிறார்கள்.

எனவே இந்த வீதியை காப்பற் வீதியாக மாற்றுவதன் மூலம் இந்த வீதியுடனான ப்யணத்தை இலகுபடுத்த முடியும். வீதி புனரமைப்பு நடைபெற்று வரும்போது இந்த வீதி புனரமைக்காது கைவிடப்பட்ட நிலையில் இருப்பதால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எமது பிரதேச தலைவர்கள் மழைகாலம் தொடங்கும் முன் இந்த வீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் கேட்டுள்ளனர்.

பி.பத்மன்
பருத்தித்துறை

## திருட்டை ஒழிக்க இளைஞர்களே முன்வாருங்கள்

யாழ்ப்பாண பத்திரிகைகளில் இப்போது கூடுதலாக வாசிக்கக் கூடிய செய்திகளில் ஒன்று திருட்டு, கொள்ளை சம்பவங்கள் ஆகும். தமிழ் மக்களால் தெய்வங்களாக வணங்கப்படும் ஆலய விக்கிரகங்களைக் கூட இந்தத் திருட்டுப் பேர்வழிகள் விட்டு வைக்கவில்லை என்பது மிகவும் மனவேதனைதரும் விடயமாகும். இரவானதும் மக்கள் அச்சத்திலேயே வாழ்கின்றனர்.

திருட்டுகளைத் தடுக்க இன்றைய இளைஞர்கள் முன்வரவேண்டும். ஒவ்வொரு கிராமஅலுவலர் பிரிவிலும் குறைந்தது 10 பேர் உள்ளடங்கலாக விழிப்புக்குழு ஒன்றை அமைத்து இரவில் காவல் கடமையில் ஈடுபட்டால் மக்கள் நிம்மதியாகத் தூங்கமுடியும்.

இளைஞர்கள் எத்தனையோ துன்ப துயரங்களை சுமந்து வாழ்ந்தவர்கள் வாழத்தெரிந்தவர்கள். திருட்டுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தி படைத்த இளைஞர்கள் எம்மோடு வாழ்கின்றனர்.

எனவே இளைஞர்களே ஒன்றுபடுவோம். திருட்டுகள், கொலை, கொள்ளை போன்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்போம். தற்போது வெடியோசை கேட்காத எமது தாய் மண்ணிலே சகலரும் நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ வழி செய்வோம். திருட்டுப்பேர் வழிகளை இனங்காண்போம். சட்டத்தின்முன் நீதி தேவதை முன் அவர்களை முன் நிறுத்தி தண்டனையைப் பெற்றுக் கொடுப்போம்.

எதிர்காலத்தில் திருடர்கள் என்ற அச்ச உணர்வு இல்லாமல் நாம் வாழ்வது இளைஞர்கள் ஆகிய உங்கள் கரங்களில் தான் உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள். இன்றே எழுவோம் செயலில் இறங்கி எமது அப்பாவி மக்களை வாழ வைப்போம்.

போரினால் தமது சொத்துக்களை பறிகொடுத்து மீண்டும் சொத்துக்களை சேர்ப்பதற்காக அயராது உழைத்து வருகின்ற வேளை யில் அந்த சொத்துக்களையும் திருடர்கள் திருடிச் செல்வதால் பெரும் வாழ்க்கைச் சுமைக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

எனவே விழிப்புக் குழு அமைப்பதன் ஊடாக திருட்டுக்களை தடுப்பதுடன் மக்களின் சொத்துக்களை பாதுகாப்பதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இளைஞர்கள் ஆகிய உங்களின் கைகளில் தான் இருக்கிறது.

மு.அருமைச்சந்திரன்
வடவரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தமிழ் தந்த
# மறைமலை அடிகள்



''தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து அறியாமை இருளில் உறங்கிய வேளை அந்த உறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகளையே சாரும். அவரது தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது அடிகளாரின் பேச்சு பல பேச்சாளர்களைப் படைத்தது; எழுத்து பல எழுத்தாளர்களை ஈன்றது; நூல் பல நூலாசிரியர்களை அளித்தது. அடிகளே தென்னாடு, தென்னாடே அடிகள்''

**இன்று அவரது 62 ஆவது நினைவு தினம்**

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே'' என்ற திருமூலர் வாக்கின் வழி நின்று தமிழ்த் தொண்டையும் சிவத் தொண்டையும் வாழ்க்கையின் குறிகோள்களாகக் கொண்டு வாழ்ந்தவர் மறைமலையடிகள். அறிவுச் சுடரான இவர் ''தமிழே சிவமாகவும் சிவமே தமிழாகவும் வாழ்ந்தவர்.'' தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து அறியாமை இருளில் உறங்கிய வேளை அந்த உறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகளையே சாரும்.

அவரது தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை விழிக்கச் செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது அடிகளாரின் பேச்சு பல பேச்சாளர்களைப் படைத்தது; எழுத்து பல எழுத்தாளர்களை ஈன்றது; நூல் பல நூலாசிரியர்களை அளித்தது. "அடிகளே தென்னாடு, தென்னாடே அடிகள்'', என்று பாராட்டும் அளவுக்கு அவர் பணி உயர்ந்தது.

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணியில் உள்ள நாகப்பட்டினத்துக்கு அருகே காடம்பாடியைச் சொந்த ஊராகக் கொண்ட சொக்கநாதபிள்ளை - சின்னம்மை தம்பதியருக்கு மகனாக 1876ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் திகதி மறைமலையடிகள் வந்துதித்தார்.

இவர் திருக்கழுக்குன்றத்து இறைவன் வேதகிரீசுவரர் அருளால் பிறந்ததால் அவருக்கு ''வேதாசலம்'' என்று பெயர் சூட்டப்பட்டது. இந்தப் பெயரையே பின்நாளில் தனித் தமிழில் ''மறைமலை'' என்று மாற்றிக்கொண்டார்.

இவர் நாகப்பட்டினத்தில் உள்ள வெசுலி மிஷன் கல்லூரி உயர்நிலைப் பாடசாலையில் தனது கல்வியைப் பயின்றார். ஒன்பதாம் வகுப்பு வரைதான் படித்தார். சிறு வயதில் தந்தையை இழந்தார். பின்னர் தாயாரின் வழிகாட்டுதலால் பல நூல்களைக் கற்று பேரறிவாளராகத் திகழ்ந்தார்.

மறைமலையடிகளின் தமிழ் அறிவுக்கு மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவராக இருந்த வெ.நாராயணசாமிப் பிள்ளையின் நட்பு பெரிதும் உதவியது.

மாதம்தோறும் ஐம்பது ரூபாய்க்கு புதிய நூல்களை வாங்கிப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் மறைமலையடிகள். இப்படி தானே ஒரு நூலகமாகவும், ஆராய்ச்சி மாணவர்களுக்குத் தன் வீட்டிலேயே நூலகம் ஒன்றையும் அமைத்துத் தந்தார். இதுவே பின்னாளில் ''மறைமலையடிகள் நூலகம்'' அமைய ஏதுவாகியது.

தனது மாமன் மகளான சௌந்தரவல்லியை மணமுடித்தார். நான்கு ஆண் பிள்ளைகளையும் மூன்று பெண் பிள்ளைகளையும் மக்கட் செல்வங்களாகப் பெற்றனர் அத்தம்பதியினர்.

மறைமலை அடிகள் மனோன்மணியம் எனும் காப்பியம் படைத்த சுந்தரம்பிள்ளையின் நூலிற்கு பாடல்களாலேயே நயவுரை எழுதி அனுப்பினார். சுந்தரம்பிள்ளையை அது மிகவும் கவர்ந்தது. அதன் காரணமாக உண்டான நட்பு மறைமலை அடிகளாரின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. திருவனந்தபுரத்தில் மார்த்தாண்டன் தம்பி என்பவரால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பள்ளியில் அடிகளுக்குச் சுந்தரம் பிள்ளை மூலம் தமிழாசிரியர் பணி கிடைத்தது. ஆனால், சில காலம் பணியாற்றிய பிறகு அதிலிருந்து விலகிவிட்டார்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாகச் செயல்பட்ட மறைமலையடிகள், சைவ சமயத்தின் கொள்கையில் அளவிட முடியாத ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். இலங்கைக்குச் சென்று பல முறை சைவ சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

1911இல் சென்னை அருகே உள்ள பல்லாவரத்தில் ''சமரச சன்மார்க்க நிலையத்தைத் தோற்றுவித்து சமயப் பணிகளைச் செய்துவந்தார்.

தமிழையும் சைவத்தையும் தமது இரு கண்களாகக் கருதினார் மறைமலையடிகள். முண்டகம், ஆரண்யகம், ஈசாவாசி, கேன, தைத்திரீயம், அதர்வசிகை, கைவல்யம், சாந்தோக்கியம், சுவேதாசுவதாரம் போன்ற உபநிடத நூல்களைக் கற்றதோடு மட்டுமன்றி ஆய்வு செய்து பல கட்டுரைகளும் எழுதினார்.

மூடப்பழக்க வழக்கங்களும், போலிச் சடங்குகளும் அறவே ஒழிய வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். உயிர்ப்பலியைக் [illegible] தோடு சமுதாயம் நன்னெறியில் உய்வதற்குச் சமய உணர்வு இன்றியமையாதது என்பதையும் தமது அசைக்க முடியாத கருத்தாகக் கொண்டிருந்தார்.

''சமய உணர்ச்சி சிலர் மட்டும் விரும்பக்கூடிய அலங்காரப் பொருள் அன்று. மக்களை விலங்கினின்று பிரித்து தெய்வமாக்குவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் சக்தியாகும்'' என சைவசமயத்தின் தற்கால நிலை, என்ற நூலில் சமய உணர்வின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

மறைமலையடிகள் பெரும்பாலும் எதிர்நீச்சல் அடித்தே வெற்றி கண்டவர். தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த போதும் கடுமையான கண்டனத்துக்கும், எதிர்ப்புக்கும் ஆளானார். தனித்து இயங்கக் கூடிய ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டு என்பதனாலேயே ''தனித்தமிழ்'' என்றார் அடிகளார். ஆனால் இதை எதிர்த்த சிலர், தனித்தமிழ் என்பது தனித்து அமிழ்கின்ற அதாவது மூழ்கிப் போகிற மொழி என்றே பொருள் தருவதாக உள்ளது. அப்படியென்றால் தமிழ் தனித்து செயலாற்றினால் மூழ்கிப் போய்விடுமா! என்று ஏளனம் செய்தனர். ஆனால் அடிகள் தன் சீரிய செயற்பாட்டினால் நகைத்தவரின் கூற்றுக்களைப் பொய்யாக்கிக் காட்டினார்.

அடிகள் சிறந்த இதழாளராகவும் விளங்கினார். இளமைப் பருவத்திலேயே செய்திகளைச் சேகரித்து'' நாகை நீலலோசினி'' என்ற நாளிதழுக்கு அளித்தார். பின்னாளில்'' ஞானசேகரம்'' என்ற இதழை அவரே நடத்தினார்.

சைவ சித்தாந்த நெறிமுறைகளை வெளிநாட்டவரும் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக; மிஸ்டிக் மைனா தி ஓரியண்டல் விஸ்டம் என்ற ஆங் கில இதழ்களையும் நடத்தினார். [illegible] விற்பனையாயின. 1897ஆம் ஆண்டு சே.எம்.நல்லாசாமிப் பிள்ளை என்பவர் தொடங்கிய ''சித்தாந்த தீபிகை'' என்ற தமிழ், ஆங்கில மொழிகளுக்கான இரண்டு இதழ்களிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

16 வயதிலேயே இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்து, தாம் எழுதிய நூல்களுக்கு ஆங்கிலத்திலும் முன்னுரை எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்த மறைமலையடிகள், ஐம்பத்தி ஆறு நூல்களை எழுதியுள்ளார். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்றுவதற்கு இவரே காரணமாக இருந்தார். தன் வாழ்நாளில் சேகரித்த நான்காயிரம் நூல்களைக் கொண்டு ''மணிமொழி நூல் நிலையம்'' என்ற பெயரில் நூல் நிலையம் ஒன்றைத் தோற்றுவித்தார்.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை, தமிழர் மதம், பழந்தமிழ்க் கொள்கையே சைவம், சிறுவருக்கான செந்தமிழ் நூல், மாணிக்கவாசகர் காலமும், வரலாறும், மரணத்தின் பின் மனிதர் நிலை, தனித்தமிழ் மாட்சி, பண்டைக்காலத் தமிழரும், ஆரியரும் உரைமணிக் கோவை போன்ற 40க்கும் மேற்பட்ட சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார்.

சமயநெறி, இலக்கியத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எனக் கருதப்படுவோர் பின்தங்கியிருப்பதைக் கண்டு அவர்களை மாணவர்களாக ஏற்றுக் கொண்டார்.

தாழ்த்தப்பட்டவர்களைத் தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கக் கூடாது; ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் அவர்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்றெல்லாம் பேசி அவர்கள் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தார் மறைமலையடிகள்.

1937ல் இராஜாஜி முதல்வராக பதவி வகித்த போது உயர் நிலைப் பாடசாலைகளில் இந்தியை கட்டாயமாக்கினார். இதைக் கண்டு தமிழகம் வெகுண்டெழுந்தது. அப்போது இந்தியை எதிர்ப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டார் அடிகளார். எந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராய் இல்லாத, தமிழையே மூச்சாக கொண்ட அடிகள், இந்தி எதிர்ப்புத் தொடர்பான மறியலில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

தமிழ்மொழி சீர்கெட்டு சைவ நெறி தாழ்வுற்றிருந்த காலத்தில் வீறுகொண்ட ஞாயிறெனத் தோன்றி, தமிழுக்கும், சைவத்துக்கும் மிகுந்த பணியாற்றிய பெருமை அடிகளாரையே சாரும்.

வடமொழியை எதிர்க்காமல், வடமொழிக் கலப்பை எதிர்த்து, கடவுளை எதிர்க்காமல், கடவுள் வழிவந்த கற்பனைக் கதைகளை எதிர்த்து நடுநிலை தவறாமல், பிறழாமல் வாழ்ந்து காட்டிய அடிகளாரின் சித்தாந்தத்தை இன்றைய தலைமுறை கண்டிப்பாகத் தேடிப்பிடித்துப் படிப்பதும், அவர் நெறிமுறைகளைக் கடைபிடிப்பதும் மிகவும் அவசியம்.

மறைமலை என்றொரு மனிதன் மட்டும் தோன்றியிருக்காவிட்டால் இன்றைய தமிழின் வடிவம் எப்படி இருந்திருக்கும்? என்ற கேள்வியைக் கேட்க முடியாமல் செய்த அவரை தமிழ் உலகும், சைவ உலகும் என்றென்றும் போற்றிப் புகழும் என்பதில் ஐயமில்லை.

தங்க விளக்கே ஆனாலும் தூசி படிந்து மூலையில் கிடந்தால் அதன் அருமையை யாரால் அறிந்து கொள்ள முடியும்.

தங்கத் தமிழ் தீபத்தை பேச்சால், எழுத்தால் தூசி தட்டித் துடைத்து ஏற்றி வைத்தவர் மறைமலையடிகள் என்றால் அதில் இரண்டாவது கருத்துக்கே இடம் கிடையாது.

இப்போதைய நமது கடமை, அந்தத் தீபத்தை என்றென்றும் அணையாமல் பாதுகாப்பது தான். தமிழறிஞரைப் போற்றுவோம்; தமிழை வளர்ப்போம்; தமிழைக் காப்போம்; தமிழராக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org